2817

T.N.C.A Debates

Official Report

No 14293

VOL I

25, 27 Feb & 9th March } 1985

D
V211, 31 N85
N85.1.1-3
136362

வெளியீடு 8-7-85]

[Issued 8-7-85

2571 | ஆகா | 85

2817

29 அக் 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, பிப்ரவரி 25, 1985 - தொகுதி I எண் 1

Monday the 25th February 1985 - Volume I No 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்]

[Price Rs. 3-50 paise

D

V2ll, 31 N85

N85-1.1-3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136362
சென்னை-600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K V Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2572/ அதுர 2817

வெளியீடு 27-6-85] [Issued 27-6-85

29 அக் 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, பிப்ரவரி 27, 1985 - தொகுதி I எண் 2

Wednesday the 27th February 1985 - Volume I No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்.

27—2—1985.


| | பக்கங்கள் |
|---|---|
| 1. பேரவைத் தலைவர் தேர்தல் | 15—16 |
| 2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் | 16—17 |
| 3. பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள் | 17—4 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 17—27 |
| திரு. உ. சுப்பிரமணியன் | 27—30 |
| திரு. க. அன்பழகன் | 30—34 |
| திரு. ரு. ரமணி | 34—38 |
| திரு. ஆ. கா. அ. அப்துல்சமத் | 38—41 |
| திரு. ர. எஸ். ஏ. ஆறுமுகம் | 41 |
| திரு. பொ. உத்திரபதி | 41—43 |
| திரு. குமரி அனந்தன் | 43—47 |
| திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் | 47 |
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | 48—55 |
| 6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் | 56—61 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1985, பிப்ரவரி 27, புதன்கிழமை.**

**மாசி 16, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு, 2016.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு தற்காலிக பேரவைத் தலைவர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. ப. உ. சண்முகம்):** இன்றைய முதல் நிகழ்ச்சி ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் ஆகும்.

இங்குள்ளவர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டாகிவிட்டது என்று கருதுகிறேன்.

### 1. பேரவைத் தலைவர் தேர்தல்.

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திரு. ப. உ. சண்முகம்):**

அடுத்து பேரவையின் இன்றைய அலுவல், "அரசியலமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல்" ஆகும். அப் பதவிக்கு வேட்பாளரின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின், ஏழாவது விதி, உள்விதி 4-ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள், முன்மொழிந்தவர்கள், அதை வழிமொழிந்தவர்கள் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப் பெற்றவர்—திரு. பி. எச். பாண்டியன்.

முன்மொழிந்தவர்—மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்.

வழிமொழிந்தவர்—மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.

**ஆக** ஒரே உறுப்பினர் மட்டும் பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பதால், திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மிக்க மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன்.

இத்துடன் என்னுடைய அலுவல் முடிவடைகிறது. இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுக்களையும், சிறப்பான பேரவைத் தலைவர் என்று பெயர் எடுக்கின்ற நல்வாழ்த்துக்களையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, பேரவைத் தலைவர் அவர்களை பேரவை முன்னவரும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவரும் அழைத்து வந்து இந்த இருக்கையில் அமரச் செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் இருக்கையில் அமருவதற்கு வரும் நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் எழுந்து நின்று அவர்கள் அமர்ந்த பின் எல்லோரும் தங்கள் தங்கள் இடத்தில் அமர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[பேரவைத் தலைவர் அவர்களை அவை முன்னவர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்களும் அழைத்து வந்து அவரது இருக்கையில் அமரச் செய்தார்கள்] (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததற்கு முதற்கண் நன்றி சொல்லுகின்றேன்.

## 2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அடுத்த அலுவல் "பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்" ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத்தாள்கள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளன. பேரவையின் விதி 8. உள்விதி 2-ன்படி பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அவர்களின் விவரம் :





**நியமனம் செய்யப்பெற்றவர்—திரு. வேடசந்தூர் வி. பாலசுப்பிரமணியன்.**

முன்மொழிந்தவர்—திரு. க. இராசாராம்,

வழிமொழிந்தவர்—**மாண்புமிகு திரு. ச. இராமசசந்திரன்.**

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டு இருப்பதால் திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## 3. பேரவைத் தலைவருக்கும், பேரவைத் துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு கொண்ட, பெயரும் புகழுக்கும் உரிய சிறந்த மரபுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற இந்தத் தமிழக சட்டமன்றப் பேரவையின் தலைவராகத் தங்களையும், துணைத் தலைவராக மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களையும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கின்ற முறையில், இங்கே நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காகவும், ஒருமனதாகத் தேர்ந்தெடுப்பதிலே உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த அனைத்து உறுப்பினர் பெருமக்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும், போற்றுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவராகவும், பேரவையின் துணைத் தலைவராகவும் இந்தப் பேரவையிலே உள்ள உறுப்பினர்கள் அத்தனை பேராலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுவதே ஒரு நல்ல அறிகுறியாகும். ஏனென்றால் இந்தப் பேரவையிலுள்ள 234 உறுப்பினர்களின் ஒத்துழைப்போடும்,

ஆதரவோடும் இந்த அவையை நடத்திச் செல்லவேண்டிய பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கின்றது. அந்த வகையிலே இப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுவதற்காகவும் இந்தச் சூழ்நிலையை உருவாக்கித் தருவதிலும் முனைப்புள்ளத்தோடு இருந்த எதிர்க்கட்சி தரப்பைச் சார்ந்த கட்சிகளினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகிய அத்தனை பேரும் பாராட்டுதலுக்கு உரியவராவார்கள். ஆகவே இந்தப் பேரவையினுடைய தலைவர் பதவி என்பது ஒரு ஜனநாயக நாட்டிலே மிக முக்கியமான, பாராட்டுவதற்கும், போற்றுவதற்கும், புகழ்வதற்கும் உரிய ஈடு இணையற்ற பதவியாகும்.

நம்முடைய நாடு ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டு ஜனநாயகப் பண்புகளுக்கு இடம் தந்து ஜனநாயக முறைகளைக் கட்டிக் காப்பாற்றி வரவேண்டும் என்பதிலே முனைப்புள்ளத்தோடு இருந்து வெற்றிகரமாக நடைபோட்டு வருகின்றது என்பதிலே நாம் அனைவரும் மகிழ்ச்சியுற காரணம் இருக்கின்றது. உலகத்திலேயே 74 கோடி மக்கள் வாழ்கின்ற நாடு இந்தியா. உலக நாடுகளிலே மிகப் பெரிய நாடும் இந்தியாவாகும். உலகத்திலே இருக்கின்ற ஜனநாயக நாடுகளில் எல்லாம் மிகப் பெரிய நாடாக இருந்து கடந்த 37, 38 ஆண்டுக்காலமாக அந்த ஜனநாயகம் சிதறடி படாமல், சிதறுண்டு போகாமல் அதனைக் கட்டிக் காப்பாற்றி வருகின்ற பாங்கு இந்தியாவிலுள்ள பெருமக்கள் அத்தனைபேரையும் சார்ந்தது என்பது மட்டுமல்லாமல் மக்களை எல்லாம் வழிநடத்திச் செல்கின்ற அனைத்து கட்சிகளையும் சார்ந்ததாகும் என்பதை நான் பூரிப்போடும் பெருமையோடும் கூறிக்கொள்கிறேன்.

இதைவிடப் பெரிய நாடுகள் இருக்கின்றன என்றாலும், உதாரணமாக சீனா இதைவிடப் பெரிய நாடுதான் என்றாலும் நாம் இங்கே கடைப் பிடிக்கின்ற ஜனநாயக முறை அங்கே கடைப் பிடிக்கப்படவில்லை. வேறு அரசியல் முறை அங்கே இருந்து வருகின்றது. நம்மைச் சுற்றி இருக்கின்ற நாடுகள் எல்லாம், சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் சர்வாதிகார நாடுகளாக மாறு இன்ற சூழ்நிலையைப் பெற்றிருக்கின்ற இந்தக் காலத்தில் 37, 38 ஆண்டுக்காலமாக வெளிநாட்டுப் படை எடுப்புகளிலிருந்து மீறி





மக்கள் அத்தனைபேரும் ஒன்றாக இருந்து ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றி வருவதற்கு அடிப்படையாக விளங்குவது பாராளுமன்றமும் சட்டமன்றமும் ஆகும்.

ஒரு ஜனநாயக நாட்டிலே சட்டமன்றத் துறை, நீதித் துறை நிர்வாகத்துறை ஆகிய மூன்றும் ஜனநாயகத்தைக் காப்பாற்றி வருகின்ற ஊன்றுகின்ற தூண்களாகும். அதிலே மிக முக்கியமாக, அடிப்படையாக விளங்குவது சட்டமன்றத்துறையாகும். மக்களுடைய தேவைகள் என்ன, மக்களுடைய நலன்கள் என்ன என்ற அந்த அடிப்படையில் மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு சட்டங்களை உருவாக்குகின்ற இடம் சட்டமன்றமாக இருக்கின்றது. சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கு விளக்கங்கள் தந்து அதை நிலைநாட்டவேண்டிய பொறுப்பு நீதிமன்றத்திற்கு இருக்கின்றது. சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்டு, நீதிமன்றத்தால் விளக்கங்கள் தரப்பட்டு நிலை நாட்டப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு நிர்வாகத்துறைக்கு இருக்கின்றது. இந்த மூன்று துறைகளும் ஒன்றுக்கொன்று அடிமையாகாமல் தனியாக இருக்கின்றன என்ற தன்மை கொண்டவையாக இருந்தாலும் ஒன்றை ஒன்று தழுவி நடக்கவேண்டிய அளவிலே ஜனநாயகத்திலே இருக்கின்றது. ஆக நீதித்துறை இயங்குவதற்கும், நிர்வாகத்துறை இயங்குவதற்கும் அடிப்படையாக விளங்குவது சட்டமன்றத் துறையாகும். ஆகவே சட்டமன்றத் துறைதான் இந்த நாடு முழுவதும் உள்ள மக்களால் இந்த நாட்டை வழிநடத்திச் செல்வதற்குரிய மிக முக்கியமானதாக இருக்கின்றது.

ஆகவேதான் இந்தச் சட்டசபையிலுள்ள நடவடிக்கைகள் சட்ட சபையில் எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் ஆகிய அனைத்தும் தூய்மையாக போற்றப்படவேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் நாம் அனைவரும் ஆற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில்தான் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவருக்குக் கடமைகளும் அதிகமாக இருக்கின்றன; பொறுப்புக்களும் அதிகமாக இருக்கின்றன. இந்த அவையினுடைய பாதுகாவலராகத் தாங்கள்தான் விளங்குகிறீர்கள். இந்த அவையைப் பாதுகாப்பதன் மூலம் இந்த

நாட்டினுடைய ஜனநாயகத்திற்குப் பாதுகாவலராகவும் தாங்கள் இருக்கிறீர்கள். அந்த வகையிலே இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு தங்களிடத்தில் அமைகின்றது. இந்த அவையை அமைதியாகவும் ஒழுங்காகவும், நாமே நமக்கு ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகளின்படியும் நடத்திச் செல்லவேண்டிய பொறுப்பும் தங்களிடத்திலே அமைந்திருக்கின்றது.

ஆகவே இந்த அவையை நடத்திச் செல்வது என்பதோடு மட்டுமல்லாமல் நாமே ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகளை எல்லாம் ஒழுங்குபடுத்துகின்ற பெருமுயற்சியிலும் தாங்கள் ஈடுபட்டிருக்கிறீர்கள். ஆகவே இந்த அவையிலே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினருடைய உரிமையையும் இந்த அவையின் உரிமைகளையும் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு தங்களிடத்திலே இருக்கின்றது. இந்த அவை உறுப்பினர்களுடைய உரிமைகளும், அவையினுடைய உரிமைகளும் காப்பாற்றப்பட்டால்தான் இந்த நாட்டுக்கு நாம் வழங்க எண்ணுகின்ற ஜனநாயகம் முறைப்படி, தெளிவான முறையில் வழங்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த வகையிலே தாங்கள் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்.

(முற்பகல் 10-10)

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற தாங்கள் 3 முறை இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். 1977-லே நீங்கள் வெற்றி பெற்று வந்து சேர்ந்தீர்கள். 1980-லே வந்து சேர்ந்ததற்குப் பிறகு முதன்முறையாக இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராக ஆனீர்கள். இப்பொழுது அதற்கு மேலாக இந்தப் பேரவையை நடத்திச் செல்கின்ற தலைவர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். 3 முறை வெற்றி பெற்று, இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, சென்ற சுமார் 8 ஆண்டுக்காலமாக இந்த அவையிலே இருந்து பணியாற்றி வந்ததன் காரணமாகத் தங்களுக்கு நிரம்ப அனுபவம் இருக்கிறது. உறுப்பினர் என்ற முறையில் அனுபவம் இருக்கிறது என்பதோடு மட்டுமல்லாமல், துணைத் தலைவர் என்ற முறையிலும் சுமார் 5 ஆண்டுக்காலம் நீங்கள் பணியாற்றி நடத்திக் கொண்டு வந்திருப்பதன் காரணமாக, இந்த





அவையை நடத்திச் செல்கின்ற பாங்கு, முறை, ஒழுங்கு, வழி ஆகியவற்றையெல்லாம் மிகத் தெளிவாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள். பேரவைத் தலைவருக்குப் பதிலாக தாங்களே பலமுறை இந்த அவையை நடத்திச் சென்றிருக்கிறீர்கள். அந்த அனுபவங்கள் எல்லாம் தங்களிடத்திலே இருப்பதன் காரணமாக இனி வருகின்ற 5 ஆண்டுக் காலத்திலே, இந்த அவையை, மிகச் சிறப்போடு, சிறப்புற நடத்திச் செல்வதற்கான முழுத் தன்மை தங்களிடத்திலே அமைந்திருக்கிறது என்பதிலே நாங்கள் எல்லாம் உள்ளபடியே பூரிப்பும் பெருமையும் கொள்கிறோம். அந்த வகையிலே தங்களுக்குச் சிறந்த அனுபவம் இருக்கிறது. இந்த அவையை நடத்திச் செல்லவிருக்கின்ற தாங்கள் இந்த அவை எப்படி, எப்படி நடந்து சென்றது என்பதை எல்லாம் அறிந்து, அதற்கேற்றபடி நடத்திச் செல்வதற்கான முழு தன்மைகளையும் பெற்றிருக்கிறீர்கள். அது மட்டுமல்லாமல், அதற்கான முழு அதிகாரத்தையும் பெற்றிருக்கிறீர்கள்.

சட்டமன்றத்திற்குத்தான் அத்தகைய முழு அதிகாரம் இருக்கிறது. இந்தச் சட்டமன்றப் பேரவையிலே ஆற்றப்படுகின்ற உரைகளை வைத்தோ, நடத்தப்படுகின்ற தன்மைகளைப் பொறுத்தோ, எடுத்து வைக்கின்ற கருத்துக்களைப் பொறுத்தோ, எடுக்கின்ற முடிவுகளைப் பொறுத்தோ, கேள்வி கேட்கின்ற தன்மைகளோ, தடுத்து நிறுத்துகின்ற தன்மைகளோ, இந்த அவனியிலே எந்த ஒரு அமைப்புக்கும்—தனி அதிகாரம்—கிடையாது. சட்டமன்றத்திற்குள்ளே பேசுகின்ற பேச்சுக்கள், எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள், ஆகியவைகளைப் பற்றியோ, பிரச்னைகளை, கருத்துக்களை, பேச்சுக்களைப் பற்றியோ, கேள்வி கேட்கவோ, அதனை மாற்றுவதற்கோ நீதிமன்றத்திற்குக் கூட உரிமை இல்லை. அவ்வளவு பெரிய அதிகாரத்தையும், அவ்வளவு பெரிய உரிமையையும் இந்த அவை பெற்றிருக்கிறது. அதை வழிநடத்திச் செல்வதில் யாரும் குறை கூறாத அளவுக்கு, குற்றம் சொல்லாத அளவுக்கு, நடத்திச் செல்கின்ற பொறுப்பு இந்த அவையிலே இருக்கின்ற 234 உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டிய, வழி நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு தங்களிடத்திலே இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 பிப்ரவரி 27

பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே கூட தலைவர் முழு அதிகாரத்தையும் படைத்தவர் என்பதைக் காண்பிப்பதற்காகத்தான் தலைவர் வருவதற்கு முன்னால் 'மாஸ்ட்' என்று ஆங்கிலத்திலே சொல்கின்ற செங்கோலை எடுத்துக் கொண்டு அவைக்கு வருவதும், பிறகு அவர் எழுந்து செல்கின்றபொழுது, அவரோடு செங்கோலை எடுத்துக்கொண்டு திரும்புவதையும் அங்கு ஒரு மிக முக்கியமானதாக வைத்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்தைப் பொறுத்த வரையிலே, பாராளுமன்றத்தினுடைய அவைத் தலைவராக ஒருவர் ஆகிறார் என்றாலே அது மிக அதிசயிக்கத்தக்க ஒன்றுதான். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு வருவதே மிகக் கடினமான ஒன்று என்பதை நாட்டிலே நடக்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் காட்டுகின்ற வகையிலே, இப்பொழுது இந்தப் பெரும் பொறுப்பைத் துணிவோடு தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதிலே மிக்க மகிழ்ச்சி.

உலகத்திற்கே பாராளுமன்றத்தையும் பாராளுமன்ற முறைகளையும் கற்றுக் கொடுத்தது பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான். 14, 15, 16-வது நூற்றாண்டுகளில் எல்லாம் கூட அரசனுடைய ஆளாகத்தான் பாராளுமன்றத்தினுடைய தலைவர் வீற்றிருந்தார். பாராளுமன்றம் எடுத்துச் சொல்கின்ற கருத்தை அரசனுக்குச் சொல்கின்ற காரணத்தாலேதான் அவருக்கு 'ஸ்பீக்கர்' என்ற பெயரே ஏற்பட்டது. பேசுபவர் என்றுதான் வைத்திருந்தார்கள். தெளிவாக நாம்தான் அதை அவைத் தலைவர் என்று பொருத்தமாக மாற்றி வைத்திருக்கிறோம். பேசுபவர் என்று சொன்னால் உள்ளபடியே "The Speaker does not Speak". என்றுதான் சொல்வார்கள். பேசுபவர் என்று தேர்ந்தெடுக்கப்படுபவரே தவிர, அவர் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்றுதான் எடுத்துச் சொல்வார்கள். அரசனோடு பேசுவதற்காக வைத்திருந்த காலத்தில் யாரும் அரசனிடத்திலே போய் தைரியமாகப் பேச முன் வரமாட்டார்கள் என்பதற்காக— இப்பொழுது நாமும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவரை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தோம்; அப்பொழுது அழைத்துக் கொண்டு போய் உட்கார வைக்க மாட்டார்கள்— இழுத்துக் கொண்டு போய்தான் உட்கார வைப்பார்கள். அந்த வகையிலே ஆளுங்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும்



1985 பிப்ரவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கூறுவார்கள், உன்னைத்தான் இந்தப் பாராளுமன்றத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறோம், அந்தப் பதவி உனக்குத்தான், என்றவுடனே, எனக்கு வேண்டாம், அரசனால் நான் வெட்டப் படலாம்; அந்தக் கதி என்றைக்காவது ஒருநாள் எனக்கு வரும். அந்தப் பதவி எனக்கு வேண்டாம் என்று கூறுவார்கள். அப்படி ஓடி விடாமல் தடுப்பதற்காகத்தான் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து நிறுத்துவார்கள். அப்படி பிடித்து இழுத்துக் கொண்டு வருகிற போக்கு இன்னமும் இருக்கிறது. ஆனால் இப்போது நாங்கள் இழுத்துக் கொண்டு போய் உட்கார வைக்க வில்லை. அழைத்துக்கொண்டு போய் தான் உட்கார வைத்திருக்கிறோம். அந்தநிலை மாறி இன்றைக்கு ஒரு கட்சியினுடைய தலைவராக இருந்து பாடுபடுகிற அளவிற்கு 16, 17, 18 நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் வந்தது.

கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, உறுப்பினர்களுக்கு அப்பாற்பட்டு தனித்து இயங்குகிற தன்மையை ஒரு சபாநாயகர் பெறவேண்டும் என்பது 19 ஆம் நூற்றாண்டிலே ஏற்பட்டு 20 ஆம் நூற்றாண்டு வரையிலும் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று வரையில் நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்து, அந்தக் கட்சிப் பற்றோடு பணிகளை ஆற்றிக்கொண்டு வந்தாலும் கூட, இன்றிலிருந்து நீங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பண்போடு, பெருந் தன்மையோடு பணியாற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். அந்த மரபைத்தான் இந்த அவையிலே இதற்கு முன்னால் தலைமை தாங்கி நடத்திக்கொண்டு வந்தவர்கள் ஒவ்வொருவரும் நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். தாங்களும் அந்த அளவிற்கு, எங்கள் கட்சியைச் சார்ந்தவர் என்றாலும்கூட, கட்சி உறுப்பினராக இருந்தாலும், அடுத்து நடைபெறுகிற தேர்தலிலே கட்சி சார்பாக போட்டி போடுகின்ற தன்மை இந்த நாட்டைப் பொறுத்தவரையிலும் இருக்கிறது என்றாலும் கூட, இந்தப் பொறுப்பிலே தாங்கள் இருக்கிறபோது கட்சி உணர்விற்கு அப்பாற்பட்டு நின்று, கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இந்த அவையிலே இருக்கிற 234 உறுப்பினர்களையும் ஒருசேர நினைத்து தாங்கள் நடுவராக இருந்து தீர்ப்பளிக்க

வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். இங்கே ஏற்படுகிற எந்த ஒரு பிரச்சினைக்கும் இறுதி முடிவு வழங்க வேண்டியவர் தாங்களாகத்தான் இருக்கிறீர்கள். ஆகவே இரு சாரரையும் கேட்டு அதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டிய பொறுப்பும் தங்களிடத்தில் இருக்கிறது.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று வள்ளுவர் பெருந்தகையார் கூறிய நற்கிணங்க இருந்து, "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை அவைத் தலைவருக் கணி" என்று நாம் சொல்லத்தக்க அளவிற்கு இருத்தல் வேண்டும். 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்' என்பதற்கு உரையெழுத வந்த பரிமேலழகர் கூட முதலிலே துலாக்கோல் போல தன்னை சமன்செய்து கொண்டு பிறகு சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று உரை எழுதினார். ஆகவே சமன்செய்து என்பதற்கு தன்னைத்தானே முதலில் சமன் செய்துகொள்ள வேண்டும். பிறகு பிரச்னைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இதற்கு முன்னால் இந்த அவைக்கு புகழையும், பெருமையையும் தேடித்தந்த பல்வேறு அவைத் தலைவர்கள் இருந்து வந்த இடத்திலே தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அந்த மரபு காப்பாற்றப்படும் என்கிற நம்பிக்கை இங்கே இருக்கிற அத்தனை பேருக்கும் உண்டு. அந்த வகையிலே நீங்கள் பிரச்னைகளை அணுகி நடுவராக இருந்து தாங்கள் நீதிபதியாகவும் இருக்கிறீர்கள்.

இந்த அவைக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோ அல்லது அவையின் நடைமுறைக்கோ யாராவது ஒருவர் தீங்கிழைப்பார்களானால், அந்தத் தீங்கிழைப்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கிற உரிமையும் தங்களிடத்திலே இருக்கிறது. உரிமை மாத்திரம் இல்லை, தண்டனை வழங்கும் உரிமையும் தங்களுக்கு இருக்கிறது. தண்டனை வழங்குகிற உரிமை மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறைக்கு அனுப்புகிற உரிமையும் கூட தங்களுக்கு இருக்கிறது. ஆகவே எந்த ஒரு வழக்கு மன்றத்திற்கும் சென்று அதற்கு மேல்முறையீடு கூட செய்ய இயலாது. இவ்வளவு பொறுப்புகளோடு தாங்கள் அந்தப் பதவியில் அமர்ந்திருப்பதன் காரணமாக, ஏற்கனவே துணைத் தலைவராக



இருந்து பணியாற்றி வந்திருப்பதன் காரணமாக இந்த அவை மிக நல்ல முறையில் நடந்து செல்லுமென்ற நம்பிக்கை எங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. அந்த வகையில் எங்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் தங்களுக்கு இருக்குமென்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே வாதங்கள் எடுத்து வைக்க, கருத்துக்கள் எடுத்து வைக்க, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பிரச்னைகளை எடுத்து வைக்க எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமைகளை தாங்கள் எல்லோருக்கும் வழங்கவும் வேண்டும். ஆனால் முறை தவறுகிறபோது, விதிமுறைகள் தவறுகிறபோது அவற்றை தடுத்து நிறுத்தி உறுப்பினர்களை காப்பாற்றவேண்டிய பொறுப்பும் தங்களிடத்தில் இருக்கிறது. அந்த வகையில் தங்களுடைய பணிகள் சிறப்பாக நடைபெற நான் ஆளுங்கட்சியின் சார்பாக, இந்த அவையின் முன்னவர் என்ற முறையில் எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தங்களுக்குத் தருவோம். இங்கே இருக்கிற பெரும்பாலான உறுப்பினர்கள் ஏற்கனவே பாராளுமன்ற அனுபவம் பெற்றவர்கள்; சட்டமன்ற அனுபவம் பெற்றவர்கள். சட்டமன்றத்தில் இருந்து பணியாற்றி புகழையும், பெருமையையும் பெற்றவர்கள். அவர்கள் அத்தனைபேரும் எதிர்க்கட்சி தரப்பிலே அந்தந்தக் கட்சியின் தலைவர்களாக வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய முழு ஒத்துழைப்பும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற இங்கே பயன்படுமென்ற நம்பிக்கை நமக்கு உண்டு. அந்த வகையிலே தாங்கள் நல்ல அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். இருப்பினும் தாங்கள் உணர்ச்சி வசப்பட்டவர் என்று கொஞ்சம் பெயர் எடுத்தது உண்டு. இருந்தாலும் கூட அந்த சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் ஓரளவிற்கு கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். எனவே உறுப்பினர்கள் சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டாலும், அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அவர்களை அடக்கி முறைப்படுத்துகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் எல்லோருமே உணர்ச்சிவசப்படுகிறபோது [illegible]

136362

சேர்த்து அடக்கவேண்டிய பொறுப்பு தங்களைத்தான் சேர்ந்த தாக இருக்கும். குளத்து நீர் வெதும்புமேயானால் ஏரி நீரைக் கொண்டு வந்து கொட்டலாம். ஏரி நீர் வெதும்புமேயானால் பெரும் ஓடை நீரைக் கொட்டலாம். ஓடை நீர் வெதும்புமே யானால் கடல் நீரைக் கொட்டலாம். கடலும் வெதும்புமானால் அதற்கு கொட்டுவதற்கு நீர் இல்லையென்று அகத்துறையில் ஒரு பாடல் உண்டு.

"கடல் நீர் வெதும்பினால் வளவுநீர்
இல்லது போலும்"

என்று ஒரு உவமை அதில் வருகிறது. கடல் நீரே வெதும்பி விட்டால் அதை வளவுவதற்கு வேறு தண்ணீரே கிடையாது. அந்த வகையிலே நாங்கள் எல்லாம் உணர்ச்சிவசப்பட்டாலும் நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் இருந்து இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதைப்போன்று துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1980-ல் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதனால் இப்போது நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த அவையின் தற்காலிகத் தலைவராக இருந்து பலமுறை நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களும் இந்த அவையின் பாங்கு, மதிப்புகளை எல்லாம் நன்கு அறிந்திருக்கிறார்கள். துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களும் ஒரு சிறந்த வழக்கறிஞர்; தாங்களும் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆகையால் சட்ட திட்டங்களை நன்கு அறிந்து, பிரச்சனைகளை அணுக தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பணியாற்ற வந்திருக்கிறார்கள். எதையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொறுமையும் மனப்பாங்கும் அவர்களுக்கு உண்டு. அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் இந்த அவை அவர்களாலும் தங்களாலும் மிகச் சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கையில் என்னுடைய பாராட்டுதலையும் போற்றுதலையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



குறிப்பாக, அவை முன்னவர் என்ற முறையில் என் சார்பிலும் ஆளுங் கட்சியின் சார்பிலும் தங்களுக்கும் துணைத் தலைவருக்கும் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுடைய காலம் மிகச் சிறப்பான காலமாக அமையட்டும். இந்த அவை மேலும் பெருமையோடும் பண்போடும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற சட்டப் பேரவைகளுக் கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழுகின்ற முறையில் நம் பணிகளை ஆற்றுவோமாக என்று எடுத்துச் சொல்லி, என்னுடைய பாராட்டுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சபாநாயகராகவும் மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எதிர் வரிசையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் நான் பாராட்டுரை வழங்க முன்வருகிறேன்.

தங்களைப் பொறுத்தவரையில், கடந்த எட்டு ஆண்டுகளாக எனக்கு நன்கு தெரியும். நான்கரை ஆண்டுகளாக இந்த அவையிலே துணைத் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறீர்கள். அதனால் தலைவர் ஸ்தானத்திலிருந்து நீங்கள் எப்படி எப்படி இயங்க வேண்டுமென்று நான் சொல்லி, தெரியவேண்டியதில்லை. இருந்தாலும் அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல நினைவுபடுத்த வேண்டியது கடமை என்ற முறையில் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

அந்த ஸ்தானத்தில் இருந்து எப்படி எப்படி பணியாற்ற வேண்டும், என்ன என்ன மரபுகளை காப்பாற்ற வேண்டும் என்பவற்றை அவை முன்னவர் அவர்கள் அழகாகச் சொல்லி விட்டார்கள். நீங்கள் தவறாகக் கருத மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற முறை நீங்கள் துணைத் தலைவராக இருந்தபோது சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறீர்கள். இப்போது அதற்கு இடம் கொடுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் இந்த அவையில் பல்வேறு பெரும் தலைவர்கள் அமர்ந்திருந்து, இந்த அவையின் மாபை நல்ல முறையில் காப்பாற்றியிருக்கிறார்கள்; அது உங்களுக்குத் தெரியும்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 பிப்ரவரி 27

மேலும் நீங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு சட்ட மன்றத் தலைவர்கள் மாநாடுகளில் கலந்துகொண்டு, நல்ல பல அறிவுரைகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். அதைவிட புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் அவ்வ முன்னவர் அவர்கள் கூறியதுபோல, இருபது நிமிடங்களுக்கு முன்புவரையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தீர்கள்; இப்போது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த மன்றத்தின் பொதுவான ஒரு தலைவராக விளங்குகிற காரணத்தால் பாரபட்சம் இல்லாமல் நீங்கள் நடந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஆங்கிலத்தில் 'Hanging of the Democles Sword' என்று சொல்வார்கள்; அது இங்கு இல்லை. இருந்தாலும் அது இருக்கிறது என்று கருதி நீங்கள் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் எம்.எல். படித்தவர்கள். இதுவரை ஒரு சார்பினருக்காக வாதாடி இருக்கிறீர்கள். இங்கு அந்த சார்பு இல்லை. 234 உறுப்பினர்கள், நியமன உறுப்பினரோடு 235 உறுப்பினர்களின் நலன்களையும் காப்பாற்ற வேண்டியவர் நீங்கள். உறுப்பினர்களுக்கு உள்ள ஒரு குறைபாடு நீங்கள் சரியான அளவில் நேரம் கொடுப்பது இல்லை என்பது. அதை எண்ணிப் பார்த்து, நீங்கள் எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். எங்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. 'எங்கள்' என்றால், எதிர் வரிசையில் இருக்கிறவர்கள். ஆளும் கட்சியினர் நலன்களைப் பாதுகாப்பதும் உங்களுடைய பொறுப்புதான்.

இந்த அவையில் முன்னாள் தலைவர்களாக இருந்தவர்கள் மிகப்பெரும் அறிஞர்கள். அவர்கள் நல்ல முறையில் பணியாற்றி, இந்தியாவிலே மிகச் சிறந்த சபாநாயகர்கள் என்ற பெயரை அடைந்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்கெனவே நல்ல அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். அதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த வேண்டியது என் கடமை என்பதால் குறிப்பிடுகிறேன்.

அடுத்து இப்போது பல புதிய உறுப்பினர்கள் எல்லாக் கட்சியிலும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வப்போது நீங்கள் நல்ல பல ஆலோசனைகளைச் சொல்லி—மிகச் சிறப்பான முறையில் நீங்கள் நடத்திச் சென்றாலும், உங்கள் உத்தரவின்



1985 பிப்ரவரி 27] [திரு. உ. சுப்பிரமணியன்]

மூலம் மட்டும் நடந்துவிட முடியாது, அனைத்து உறுப்பினர்களும் இந்தப் பெரிய பொறுப்பில் ஈடுபட மக்கள் பிரதிநிதிகளாக வந்திருக்கிறோம். இந்தச் சபையின் நேரம் வீணாகக் கூடாது. என்னென்ன பேசவேண்டும், என்னென்ன அவசியமானவற்றில் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நீங்கள் ஒரு வகுப்பாகவே எடுத்து அவ்வப்போது குழுக்களாகப் பிரித்துக்கூட பயிற்சி கொடுப்பீர்களானால் அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்ற ஒரு சின்ன யோசனையை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா வகையிலும் மிகச் சிறந்த முறையில் பணியாற்றிய உங்களுக்கு ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற முறை மக்கள் குறைகளை எடுத்துச் சொல்வதற்காக நீங்கள் வகித்த பதவியைக்கூட மறந்துவிட்டு எங்களோடு ஒருவராக இருந்து இந்த நாட்டு மக்கள் நலனுக்காக எடுத்துப் பேசியது எங்களுக்கு நினைவில் இருக்கிறது. அந்தளவிற்கு ஜனநாயகப் பண்பு மட்டுமல்ல; தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களுக்காக செய்ய வேண்டுமென்ற முறையில் நீங்கள் பணியாற்றியிருக்கிறீர்கள். உங்களுடன் நாங்கள் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்திருந்தபோது, உங்கள் தொகுதிக்கு வந்திருந்த நேரத்தில் உங்கள் தொகுதி மக்கள் எந்த அளவிற்கு உங்களுக்கு மரியாதை கொடுக்கிறார்கள், எந்தளவிற்கு அவர்களுடன் அன்றாட விஷயங்களில் தொடர்பு கொண்டுள்ளீர்கள், சென்னையில் நீங்கள் இருந்தாலும் உங்கள் தொகுதிக்கு நீங்கள் எந்தளவிற்கு செய்திருக்கிறீர்கள் என்பதையெல்லாம் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு அப்போது கிடைத்தது. இவ்வளவு சிறந்த பண்புகளையும் குணங்களையும் கொண்ட நீங்கள் வெற்றிகரமாக இந்தச் சபையை நடத்தி ஒரு நல்ல மரபை தொடர்ந்து ஏற்படுத்துவதற்கு நீங்கள் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிற காரணத்தினால் அனைத்து உறுப்பினர்கள் சார்பாக, குறிப்பாக இந்த வரிசையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பாக தங்களுக்கு எங்கள் பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்த அவையில் சென்ற நாலரை ஆண்டுக் காலமாக நம்முடன் இருந்து பணியாற்றியவராவார். அவர்களது திறனத்தையும் அறிவாற்றலையும் நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அவர்கள் கேள்வி கேட்கும்

போதும் சரி, ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றி வாதாடும்போதும் சரி நிறைந்த ஆர்வத்தோடு படித்து அனுபவபூர்வமாக ஆய்ந்தறிந்து பேசுகிற பாங்கினைப் பார்த்திருக்கிறோம். அவர்கள் இந்தச் சபையை பலமுறை நடத்தியிருக்கிறார்கள். எனக்குக் கூடத் தெரியும், சென்றமுறை ஒரே ஒரு நாள் சில நிமிட நேரங்கள் தான் நான் அந்த இடத்தில் இருக்க முடிந்தது. அப்போதே இது எவ்வளவு பெரிய பளுவான சமாசாரம், இதற்கு சுலபமாக ஒத்துக் கொள்வது என்பது—நான் உங்களை பயமுறுத்தவில்லை, நீங்கள் அனுபவப்பட்டிருக்கிறீர்கள். அந்த ஒரு முறைதான் நான் அந்தப் பொறுப்பை உணர சந்தர்ப்பம் கிடைத்தது. ஆக, நீங்கள் மிகப் பெரிய பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள்.

Uneasy lies the head that wears the Crown

என்று சொல்வார்கள். தலைமை ஸ்தானத்தை ஏற்றிருக்கிற நீங்கள் இருவரும் அதை உணர்ந்து நிம்மதியான வகையில் பண்போடு அமைதியான சூழ்நிலையில் அவையை நடத்த வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தாங்களும் துணைச் சபா நாயகர் அவர்களும் நல்ல அறிவாற்றல் பெற்றவர்கள். இந்தச் சபையை நல்ல முறையில் வழிநடத்திச் செல்ல சபாநாயகர் அவர்களுக்கு துணைச் சபாநாயகர் அவர்கள் துணையாக நிற்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிற காரணத்தினால் பேரவையின் இந்த வரிசையில் இருக்கிற கட்சிகள் சார்பாக உங்கள் இருவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.

**திரு. க. அன்பழகன்:** சட்டப் பேரவையின் மாண்புமிகு தலைவர் அவர்களே, தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் தங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எங்களுடைய வாழ்த்தையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்லெண்ணமும் நல்வாழ்த்தும் உரியதாகும்.

தாங்கள் இந்தச் சீரிய பொறுப்பை ஏற்றிருக்கிற இந்த நேரத்தில் அவை முன்னவர் நாவலர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய அந்த உரையில் சபாநாயகர் அவர்களுக்கு உரிய





அத்தனை கடமைகளையும் அவர்கள் மிக விரிவாக விளக்கினார்கள். அதன் காரணமாகவே எங்களுடைய பொறுப்புக்கள் சற்று குறைகின்றன. கடந்த சில ஆண்டுகளில் தாங்கள் துணைத் தலைவராக இருந்து இந்த அவை நடைபெற்றபோது சில நிகழ்ச்சிகள் தாங்களும் அவையில் உள்ளவர்களும் விரும்பத்தகாத நிலைக்கு உருவாயின என்று சொன்னாலும்கூட அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படாத வகையில் இந்த அவை சிறப்பான முறையில் இயங்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். இந்த அவையினுடைய கண்ணியமும் அவை உறுப்பினர்களுடைய கடமை உணர்வும் அவையினர் அனைவரின் கட்டுப்பாடும் அந்தக் கண்ணியமான நிலையைத் தோற்றுவிக்க உதவும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 10-30)

ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி என்று வழங்கப்படுகின்ற இந்த இரண்டு வகையான நிலையிலுள்ள கட்சிகளும் ஜனநாயகத்தின் இரண்டு கண்கள் என்பதை மறந்துவிட முடியாது. ஜனநாயகத்தின் இரண்டு கண்களாக உள்ள இந்த இரண்டு கண்களும் பழுது இல்லாமலும், குறைவு இல்லாமலும் இயங்குகின்றபோது தான், பொதுமக்களுக்கு அதனால் சிறந்த மக்கள் ஆட்சியைக் கொடுக்க முடியும். இரண்டு கண்களையும் சமமாக நோக்குகிற நிலையில் இயங்குகின்ற, இந்த நாட்டிலே குடிமகனாக இருப்பவர் தான் சபாநாயகராக இருக்க முடியும். எனவே, ஆளுங் கட்சி, எதிர்க் கட்சி இரண்டுக்கும் இடையில் நடுநிலை என்ற அந்த உணர்வை, நீங்கள் உள்ளத்திலே தாங்கிக்கொண்டு, இந்த அவையைச் சிறந்த முறையிலே இயக்கி, நாட்டிற்கு உரிய பலனை வழங்க வேண்டுமென்று, நல்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இளமையிலே ஏற்படுகின்ற அந்த துடிப்பு, ஆர்வம் காரணமாக உணர்ச்சி வசப்படுவது இயற்கைதான் என்று சொன்னாலும், தாங்கள் இளம் வயதிலே இந்த பெரிய பொறுப்புக்கு—இது வரையில் இந்த அவையிலே, மாமன்றத்திலே இருந்தவர்களைவிட இளம் வயதினர் தாங்கள்தான்—வந்திருக்கிறீர்கள். இளம் வயதிலே ஏற்படுகிற ஆர்வங்கள், ஆசைகள் காரணமாக துடிப்பு மிகுதியாக ஏற்படுகின்றது. நல்லவேளையாக உங்கள் ஆசை நிறைவேறி இருக்கின்றது என்று நம்புகிறேன். உங்களுடைய

ஆசை நிறைவேறி இருக்கின்ற காரணத்தால், இயல்பாகவே, இயற்கையாகவே அந்த வேகம் சற்றுத் தணிந்து, உங்களுடைய நிலையை அது உயர்த்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

மதிப்புமிக்க இந்த அவையிலே உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லுகிறபோது, உணர்ச்சிவசப்படுவது இயற்கை. உணர்ச்சி இல்லாத நிலையில் பேசுவது என்பது சற்றுக் கடினம். எனவே, அப்படி உணர்ச்சிவசப்படுகின்றபோது, ஒரு நிமிடம் தாமதித்தால், பொறுத்தால், அதனாலே ஏற்படக்கூடிய விளைவுகள் பலவற்றைத் தவிர்த்துவிட முடியும். அதனால், நீங்கள் அப்படித் தாமதிக்க வேண்டுமென்று நான் விரும்புவதாகப் பொருள் அல்ல. பொதுவாக, உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லுகின்றபோது ஏற்படக்கூடிய எதிர்பாராத நிலைமைகளில், அந்த நிலைமைகளை எப்படித் தவிர்ப்பது என்பதிலேதான் சபாநாயகர் மிகுந்த ஆர்வம் உடையவராக இருக்க வேண்டுமே தவிர, அந்தக் குறையை எப்படிச் சுட்டிக் காட்டுவது என்பதிலே ஆர்வம் உடையவராக இருந்துவிடக் கூடாது. நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், தாங்கள் ஆளுங் கட்சியைச் சார்ந்தவராக இன்று முதல் இல்லை என்று சொல்வது உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட உண்மை என்றாலும் கூட, இயற்கை உணர்வு என்பது மனிதனை எப்படியெல்லாம் வழி நடத்திச் செல்லும் என்பதை நான் உணர்ந்தவன். அதைவிட தாங்கள் ஒரு வழக்கறிஞர். ஒரு வழக்கறிஞருடைய உணர்வு, தன்னுடைய கருத்துக்கு மாறுபட்ட ஒரு கருத்து எடுத்துச் சொல்லப்படுகிறபோது, உடனடியாக அந்தக் கருத்தை மறுத்துச் சொல்ல வேண்டுமென்ற எண்ணம் ஏற்படுவது உண்டு. ஆனால், அதற்கு நேர்மாறான ஒரு நிலையில் தாங்கள் சபாநாயகர் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். எனவே, இந்த அவையின் மொத்த நன்மையைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதித்தான் இந்த அவை நடக்கிறது என்பதை உள்ளத்திலே கொண்டு, தாங்கள் எடுத்துச் சொல்ல விரும்புகிற, வலியுறுத்த விரும்புகிற ஒரு கட்டளையை ஒரு நிமிடம் தாமதிப்பதன் மூலமாக ஒரு பிரச்னையை சிக்கல் இல்லாமல், அதைச் செம்மைப்படுத்த முடியுமா என்பதைத் தாங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



எதிர்க் கட்சிகள் இந்த அவையிலே இடம் பெற்றிருக்கிற முறையில், தேர்தல் நடைபெற்ற நேரத்தில் இருந்த அணிகள் காரணமாக, பெரும்பான்மை ஒரு அணிக்கு கிடைத்து, மிகச் சிறுபான்மை மற்றொரு அணிக்குக் கிடைக்கிற நிலைமை ஏற்பட்டது என்பது நாடறிந்த ஒரு உண்மை. அந்த எண்ணிக்கையை மனதிலே கொண்டு, அந்த எண்ணிக்கை அடிப்படையிலே தான் இந்த அவையிலே கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட வேண்டுமென்று கருதிவிடக் கூடாது. இங்கே வீற்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகமோ அல்லது தங்களுடைய அணியிலே உள்ள மாற்றுக் கட்சியினரோ, எண்ணிக்கையிலே குறைவாக இருந்தாலும், மக்களுடைய ஆதரவைப் பெற்றிருக்கிற அளவை ஒருகணம் சபாநாயகர் பொறுப்பிலே இருக்கிற தாங்கள், நாட்டிற்கு ஒரு பொறுப்பான இடத்திலே இருந்து, வழிகாட்டுகிறவர்கள் என்ற முறையில், மக்களுடைய ஆதரவினுடைய அளவு, இந்த அவையிலே பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிற அந்த அளவோடு பொருந்தி வருவதில்லை; அதைவிட பல மடங்கு அளவு எதிர்க் கட்சிகளுக்கும் நாட்டிலே உண்டு என்பதைத் தாங்கள் ஒருகணம் கருத்திலே கொண்டு, எதிர்க் கட்சிகளுடைய கருத்துக்களுக்கு இன்றியமையாத ஒரு இடத்தை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கருத்துக்கள் எவ்வளவு மாறுபட்டு இருந்தாலும்கூட, முடிவு எடுக்கிற வாய்ப்பு, இந்த அவைக்கு இருக்கிறது. பெரும்பான்மையோர் இருக்கிற ஆளுங் கட்சிக்கு உண்டு. எனவே, கருத்துக்கள் அளவுக்கு முழு சுதந்திரத்தோடு கருத்துக்களை எடுத்துச் சொல்லக்கூடிய அந்த நிலைமையை தாங்கள் நிலைநாட்டுவது தான், தாங்கள் ஏற்றிருக்கிற பதவிக்கு பெருமை சேர்ப்பதாக இருக்கும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று. அவையிலே யாரேனும் சற்றுக் கடுமையான சொல்லைச் சொல்லிவிட்டாலும் கூட, அவர்களே உணர்ந்து அதைப் பின்வாங்குகின்ற நிலைமையை ஏற்படுத்துவதற்கு "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்ற வள்ளுவர் வாக்கை, அது எல்லா நிலையிலும் உள்ளவர்களுக்கும் கூறப்பட்டதுதான் என்று சொன்னாலும் கூட, அவைத் தலைவராக இருக்கிற தாங்கள் இவ்வளவு பெரிய ஒரு

[திரு. க. அன்பழகன்] [1985 பிப்ரவரி 27

அவையை வழிநடத்திச் செல்லவேண்டிய ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தால், ஒருவகையிலே சொல்லப் போனால், பிரச்சனைகள் உள்ள ஒரு பெரிய குடும்பத் தலைவராகத் தாங்கள் ஆகியிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட அவையில், எந்த அளவிற்கு இன்னா செய்தாரை, அல்லது இன்னாததைப் பேசியவரை, தாங்கள் திருத்துகிற முறையை மிகப் பக்குவமாகக் கையாள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இந்த அவையினுடைய துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வழக்கறிஞர் பாலசுப்பிரமணியம் அவர்களும் தகுந்த அளவிலே சட்டமன்றத்திலே பயிற்சி பெற்றவர்கள். எனவே அவையினுடைய இந்த உயர்ந்த நிலைக்கு உறுதுணையாக விளங்குவீர்கள் என்று நான் கருதுகிறேன். தலைவர் அவர்களுக்கும். துணைத் தலைவர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, துணைத் தலைவர் அவர்களே, உங்கள் இருவரையும் இந்தச் சபை ஏகமனதாக தேர்ந்தெடுத்ததற்கு எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சாரபில் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மனமார வாழ்த்துகிறேன்.

ஆரம்பத்திலே அவை முன்னவர் அவர்களும், மற்றுமுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களும், நல்ல, சிறந்த கருத்துக்களை, உங்களுடைய தலைமையிலே இந்த அவை எப்படி நடக்க வேண்டும் என்று எடுத்து முன் வைத்திருக்கிறார்கள். அந்த நல்ல கருத்துக்களோடு நானும் ஒப்புகிறேன்.

அதேசமயத்தில் ஜனநாயகத்தைப் பற்றி நாம் இன்றைக்கு ஞாபகப்படுத்துகிறோம். நம் நாட்டினுடைய ஆட்சி முறை கட்சிகளை அடிப்படையாகக் கொண்டு நடந்து வருகிற ஆட்சி முறை. 74 கோடி மக்களில் 38 கோடி மக்கள் பல கட்சிகளின்கீழ் பிரிந்து நிற்கக்கூடிய மக்கள். அவர்கள் பெரிய கட்சிகளைத் தங்களுடைய முழு பலத்தையும் கொண்டு அதிகாரத்திற்கு அனுப்புகிறார்கள். சிறிய கட்சிகளையும் தேர்ந்தெடுத்து



1985 பிப்ரவரி 27] [திரு. கு. ரமணி]

அனுப்புகிறார்கள். ஆகவே ஜனநாயக மரபு முறையில் பெரிய கட்சி, சிறிய கட்சி என்று எப்படி இருந்தாலும், குறிப்பிட்ட ஜனநாயகப் பிரதிநிதிகளுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கக்கூடிய கட்சிகள் அவை. 100 கோடி மக்களுக்கு மேற்கொண்டு உள்ள சீன நாட்டில் அவர்களுடைய ஜனநாயகம், அவர்களுடைய மரபு, அவர்களுடைய அரசியல் சட்டத்திற்கு ஏற்ப பாட்டாளி வர்க்கத்தினுடைய உச்சகட்ட ஜனநாயகத்தை அவர்கள் கையாளுகிறார்கள்.

நம் நாட்டில் அப்படிப்பட்ட நிலையும், அப்படிப்பட்ட தன்மையும் இல்லை. ஆகவே நமக்குரிய ஜனநாயகத்தை நாம் கையாளுகிறோம். இந்த ஜனநாயக முறை இந்த அவையிலே மேலும் மேலும்—அதிலிருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டு—சிறந்து பொலிவோடு வளர்வதற்கு எந்தப் பகுதி மக்களாக இருந்த போதிலும், அதனுடைய பிரதிநிதிகளுக்கு நியாயம் வழங்கப்பட்டது. இந்த அவையிலே நல்ல முறையில் கருத்துக்களை எடுத்து வைப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது என்று வெளியிலே உள்ள மக்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய வகையிலே நம்முடைய ஜனநாயகம் இங்கே செயல்பட வேண்டும். அப்படிப்பட்ட முறையில் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்களுக்கும், உதவித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் மிகப் பெரிய பொறுப்பு உண்டு. கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அவையிலே தொடர்ச்சியாக நாம் எல்லோரும் இருந்து செயல்பட்டு இருக்கிறோம். புதிய உறுப்பினர்கள் பலரும் இந்த அவையில் வந்திருக்கிறார்கள். ஆனால் சென்ற காலத்தினுடைய நடவடிக்கைகள் நமக்கு பல பாடங்களைக் கற்றுத் தந்துள்ளன. பல எச்சரிக்கைகளையும் தந்துள்ளன. ஜனநாயக நடைமுறையில் சட்டமன்றத்திலோ அல்லது பாராளுமன்றத்திலோ உணர்ச்சி வசப்பட்டு, காரியங்கள் நடக்கவே நடக்காது என்று நாம் சொல்ல முடியாது.

(முற்பகல் 10-40)

ஆனால் அந்த உணர்ச்சிகள் நமக்கு விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு, மரபுகளுக்கு, ஒழுங்கு முறைகளுக்கு மாறுபட்டு நிற்க முடியாது பார்த்துக் கொள்ள வேண்டிய பெரும் பொறுப்பு தலைவரைச் சார்ந்தது. உங்களுடைய பொறுப்பு அது. மிகப்

பெரிது. மிகப் பிரம்மாண்டமானது என்று சொல்வதற்குக் காரணம் நீங்களும் சென்ற காலத்தில் எங்களோடு இந்த அவையில் இருந்து செயல்பட்டு, பல சிக்கலான நிகழ்ச்சிகள் வந்த காலத்தில், அவற்றைத் தீர்ப்பதற்கு நாம் எல்லோரும் கலந்து பேசி பல முடிவுகளை எப்படிச் செய்தோம் என்பதை உணர்ந்திருக்கிறீர்கள். அதைத்தான் எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் எடுத்துக் கூறும்போது சொன்னார்கள்.

ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அல்லது கருத்தில் கடுமையான கருத்து வித்தியாசம் ஏற்பட்டால், விதிகளைப் பார்த்து உடனேயே அந்தப் பிரச்னையை முடித்து விட வேண்டும் என்ற முடிவிற்கு வருவது, சில சந்தர்ப்பங்களில் உண்மையை நெருங்கிப் போகக்கூட முடியாதபடிக்கு நம்மைத் தடுத்து நிறுத்திவிடுகிறது. அந்த நிலை ஏற்படாமல் எந்த அளவிற்கு அவையில் ஒருமைப்பாடு ஏற்பட்டிருக்கிறதோ, அதை ஏற்றுக் கொண்டு, ஒத்துக் கொண்டு, கடுமையாக வித்தியாசம் நிறைந்துள்ள பிரச்னைகளில், உடனடியாக ஒரு முடிவுக்கு வருவதை கொஞ்சம் தள்ளிப் போட்டு, அதைத் தீர்ப்பதற்கு மறுபடியும் கலந்து உரையாடி, சரியான விதிமுறைகளைக் கண்டுபிடித்து, வித்தியாசமான கருத்துக்களையும், அரசியலையும் கொண்டிருக்கக் கூடிய பல கட்சிகளுக்கு மத்தியிலே ஒருமைப்பாட்டை உண்டாக்குவதற்கு. நிச்சயமாக தலைவர் பதவியிலே இருக்கிற நீங்கள் முயற்சி எடுத்தால் சாத்தியப்படும் என்பது எங்களுடைய அனுபவம்.

அந்த முறையில் இந்த அவையினுடைய சென்ற கால அனுபவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இங்கே எதிர்க் கட்சி வரிசையிலும், ஆளும் கட்சி வரிசையிலும் உட்கார்ந்து கொண்டிருக்கிற நிலைமையைப் போலவே எல்லா சமயத்திலும் ஒரே மாதிரியாக, தொடர்ச்சியாக, வழக்கமான பலத்திலேயே நாம் வந்து கொண்டிருப்போம் என்று சொல்ல முடியாது. வித்தியாசமான எண்ணிக்கை பலம் ஒவ்வொரு கட்சிக்கும் மாறி மாறி ஏற்படலாம். இங்கே இருக்கும் எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரு கட்டத்திலே அதிகாரம் செலுத்தக் கூடிய ஆளும் கட்சியாக வரலாம். இன்றைக்கு இங்கே எதிர்க்கட்சியினுடைய பலம் கொஞ்சம் குறைவாக இருக்கிறது என்பது உங்களுக்கே தெரியும்,





நம் அனைவருக்கும் தெரியும். ஆனால், இங்கே சொல்லக் கூடிய கருத்துக்களும், சொல்லக் கூடிய விஷயங்களும் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்க வேண்டும் என்ற முறையில் சொல்லப்பட வேண்டும்.

கருத்துக்களிலே தவறுகள் இருந்தால் நிச்சயமாக நீங்கள் எடுத்துக் காட்டலாம். அதைத் திருத்துவதற்கு உதவி செய்யலாம். நாங்களும் அதற்கு ஒத்துழைப்போம். ஆனால், கருத்துக்களைப் பூரணமாக முன் வைப்பதற்கும், அவைகளுக்கு நியாயம் பெறுவதற்கும் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் நீங்கள் அவர்களுக்குச் சற்று அதிகமான காலத்தை—சலுகையைக் காட்ட வேண்டும் என்றுகூடச் சொல்லலாம்—கொடுத்து, அவையை நியாயமாக நடத்த வேண்டும். ஒரு கட்சிக்கு எவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று மட்டும் பார்த்து, அதற்கேற்ப நேரம் ஒதுக்கப்படுமேயானால், இந்த அவையை இப்படித்தான் நடத்தவேண்டும் என்று விதித்திருக்கிற மாதிரியே நடத்துவதற்கு நமக்கு முடியாது போய்விடும். ஆகவே, அதையும் உங்கள் முன்னால் இன்றைக்கு நான் தாழ்மையான கருத்தாகச் சொல்லிக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கருத்துக்களையும், அவர்களுடைய வாதங்களையும் சரியான முறையில் அவையில் எடுத்து வைப்பதற்கு, எந்த அளவிற்குக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்த வேண்டுமோ, அந்த அளவிற்கு மட்டும் பயன்படுத்தி, நீங்கள் அவர்களுக்குப் பூரண கருத்துச் சுதந்திரம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு மட்டுமல்ல, சென்ற காலத்தின் அனுபவம் உங்களுக்கு அதற்கான வழி காட்டும், நீங்களும் நல்ல முறையில் அதைப் பின்பற்றுவீர்கள் என்றும் நான் நம்புகிறேன்.

அந்த முறையில் இந்த அவையைச் சரியான முறையில் நடத்திச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கட்டுப்பாடுகளும், ஒழுங்கு முறைகளும் எப்பொழுதும் எங்களுடைய கட்சிக்குப் பிடிக்கும். எப்பொழுதும் கட்டுப்பாடுகளை விரும்புகிற கட்சியினர் நாங்கள். ஆனால் அந்தக் கட்டுப்பாட்டில் எந்த அளவிற்கு ஜனநாயகத்தையும், ஒழுங்கையும் நாம் காப்பாற்ற முடியுமோ, அந்த அளவிற்குக் கடைப்பிடித்தால், இந்த அவை

[திரு. கு. ரமணி] [1985 பிப்ரவரி 27

முழுவதும் ஒத்து போய்விடும். அந்த முறையிலே கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் பாதுகாத்து, அவையினுடைய மரபையும் பாதுகாத்து, எதிர்காலத்தில் நீங்கள் செயல்படுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உங்களுக்கு ஒத்துழைப்புத் தரும். நீங்கள் நல்ல முறையில் அவையை நடத்தும்போது, அதே மாதிரியான ஒத்துழைப்பை அனைத்து எதிர்க்கட்சிகளும் தரும் என்று நான் நம்புகிறேன்.

அந்த வகையில் உங்களையும், திரு. பாலசுப்பிரமணியன் அவர்களையும் நான் வாழ்த்துவதோடு, திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினர். சென்ற காலத்தில் அவர் பேசிய சில பேச்சுக்களின் இடையே எங்களுக்குள் சில கருத்து வித்தியாசங்கள் ஏற்பட்டது. ஆனால், அவர் நல்ல முறையில் வாதத்தை எடுத்து வைக்கக் கூடியவர். முழுவதும் பொறுமையாக இருந்து, வாதத்திற்கு வாதம் பதில் அளித்து, தன்னுடைய கருத்துக்களை நிலை நாட்ட எல்லாவிதமான முயற்சிகளையும் செய்வார்கள். அந்த வகையில் அவர் ஒரு சிறந்த வாதத்திறமை படைத்திருக்கக் கூடிய, விவரம் தெரிந்த, ஒரு உறுப்பினர் என்ற முறையில் அவரும் இந்தத் துணைத் தலைவர் பதவிக்கு வந்தது வரவேற்கத் தக்கது. அவரையும் பாராட்டி, உங்களையும் மறுபடியும் பாராட்டி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** பெருமைக்குரிய இந்த பேரவையினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, ஐந்து கோடி தமிழ் மக்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டிருக்கக் கூடிய இந்தப் பேரவையின் மாண்புமிகு தலைவராக தாங்கள் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தப் பாங்கினையும், அதே போல தங்களுக்கு துணைவராக இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை நடத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு பாலசுப்பிரமணியன் அவர்களையும் நான் மெத்த மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். நாடு விடுதலைப் பெற்று, 37 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழக சட்டமன்றப் பேரவையினுடைய தலைவராக முதல் முதலாக சகோதர சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெருமகனார் தேர்ந்தெடுக்கப்



1985 பிப்ரவரி 27] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

பட்டிருக்கக்கூடிய இந்தத் தன்மையை நான் மனம் உவந்து வரவேற்கிறேன். இந்த அருமையான வாய்ப்பைத் தேடித் தந்த கட்சியினுடைய தலைவர் அவர்களுக்கு, குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பதவியை வகிப்பதற்கு முற்ற முற்றத் தகுதி பெற்றவராகத் தாங்கள் விளங்குகிறீர்கள் என்பதை எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து கூறியிருக்கிறார்கள். சட்டமன்றத்தை நடத்திச் செல்ல தேவைப்பட்ட சட்ட ஞானத்தை தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். சட்ட அறிவிலும் மேம்பட்ட படிப்பை நீங்கள் முயன்று படித்திருக்கிறீர்கள். பல பேர் வழக்கறிஞராக மட்டும் இருப்பார்கள். ஆனால் நீங்கள் வழக்குரைஞராகவும் கடமையாற்றும் அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவராக ஐந்தாண்டுக் காலம் இருந்து அந்த அனுபவத்தை பெற்றிருக்கிறீர்கள்.

தாங்கள் பெற்ற படிப்பும், அடைந்திருக்கக்கூடிய அனுபவமும் அடுத்த ஐந்தாண்டு காலத்திற்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய எல்லா சட்டமன்றங்களிலும் சிறந்த மரபுகள் கடைபிடிக்கப்பட்டு, நல்ல பண்பாடுகள் பேணப்பட்டு, எல்லா தரப்பு மக்களையும் அனைத்துச் செல்லக்கூடிய ஒரு சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கக்கூடிய ஒரு தலைவராக நீங்கள் விளங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

என்னதான் படித்தவர்களாக இருந்தாலும், கடமை ஆற்றுபவர்களாக இருந்தாலும் குடும்பத்திலே ஒரு நல்ல சூழல் இருந்தால்தான் அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையினை செவ்வனே ஆற்ற முடியும். பாவேந்தர் பாரதிதாசனார், படித்த குடும்பத்தை நல்ல ஒரு பல்கலைக் கழகத்தோடு ஒப்பிட்டுப் பேசினார். ஆனால் நீங்களோ, பல்கலைக் கழக பேராசிரியையே குடும்பமாக பெற்றிருக்கக்கூடிய ஒரு அருமையான வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே நம்முடைய பேராசிரியர் அன்பழகன் சொன்னது போல் நீங்கள் பெற்றிருக்கக் கூடிய இந்த வாழ்க்கையினுடைய நிறைவு, இந்தச் சபையிலே நல்ல முறையிலே எதிரொலிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எனக்கு முன்னாலே பேசியவர்கள் எதிர்க் கட்சியி

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1985 பிப்ரவரி 27

உடைய வரிசையிலே அமர்ந்திருக்கக்கூடிய எங்களுக்கு தக்க பாதுகாப்பும், அரவணைப்பும், போதிய நேரமும் தரப்படுவதற்கு நீங்கள் உறுதி வழங்கக்கூடியவராக இருப்பீர்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார்கள். சட்டம் என்னதான் சொன்னாலும், இந்த அவையினுடைய தலைவராக அமர்ந்து இருக்கக்கூடிய நீங்கள் வழங்கக்கூடிய தீர்ப்பு "Ruling of the Speaker is the order of the day" என்பதை நாங்கள் உணர்ந்து இருக்கிறோம். ஆகவே, சட்டம் என்ன சொன்னாலும் கூட, சபையினுடைய கண்ணியத்தை காப்பாற்றக் கூடிய தீர்ப்புகளை நீங்கள் வழங்கி, சிறந்த மரபுகளை இந்த சட்டமன்றத்தினுடைய பாரம்பரியத்தில் ஏற்படுத்துவீர்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி சொன்னது போல, இங்கே அமர்ந்திருக்கக்கூடிய உறுப்பினர் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் நாட்டிலே அந்தந்தக் கட்சிகளைப் பின் பற்றக்கூடிய மக்கள் தொகை இருக்கிறது என்று சொல்ல முடியாது. நானும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவன். இதே அரசியல் கட்சி நாடு விடுதலை பெற்றபோது, இந்தப் பேரவையினுடைய பிரதான எதிர்க்கட்சியாக அமர்ந்து

(முற்பகல் 10.50)

சேவையாற்றி இருந்திருக்கிறது. அந்தத் தலைவராக, கண்ணியத்தோடு நடமாடும் தலைவராக காயிதே மில்லத் அவர்கள் விளங்கியிருக்கிறார்கள். அரசியலிலே கண்ணியத்தைக் காப்பாற்றிய ஒரு பெருந்தலைவர் என்று இந்தப் பேரவையே பாராட்டி அவர்களுடைய திரு உருவப் படத்தை இந்தச் சட்டமன்றத்திலே வைத்திருப்பதை தாங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். ஆகவே அந்தப் பாரம்பரியத்திற்கிணங்கி, இந்தச் சபையின் மரபுகள், கண்ணியங்கள், நடவடிக்கைகள் ஆகியவை பேணப் படக் கூடிய ஒரு நல்ல நிலையில் நாங்கள் எதிர்காலத்தில் நடந்துகொள்வோம் என்ற உறுதியை வழங்குவதோடு, உங்களிடமிருந்து எங்களுக்குக் கிடைக்க வேண்டிய அரவணைப்பும், பாதுகாப்பும் நிச்சயமாகக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். உங்களைப் பாராட்டிப் பேச நான் ஆசைப்பட்டாலும்கூட, இப்போது இந்த



1985 பிப்ரவரி 27] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

ஒருவர் முன்னவராக அமர்ந்திருக்கிறார்கள். அவர் பேசி விட்டால் எந்தப் பின்னவரும் பேச முடியாத அளவிற்கு எல்லா கருத்துக்களையும் எடுத்துச் சொல்லிவிடுவார்கள். இன்று இந்த அளவிற்கு உங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தன்மையை நான் மனமார வரவேற்று, உங்களுடைய சேவை எதிர்காலத்திலே சிறந்து விளங்க வேண்டுமென்று வாழ்த்தி, என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இருவரும் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நான் சார்ந்திருக்கின்ற ஜனதா கட்சி சார்பில் என்னுடைய வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். சட்ட மன்ற மரபுகளை நீங்கள் நல்ல முறையில் பேணி பாதுகாத்து, எங்களை எல்லாம் வழி நடத்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எண்ணிக்கையில் குறைந்த அளவாக உள்ள எங்கள் எதிர்க் கட்சிகளுக்கு பேசுவதற்கான சந்தர்ப்பங்களை அதிகமாக அளித்து, நீங்கள் சட்டமன்ற மரபுகளை காத்தருளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் கூறியதைப் போல 'இந்தியாவைக் காப்போம்; ஜனநாயகத்தைக் காப்போம்' என்ற வழியில் தாங்கள் நடந்து, உங்கள் பணி சிறக்கவேண்டுமென்று கூறி நீங்கள் பல்லாண்டு இந்த மன்றத்தை நல்லமுறையில் நடத்துவதற்கான ஒத்துழைப்பை ஜனதா கட்சி கொடுக்கும் என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**திரு. பொ. உத்திராபதி:** எட்டாவது சட்டமன்றத்தின் இந்தக் கூட்டத்தில் பேரவைத் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட

[திரு. பொ. உத்திராபதி] [1985 பிப்ரவரி 27

தலைவர் அவர்கள், சென்ற சட்டமன்றத்தில் 4½ ஆண்டுக்காலம் துணைத் தலைவராக இருந்து சிறப்பாக பணியாற்றியவர்கள். இந்த 4½ ஆண்டுக்காலத்தில், சட்டமன்றத்தில் பல்வேறு படிப் பினைகளையும், அனுபவங்களையும் நன்கு அறிந்தவர்கள். எனக்கு முன்னால் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளவர்கள் சொன்ன தைப்போல், அன்றைக்கு ஒரு சில நேரங்களில் சட்டமன்றத்தில் ஏற்பட்ட சூடான விவாதத்தில் — அந்தச் சூடான விவாதத்தில் பங்கு கொண்டிருந்தாலும், அன்றைக்குத் துணைத் தலைவராக இருந்து, இன்றைக்கு ஒரு பெரிய பொறுப்பினை அதுவும் சட்ட மன்றத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த அரியாசனத் தில் அமர்ந்திருக்கக் கூடிய தலைவர் ஆவார். ஒரு பெரிய பொறுப்பிற்கு ஏற்றவாறு நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எதிர்க்கட்சி வரிசையில் எண்ணிக்கை யில் குறைந்திருந்தாலும், ஆளுங்கட்சிக்கு பல்வேறு கருத்துக் களையும் பல்வேறு நிகழ்ச்சிகளையும் எடுத்துச் சொல்லவேண்டு மென்றால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக் கூடிய தலைவர்கள் அன்றாடம் ஆளும் கட்சிக்கு எடுத்துச்சொல்லக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அந்த அடிப்படையில் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் எண்ணிக்கையில் குறைந்திருந்தாலும், கடந்த காலத்தில் நல்ல கருத்துக்களைச் சொல்லும்பொழுது, துணைத் தலைவராகப் பணியாற்றியபொழுது, நிச்சயமாக அவ்வப்போது வாய்ப்பு அளித் திருக்கிறார்கள். தலைவராக வந்து பெரிய பொறுப்பை ஏற்ற பிறகும் இப்போது நடக்கவிருக்கிற சட்ட மன்றக் கூட்டங்களிலும் எதிர்க்கட்சி வரிசையில் கருத்துக்களைச் சொல்வதற்கு அதிகமான வாய்ப்பை அளிக்கின்ற வகையில் தலைவராகிய தாங்கள் வாய்ப்பினை அளிப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.



1985 பிப்ரவரி 27] [திரு. பொ. உத்திராபதி]

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற துணைத் தலைவர் அவர்களுக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்துக்களையும் நன்றியையும் கூறி அமர் கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, துணை சபாநாயகர் அவர்களே, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் எங்கள் பாராட்டினை வழங்குவதற்காகவும் நல்வாழ்த்தினைத் தெரிவிப்பதற்காகவும் வாய்ப்புக் கிடைத்ததற் காக முதலிலே நன்றியையும் மகிழ்ச்சியையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்பாண்டி நாட்டிலிருந்து நமக்குத் தொடர்ந்து சபா நாயகர்கள் கிடைக்கு வருகிறார்கள். பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய காலத்திலே திரு. செல்லப்பாண்டியன் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலே திரு. ஆதித்தனார் அவர்களும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய காலத்திலே நம்முடைய திரு. இராசாராம் அவர் களுக்குப் பின்னாலே நம்முடைய திரு. பி. எச். பாண்டியனும் கிடைத்து இருக்கிறார்கள்.

சென்ற அவையிலே இருந்தவர்கள் எல்லாம் இப்போது பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினராக இருந்தார்கள். இப்போது மாண்புமிகு வணக்கத்திற்குரிய துணைத் தலைவராக ஆகியிருக்கிறார்கள். மாண்புமிகு துணைத் தலைவராக இருந்த திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் இப்போது தலைவராக ஆகி யிருக்கிறார்கள். சபாநாயகராக மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் இருந்தார்கள். அவர்களும் எல்லாச் சிறப்புக்களும் பெறுவார்கள்.

தமிழகத்து அரசியலிலே மிக விழிப்பான ஒரு காலமாக மட்டுமல்லாது ஒரு பொன்னான காலமாகவும் இருந்து கொண்டிருக்கிற இந்த நேரத்திலே எல்லோராலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு. பாண்டியன் என்ற அந்தப் புகழையும் நீங்கள் இப்போது பெற்றிருக்கிறீர்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1985 பிப்ரவரி 27

பாரதிதாசனை எல்லோரும் சொன்னதைப் போலவே நானும் சொல்வது என்றால், ஆண்ட நாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டிய மன்னன் மீண்டது போன்ற ஒரு தோற்றத்தோடு நீங்கள் இங்கே அமர்ந்து இருக்கிறீர்கள். அந்தத் தோற்றத்தோடு நீங்கள் இருக்கிறபோது நல்லமுறையில் சபையை நடத்திச் செல்வதற்கு உங்களுக்குச் சட்ட அறிவும் உண்டு; பட்ட அறிவும் உண்டு. நல்ல தமிழிலே சொல்ல வேண்டுமானால் அனுபவத்திற்கு பட்ட அறிவு என்று பெயர். அதனை வைத்துச் சொன்னேன். அனுபவப் பட்ட அறிவு. ஆக சட்ட அறிவும் பட்ட அறிவும் தங்களுக்குத் துணை நின்று இந்தச் சபையை நடத்துவதற்கு நிச்சயமாக உதவும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

முந்தைய சபாநாயகர் குறளைப் படித்துத் தொடங்கினார், நீங்கள் குறளைக் கடைப்பிடித்து நடத்த வேண்டுமென்று நம்முடைய முன்னவர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு திரு. அப்துல் சமது அவர்கள் இங்கே பேசியதுபோல் முன்னவர் பேசியதற்குப் பிறகு பின் எவர் பேசுவது என்ற அளவுக்கு அருமையான கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

பாண்டியன் என்று சொல்கிற பெயரில் நாம் தமிழைக் காண்கிறோம். அந்தத் தமிழைக் காண்கின்றபோது அவருடைய சின்னத்தைக் காண்கிறோம். அவனுடைய சின்னம் மீன் சின்னமாக இருந்தது. மீன் தன்னுடைய குஞ்சுகளைப் பார்வையிலேயே பசிபோக்கி வளர்க்கும். மற்றப் பறவைகளைப் போலவோ பிற இனங்களைப் போலவோ உணவையெடுத்து வாயிலே ஊட்டுவது இல்லை மீன்கள். மீன் தன்னுடைய குஞ்சுகளைப் பார்வையாலேயே பசிபோக்கும். ஆதலால்தான் பார்த்தால் பசிதீரும் என்ற பழமொழியே வந்தது. பாண்டியனுடைய சின்னம் மீன். மீனுக்கு இன்னொரு இயல்புண்டு. உப்பு நிறைந்த கடல் நீரிலே வாழ்ந்தாலும் மீனிலே உப்பு ஒட்டுவதில்லை. அதைப்போலவே நீங்கள் அண்ணா தி.மு.க.விலே இருந்தாலும் அந்தக் கட்சியினுடைய சாய்வு, சார்பு தங்கள்மீது ‘ஒட்டாமல்’ நடுநிலைமை தவறாமல், நீதி தட்டாமல் நடுநிலை நின்று இந்த அவையை நடத்துவீர்கள் என்பதிலே எங்களுக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.



1985 பிப்ரவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவையை நடத்திச் செல்கின்ற பாங்கு, முறை, ஒழுங்கு, வழி ஆகியவற்றையெல்லாம் மிகத் தெளிவாகத் தாங்கள் அறிந்திருக்கிறீர்கள். பேரவைத் தலைவருக்குப் பதிலாக தாங்களே பலமுறை இந்த அவையை நடத்திச் சென்றிருக்கிறீர்கள். அந்த அனுபவங்கள் எல்லாம் தங்களிடத்திலே இருப்பதன் காரணமாக இனி வருகின்ற 5 ஆண்டுக் காலத்திலே, இந்த அவையை, மிகச் சிறப்போடு, சிறப்புற நடத்திச் செல்வதற்கான முழுத் தன்மை தங்களிடத்திலே அமைந்திருக்கிறது என்பதிலே நாங்கள் எல்லாம் உள்ளபடியே பூரிப்பும் பெருமையும் கொள்கிறோம். அந்த வகையிலே தங்களுக்குச் சிறந்த அனுபவம் இருக்கிறது. இந்த அவையை நடத்திச் செல்லவிருக்கின்ற தாங்கள் இந்த அவை எப்படி, எப்படி நடந்து சென்றது என்பதை எல்லாம் அறிந்து, அதற்கேற்றபடி நடத்திச் செல்வதற்கான முழு தன்மைகளையும் பெற்றிருக்கிறீர்கள். அது மட்டுமல்லாமல், அதற்கான முழு அதிகாரத்தையும் பெற்றிருக்கிறீர்கள்.

சட்டமன்றத்திற்குத்தான் அத்தகைய முழு அதிகாரம் இருக்கிறது. இந்தச் சட்டமன்றப் பேரவையிலே ஆற்றப்படுகின்ற உரைகளை வைத்தோ, நடத்தப்படுகின்ற தன்மைகளைப் பொறுத்தோ, எடுத்து வைக்கின்ற கருத்துக்களைப் பொறுத்தோ, எடுக்கின்ற முடிவுகளைப் பொறுத்தோ, கேள்வி கேட்கின்ற தன்மைகளோ, தடுத்து நிறுத்துகின்ற தன்மைகளோ, இந்த அவையிலே எந்த ஒரு அமைப்புக்கும்—தனி அதிகாரம்—கிடையாது. சட்டமன்றத்திற்குள்ளே பேசுகின்ற பேச்சுக்கள், எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள், ஆகியவைகளைப் பற்றியோ, பிரச்னைகளை, கருத்துக்களை, பேச்சுக்களைப் பற்றியோ, கேள்வி கேட்கவோ, அதனை மாற்றுவதற்கோ நீதி மன்றத்திற்குக் கூட உரிமை இல்லை. அவ்வளவு பெரிய அதிகாரத்தையும், அவ்வளவு பெரிய உரிமையையும் இந்த அவை பெற்றிருக்கிறது. அதை வழிநடத்திச் செல்வதில் யாரும் குறை கூறாத அளவுக்கு, குற்றம் சொல்லாத அளவுக்கு, நடத்திச் செல்கின்ற பொறுப்பு இந்த அவையிலே இருக்கின்ற 234 உறுப்பினர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டிய, வழி நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பொறுப்பு தங்களிடத்திலே இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 பிப்ரவரி 27

பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே கூட தலைவர் முழு அதிகாரத்தையும் படைத்தவர் என்பதைக் காண்பிப்பதற்காகத்தான் தலைவர் வருவதற்கு முன்னால் 'மாஸ்ட்' என்று ஆங்கிலத்திலே சொல்கின்ற செங்கோலை எடுத்துக் கொண்டு அவைக்கு வருவதும், பிறகு அவர் எழுந்து செல்கின்றபொழுது, அவரோடு செங்கோலை எடுத்துக்கொண்டு திரும்புவதையும் அங்கு ஒரு மிக முக்கியமானதாக வைத்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்தைப் பொறுத்த வரையிலே, பாராளுமன்றத்தினுடைய அவைத் தலைவராக ஒருவர் ஆகிறார் என்றாலே அது மிக அதிசயிக்கத்தக்க ஒன்றுதான். அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு வருவதே மிகக் கடினமான ஒன்று என்பதை நாட்டிலே நடக்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் காட்டுகின்ற வகையிலே, இப்பொழுது இந்தப் பெரும் பொறுப்பைத் துணிவோடு தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதிலே மிக்க மகிழ்ச்சி.

உலகத்திற்கே பாராளுமன்றத்தையும் பாராளுமன்ற முறைகளையும் கற்றுக் கொடுத்தது பிரிட்டிஷ் பாராளுமன்றம்தான். 14, 15, 16-வது நூற்றாண்டுகளில் எல்லாம் கூட அரசனுடைய ஆளாகத்தான் பாராளுமன்றத்தினுடைய தலைவர் வீற்றிருந்தார். பாராளுமன்றம் எடுத்துச் சொல்கின்ற கருத்தை அரசனுக்குச் சொல்கின்ற காரணத்தாலேதான் அவருக்கு 'ஸ்பீக்கர்' என்ற பெயரே ஏற்பட்டது. பேசுபவர் என்றுதான் வைத்திருந்தார்கள். தெளிவாக நாம்தான் அதை அவைத் தலைவர் என்று பொருத்தமாக மாற்றி வைத்திருக்கிறோம். பேசுபவர் என்று சொன்னால் உள்ளபடியே "The Speaker does not Speak". என்றுதான் சொல்வார்கள். பேசுபவர் என்று தேர்ந்தெடுக்கப்படுபவரே தவிர, அவர் பேசுவதற்கு ஒன்றும் இல்லை என்றுதான் எடுத்துச் சொல்வார்கள். அரசனோடு பேசுவதற்காக வைத்திருந்த காலத்தில் யாரும் அரசனிடத்திலே போய் தைரியமாகப் பேச முன் வரமாட்டார்கள் என்பதற்காக— இப்பொழுது நாமும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அவரை அழைத்துக் கொண்டு போய் உட்கார வைத்தோம்; அப்பொழுது அழைத்துக் கொண்டு போய் உட்கார வைக்க மாட்டார்கள்— இழுத்துக் கொண்டு போய்தான் உட்கார வைப்பார்கள். அந்த வகையிலே ஆளுங்கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவரும்



1985 பிப்ரவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஓடுவார்கள், உன்னைத்தான் இந்தப் பாராளுமன்றத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறோம், அந்த வேலை உனக்குத்தான், என்றவுடனே, எனக்கு வேண்டாம், அரசனால் நான் வெட்டப்படலாம், அந்தக் கதி என்றைக்காவது ஒருநாள் எனக்கு வரும். அந்த வேலை எனக்கு வேண்டாம் என்று ஓடுவார்கள். அப்படி ஓடி விடாமல் தடுப்பதற்காகத்தான் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து நிறுத்துவார்கள். அப்படி பிடித்து இழுத்துக் கொண்டு வருகிற போக்கு இன்னமும் இருக்கிறது. ஆனால் இப்போது நாங்கள் இழுத்துக் கொண்டு போய் உட்கார வைக்கவில்லை. அழைத்துக்கொண்டு போய் தான் உட்கார வைத்திருக்கிறோம். அந்த நிலை மாறி இன்றைக்கு ஒரு கட்சியினுடைய தலைவராக இருந்து பாடுபடுகிற அளவிற்கு 16, 17, 18 நூற்றாண்டுகளில் பிரிட்டிஷ் பார்லியமெண்டில் வந்தது.

கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, உறுப்பினர்களுக்கு அப்பாற்பட்டு தனித்து இயங்குகிற தன்மையை ஒரு சபாநாயகர் பெறவேண்டும் என்பது 19 ஆம் நூற்றாண்டிலே ஏற்பட்டு 20 ஆம் நூற்றாண்டு வரையிலும் அது கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையிலேதான் நேற்று வரையில் நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக இருந்து, அந்தக் கட்சிப் பற்றோடு பணிகளை ஆற்றிக்கொண்டு வந்தாலும் கூட, இன்றிலிருந்து நீங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டிய பெரும் பண்போடு, பெருந்தன்மையோடு பணியாற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். அந்த மரபைத்தான் இந்த அவையிலே இதற்கு முன்னால் தலைமை தாங்கி நடத்திக்கொண்டு வந்தவர்கள் ஒவ்வொருவரும் நிலைநாட்டி வந்திருக்கிறார்கள். தாங்களும் அந்த அளவிற்கு, எங்கள் கட்சியைச் சார்ந்தவர் என்றாலும்கூட, கட்சி உறுப்பினராக இருந்தாலும், அடுத்து நடைபெறுகிற தேர்தலிலே கட்சி சார்பாக போட்டி போடுகின்ற தன்மை இந்த நாட்டைப் பொறுத்தவரையிலும் இருக்கிறது என்றாலும் கூட, இந்தப் பொறுப்பிலே தாங்கள் இருக்கிறபோது கட்சி உணர்விற்கு அப்பாற்பட்டு நின்று, கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நின்று, இந்த அவையிலே இருக்கிற 234 உறுப்பினர்களையும் ஒருசேர நினைத்து தாங்கள் நடுவராக இருந்து தீர்ப்பளிக்க

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 பிப்ரவரி 27

வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறீர்கள். இங்கே ஏற்படுகிற எந்த ஒரு பிரச்சினைக்கும் இறுதி முடிவு வழங்க வேண்டியவர் தாங்களாகத்தான் இருக்கிறீர்கள். ஆகவே இரு சாராரையும் கேட்டு அதற்குத் தீர்ப்பு வழங்க வேண்டிய பொறுப்பும் தங்களிடத்தில் இருக்கிறது.

“சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி”

என்று வள்ளுவர் பெருந்தகையார் கூறியதற்கிணங்க இருந்து, “சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை அவைத் தலைவருக் கணி” என்று நாம் சொல்லத்தக்க அளவிற்கு இருத்தல் வேண்டும். ‘சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்’ என்பதற்கு உரையெழுத வந்த பரிமேலழகர் கூட முதலிலே துலாக்கோல் போல தன்னை சமன்செய்து கொண்டு பிறகு சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று உரை எழுதினார். ஆகவே சமன்செய்து என்பதற்கு தன்னைத்தானே முதலில் சமன் செய்துகொள்ள வேண்டும். பிறகு பிரச்னைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இதற்கு முன்னால் இந்த அவைக்கு புகழையும், பெருமையையும் தேடித்தந்த பல்வேறு அவைத் தலைவர்கள் இருந்து வந்த இடத்திலே தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அந்த மரபு காப்பாற்றப் படும் என்கிற நம்பிக்கை இங்கே இருக்கிற அத்தனை பேருக்கும் உண்டு. அந்த வகையிலே நீங்கள் பிரச்னைகளை அணுகி நடுவ ராக இருந்து—தாங்கள் நீதிபதியாகவும் இருக்கிறீர்கள்.

இந்த அவைக்கோ அல்லது உறுப்பினர்களுக்கோ அல்லது அவையின் நடைமுறைக்கோ யாராவது ஒருவர் தீங்கிழைப்பார்க ளானால், அந்தத் தீங்கிழைப்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கிற உரிமையும் தங்களிடத்திலே இருக்கிறது. உரிமை மாத்திரம் இல்லை, தண்டனை வழங்கும் உரிமையும் தங்களுக்கு இருக்கிறது. தண்டனை வழங்குகிற உரிமை மட்டுமல்ல, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறைக்கு அனுப்புகிற உரிமையும் கூட தங்களுக்கு இருக்கிறது. ஆகவே எந்த ஒரு வழக்கு மன்றத் திற்கும் சென்று அதற்கு மேல்முறையீடு கூட செய்ய இயலாது. இவ்வளவு பொறுப்புகளோடு தாங்கள் அந்தப் பதவியில் அமர்ந் திருப்பதன் காரணமாக, எற்கனவே துணைத் தலைவாக



1985 பிப்ரவரி 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருந்து பணியாற்றி வந்திருப்பதன் காரணமாக இந்த அவை மிக நல்ல முறையில் நடந்து செல்லுமென்ற நம்பிக்கை எங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. அந்த வகையில் எங்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்பும் தங்களுக்கு இருக்குமென் பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே வாதங்கள் எடுத்து வைக்க, கருத்துக்கள் எடுத்து வைக்க, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு பிரச்னைகளை எடுத்து வைக்க எல்லா உறுப்பினர்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமைகளை தாங்கள் எல்லோருக்கும் வழங்கவும் வேண்டும். ஆனால் முறை தவறுகிறபோது, விதிமுறைகள் தவறுகிறபோது அவற்றை தடுத்து நிறுத்தி உறுப்பினர்களை காப்பாற்றவேண்டிய பொறுப்பும் தங்களிடத்தில் இருக்கிறது. அந்த வகையில் தங்க ளுடைய பணிகள் சிறப்பாக நடைபெற நான் ஆளுங்கட்சியின் சார்பாக, இந்த அவையின் முன்னவர் என்ற முறையில் எங்க ளுடைய முழு ஒத்துழைப்பையும் தங்களுக்குத் தருவோம். இங்கே இருக்கிற பெரும்பாலான உறுப்பினர்கள் ஏற்கனவே பாராளுமன்ற அனுபவம் பெற்றவர்கள்; சட்டமன்ற அனுபவம் பெற்றவர்கள். சட்டமன்றத்தில் இருந்து பணியாற்றி புகழையும், பெருமையையும் பெற்றவர்கள். அவர்கள் அத்தனைபேரும் எதிர்க்கட்சி தரப் பிலே அந்தந்தக் கட்சியின் தலைவர்களாக வீற்றிருக்கிறார்கள். அவர்களுடைய முழு ஒத்துழைப்பும் ஜனநாயகத்தைக் காப்பாற்ற இங்கே பயன்படுமென்ற நம்பிக்கை நமக்கு உண்டு. அந்த வகை யிலே தாங்கள் நல்ல அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். இருப்பினும் தாங்கள் உணர்ச்சி வசப்பட்டவர் என்று கொஞ்சம் பெயர் எடுத்த துண்டு. இருந்தாலும் கூட அதை சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் ஓரளவிற்கு பக்குவப்படுத்திக் கொண்டு வந்திருக்கி றீர்கள் என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். எனவே உறுப் பினர்கள் சில சமயங்களில் உணர்ச்சிவசப்பட்டாலும், அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அவர்களை அடக்கி முறைப்படுத்துகிற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில் எல்லோருமே உணர்ச்சிவசப்படுகிறபோது எல்லோரையும்

சேர்த்து அடக்கவேண்டிய பொறுப்பு தங்களைத்தான் சேர்ந்த தாக இருக்கும். குளத்து நீர் வெதும்புமேயானால் ஏரி நீரைக் கொண்டு வந்து கொட்டலாம். ஏரி நீர் வெதும்புமேயானால் பெரும் ஓடை நீரைக் கொட்டலாம். ஓடை நீர் வெதும்புமே யானால் கடல் நீரைக் கொட்டலாம். கடலும் வெதும்புமானால் அதற்கு கொட்டுவதற்கு நீர் இல்லையென்று அகத்துறையில் ஒரு பாடல் உண்டு.

"கடல் நீர் வெதும்பினால் வளவுநீர்
இல்லது போலும்"

என்று ஒரு உவமை அதில் வருகிறது. கடல் நீரே வெதும்பி விட்டால் அதை வளவுவதற்கு வேறு தண்ணீரே கிடையாது. அந்த வகையிலே நாங்கள் எல்லாம் உணர்ச்சிவசப்பட்டாலும் நீங்கள் உணர்ச்சிவசப்படாமல் இருந்து இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

அதைப்போன்று துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1980-ல் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதனால் இப்போது நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இந்த அவையின் தற்காலிகத் தலைவராக இருந்து பலமுறை நல்ல முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களும் இந்த அவையின் பாங்கு, மதிப்புகளை எல்லாம் நன்கு அறிந்திருக்கிறார்கள். துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களும் ஒரு சிறந்த வழக்கறிஞர்; தாங்களும் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஆகையால் சட்ட திட்டங்களை நன்கு அறிந்து, பிரச்சனைகளை அணுக தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் பணியாற்ற வந்திருக்கிறார்கள். எதையும் தெளிவாக எடுத்துச் சொல்லும் பொறுமையும் மனப்பாங்கும் அவர்களுக்கு உண்டு. அவர்கள் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் இந்த அவை அவர்களாலும் தங்களாலும் மிகச் சிறப்பாக நடைபெறும் என்ற நம்பிக்கையில் என்னுடைய பாராட்டுதலையும் போற்றுதலையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



குறிப்பாக, அவை முன்னவர் என்ற முறையில் என் சார்பிலும் ஆளுங் கட்சியின் சார்பிலும் தங்களுக்கும் துணைத் தலைவருக்கும் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களுடைய காலம் மிகச் சிறப்பான காலமாக அமையட்டும். இந்த அவை மேலும் பெருமையோடும் பண்போடும், இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற சட்டப் பேரவைகளுக் கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழுகின்ற முறையில் நம் பணிகளை ஆற்றுவோமாக என்று எடுத்துச் சொல்லி, என்னுடைய பாராட்டுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் சபாநாயகராகவும் மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எதிர் வரிசையில் இருக்கிற அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் நான் பாராட்டுரை வழங்க முன்வருகிறேன்.

தங்களைப் பொறுத்தவரையில், கடந்த எட்டு ஆண்டுகளாக எனக்கு நன்கு தெரியும். நான்கரை ஆண்டுகளாக இந்த அவையிலே துணைத் தலைவராக இருந்து பணியாற்றியிருக்கிறீர்கள். அதனால் தலைவர் ஸ்தானத்திலிருந்து நீங்கள் எப்படி எப்படி இயங்க வேண்டுமென்று நான் சொல்லி, தெரியவேண்டியதில்லை. இருந்தாலும் அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததைப்போல நினைவுபடுத்த வேண்டியது கடமை என்ற முறையில் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

அந்த ஸ்தானத்தில் இருந்து எப்படி எப்படி பணியாற்ற வேண்டும், என்ன என்ன மரபுகளை காப்பாற்ற வேண்டும் என்பவற்றை அவை முன்னவர் அவர்கள் அழகாகச் சொல்லி விட்டார்கள். நீங்கள் தவறாகக் கருத மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற முறை நீங்கள் துணைத் தலைவராக இருந்தபோது சில நேரங்களில் உணர்ச்சிவசப்பட்டிருக்கிறீர்கள். இப்போது அதற்கு இடம் கொடுக்கமாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஏனென்றால் இந்த அவையில் பல்வேறு பெரும் தலைவர்கள் அமர்ந்திருந்து, இந்த அவையின் மரபை நல்ல முறையில் காப்பாற்றியிருக்கிறார்கள்; அது உங்களுக்குத் தெரியும்.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 பிப்ரவரி 27

மேலும் நீங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பல்வேறு சட்டமன்றத் தலைவர்கள் மாநாடுகளில் கலந்துகொண்டு, நல்ல பல அறிவுரைகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். அதைவிட புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. இருந்தாலும் அவை முன்னவர் அவர்கள் கூறியதுபோல, இருபது நிமிடங்களுக்கு முன்புவரையில் ஒரு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தீர்கள்; இப்போது அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த மன்றத்தின் பொதுவான ஒரு தலைவராக விளங்குகிற காரணத்தால் பாரபட்சம் இல்லாமல் நீங்கள் நடந்துகொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஆங்கிலத்தில் 'Hanging of the Democles Sword' என்று சொல்வார்கள்; அது இங்கு இல்லை. இருந்தாலும் அது இருக்கிறது என்று கருதி நீங்கள் பணியாற்ற வேண்டும்.

நீங்கள் எம்.எல். படித்தவர்கள். இதுவரை ஒரு சார்பினருக்காக வாதாடி இருக்கிறீர்கள். இங்கு அந்த சார்பு இல்லை. 234 உறுப்பினர்கள். நியமன உறுப்பினரோடு 235 உறுப்பினர்களின் நலன்களையும் காப்பாற்ற வேண்டியவர் நீங்கள். உறுப்பினர்களுக்கு உள்ள ஒரு குறைபாடு நீங்கள் சரியான அளவில் நேரம் கொடுப்பது இல்லை என்பது. அதை எண்ணிப் பார்த்து, நீங்கள் எல்லோருக்கும் பேச சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். எங்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. 'எங்கள்' என்றால், எதிர் வரிசையில் இருக்கிறவர்கள். ஆளும் கட்சியினர் நலன்களைப் பாதுகாப்பதும் உங்களுடைய பொறுப்புதான்.

இந்த அவையில் முன்னாள் தலைவர்களாக இருந்தவர்கள் மிகப்பெரும் அறிஞர்கள். அவர்கள் நல்ல முறையில் பணியாற்றி, இந்தியாவிலே மிகச் சிறந்த சபாநாயகர்கள் என்ற பெயரை அடைந்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்கெனவே நல்ல அனுபவம் பெற்றிருக்கிறீர்கள். அதைப்பற்றி நான் சொல்லத் தேவையில்லை. இருந்தாலும் இந்த நேரத்தில் ஞாபகப்படுத்த வேண்டியது என் கடமை என்பதால் குறிப்பிடுகிறேன்.

அடுத்து இப்போது பல புதிய உறுப்பினர்கள் எல்லாக் கட்சியிலும் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவ்வப்போது நீங்கள் நல்ல பல ஆலோசனைகளைச் சொல்லி—மிகச் சிறப்பான முறையில் நீங்கள் நடத்திச் சென்றாலும், உங்கள் உத்தரவின்



1985 பிப்ரவரி 27] [பேரவைத் தலைவர்]

மற்றொன்று, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மதிப்பை, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அந்த உரிமைகளைப் பாதுகாத்துத் தருவேன் என்பதை, பேரவைத் தலைவர் என்ற முறையில் நான் இங்கே உங்களுக்குச் சொல்லிக் கொள்கின்றேன். ஆகவே, நீங்கள் அனைவரும் இந்த 5 ஆண்டுக்காலத்தில் எங்களோடு ஒத்துழைத்து, இந்தப் பாரம்பரியம் மிக்க சட்டமன்றம் தமிழக மக்களுக்கு நல்ல முறையில் செயலாற்றுவதற்கு, உங்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும்.

நேரத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கேள்வி நேரம்தான் ஒரு சிக்கலான நேரம். எல்லோரும் வாய்ப்பு வேண்டுமென்று கேட்பீர்கள். நான் எல்லோரையும் பார்ப்பேன். ஆனால், பார்த்தவர்களைச் சில நேரத்தில் அழைக்க மாட்டேன். அதை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. காரணம் காலம்தான். கேள்வி நேரம் ஒரு மணி நேரம்தான்.

அதேபோல்தான் நம்முடைய பேரவையின் அலுவல் நேரம் 1½ மணி வரை. அதற்குள் எல்லா உறுப்பினர்களும் பேசக்கூடிய அளவுக்கு, எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நேரம் அதிகமாக வேண்டுமானால் நாம் நம்முடைய பணி நேரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லக் கூடியவர்கள் நம்முடைய பத்திரிகை நிருபர்கள். அவர்கள் அனைவரும் இந்த 7 ஆண்டுக்காலமும் என்னோடு நெருங்கிப் பழகியவர்கள். அவர்களுடைய ஆதரவு எனக்கு உண்டு என்பது நிச்சயமாக அவர்களுக்கும் தெரியும், எல்லோருக்கும் தெரியும். அவர்கள் இங்கே இருக்கக்கூடிய விவாதங்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் எப்படி இதற்கு முன்பு பணியாற்றினார்களோ, அதைவிட நல்லமுறையில் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்பதை நான் வேண்டுகோளாகச் சொல்கிறேன். காரணம், பத்திரிகையின் மூலமாகத்தான் நம்முடைய நிகழ்ச்சிகளைப் பாமர மக்கள் தெரிந்து கொள்கிறார்கள். இங்கே எந்த அளவுக்கு நாம் பணியைச் செய்கிறோம் என்பதை மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப்

பாலமாக பத்திரிகையில் நண்பர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அதை அவர்களோடு நான் பேசிக் கொள்கிறேன். பத்திரிகை நண்பர்களை நான் கேட்டுக்கொள்வேன், நிகழ்ச்சிகளை மக்களுக்கு எப்படிச் சொன்னால், மக்களுக்கு எதைச் சொன்னால் நன்மை பயக்கும் என்பதை எண்ணிப் பார்த்து நீங்கள் வெளியிடுங்கள் என்பதை நான் இங்கே வேண்டுகோளாகச் சொல்கிறேன். அந்த அளவுக்கு உறுதுணையாக இருங்கள்.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு, இந்தக் குடியாட்சி முறையைப் பாதுகாப்பதற்கு, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைத்து, வருகின்ற காலங்களில் பணியாற்றுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். இங்கே வந்திருக்கிற புதிய உறுப்பினர்கள் விதிமுறைகளைத் தெரிந்து கொள்வார்கள், தெரிந்து கொள்ளுங்கள். நம்முடைய பழைய உறுப்பினர்கள், மூத்த உறுப்பினர்கள் நல்லமுறையில் உங்களுக்குப் பாராளுமன்ற முறைகளைச் சொல்லித் தருவார்கள். அதையும் பின்பற்றி எல்லோரும் செயல்படுவோமானல் நம் பணி நிச்சயமாக நல்ல முறையில் அமையும்.

என்னைப் பொறுத்தவரையில் நான் இன்று முதல் என்னை உங்களுடைய கையிலே ஒப்படைக்கிறேன். என்னைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, இந்த அவையை நடத்தக்கூடிய பொறுப்பு உங்கள் கையில் இருக்கிறது. நான் உணர்ச்சி வயப்படுவதாகச் சொன்னீர்கள். நான் இனிமேல் உணர்ச்சிவயப்படவே மாட்டேன். நீங்கள் அந்த அளவுக்கு என்னைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காகத்தான் அதைச் சொல்கிறேன்.

நம்முடைய பேரவைச் செயலாளர் (பொறுப்பு) திரு. சி. கே. இராமசாமி அவர்களை நான் இந்த நேரத்தில் பாராட்ட, வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பேரவைச் செயலாளர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகு இங்கே இருக்கக்கூடிய பணிகளை நல்ல முறையில் செய்து



இருக்கிறார்கள். பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல்களை நல்ல முறையில் நடத்தி முடித்து இருக்கிறார்கள். பேரவை உறுப்பினர்களுடைய பதவிப் பிரமாணங்களை நல்ல முறையில் எல்லோருக்கும் ஒத்துழைத்து செய்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றி சொல்கின்றேன்.

இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கக்கூடிய அரசு அலுவலர்களுக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வளாகத்தில் இருக்கக்கூடிய அனைவருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் இந்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்காக நண்பர்கள் வந்திருக்கிறார்கள். அதிகாரிகள் வந்திருக்கிறார்கள், சட்டமன்றத் துறையைச் சேர்ந்தவர்களும் வந்திருக்கிறார்கள், பணியாளர்களும் வந்திருக்கிறார்கள். இங்கே காவல் பணி புரியக்கூடிய அலுவலர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றி சொல்லி, என் சார்பிலும், பேரவைத் துணைத் தலைவர் சார்பிலும் நன்றி சொல்லி, இந்தச் சட்ட மன்றம் மக்களுக்காகப் பணி செய்வதற்கு எல்லோரும் ஒத்துழைத்துச் செயல்படுவோம் என்று சொல்லி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிகின்றன. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்கனவே அறிவித்துள்ளபடி ஆளுநர் உரைக்காகச் சட்டமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் கூட்டம் 8—3—1985, வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 9—3—1985 காலை 10.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11-20 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1985 பிப்ரவரி 27

## பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டத்தின் கீழ் பரூர் மைய வங்கியை அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் பட்டியலில் சேர்த்துக் கொள்வது குறித்து வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 7—7—1984 ஆம் நாளிட்ட 735 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிட்டு நிதி விதியை இயற்றுவது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 12—4—1984 ஆம் நாளிட்ட 417 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு சிட்டு நிதிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 40/1982) 89 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

3. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது தொர்பாக மதுவிலக்கு ஆய்த்திர்வைத் துறையின் 9—2—1984 ஆம் நாளிட்ட 176 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வலுக்குறைந்த சாராயம், மேதில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் (பிரஞ்சு பாலிஷ்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது தொடர்பாக மதுவிலக்கு—ஆய்த்தீர்வைத் துறையின் 24—1—1984 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1985 பிப்ரவரி 27]

5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கள் மற்றும் சாராயக் கடைகள் (ஏலம் விடுதல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு—ஆயத் தீர்வைத் துறையின் 8—3—1983 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் மதுவிலக்குச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

6. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1968 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 14 ஆம் நாளிட்ட II—1. 3467 மற்றும் 3468, 1968 ஆம் எண் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள இராசபாளையம் மற்றும் சாத்தூர் அங்காடிகள் பகுதியிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 14—8—1984 ஆம் நாளிட்ட 1575 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

7. 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் 5(4) பிரிவின் கீழ் வெளியிடப்பெற்ற சில அறிவிக்கைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 14—8—1984 ஆம் நாளிட்ட 1574 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

8. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1969 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4 ஆம் நாளிட்ட II—1/634/1970 ஆம் என் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 10—8—1984 ஆம் நாளிட்ட 1545 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1985 பிப்ரவரி 27

9. வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28 ஆம் நாளிட்ட II-1/5390/1973 ஆம் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 23—8—1984 ஆம் நாளிட்ட 1632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

10. அன்றைய உணவு மற்றும் வேளாண்மைத் துறையினால் வெளியிடப்பட்ட 1962 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாளிட்ட 4781/1962 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 21—5—1984 ஆம் நாளிட்ட 972 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

11. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு சினிமா (முறைமைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது தொடர்பாக உள்துறையின் (சினிமா) 1—8—1983 ஆம் நாளிட்ட 1535 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு சினிமா (முறைமைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

12. இருதயத் துடிப்பு சாதனம் விற்பனை தொடர்பாக செலுத்தத் தக்க வரியைப் பொறுத்தமட்டில் வரி விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 20—9—1984 ஆம் நாளிட்ட 1057 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1985 பிப்ரவரி 27]

13. சென்னை 600 032, திருவான்மியூர் சுந்தர் அக்ரிபான்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் தயாரித்த "பர்பியூரல்" விற்பனை குறித்து செலுத்தத் தக்க வரியைப் பொறுத்தவரையில் வரி விலக்களிப்பது தொடர்பாக, வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 25—9—1984 ஆம் நாளிட்ட 1069 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

14. சென்னை-34 குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு ஆம்புலன்ஸ் வேன் விற்றது தொடர்பாக அந்நிறுவனம் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில் விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 24—9—1984 ஆம் நாளிட்ட 1068 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

15. "கொப்பரை" தேங்காய் விற்பனை குறித்து செலுத்தத் தக்க வரியைப் பொறுத்தவரையில் வரி விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 26—9—1984 ஆம் நாளிட்ட 1079 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

16. திருச்சிராப்பள்ளி பர்மா பஜார் வணிகர்கள் சங்கத்தின் பர்மா அகதிகள் வியாபாரிகள் தயாரித்த பொருள்களின் விற்பனை குறித்து செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது, மற்றும் திருச்சிராப்பள்ளியிலுள்ள சிங்காரத் தோப்பில் கடைப் பகுதி கட்டி முடியும்வரை பர்மா அகதிகள் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து 17—8—1984 முதல் இரண்டு ஆண்டுகள் அல்லது கடைப் பகுதி கட்டி முடிக்கும் வரை விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—அறநிலையத் துறையின்

20—9—1984 ஆம் நாளிட்ட 1056 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

17. தமிழ்நாடு 1933 ஆம் ஆண்டு தமிழ்நாடு நல நிதி விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக தொழிலாளர் நலத் துறையின் 7—8—1984 ஆம் நாளிட்ட 1765 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை விற்றல்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக வருவாய்த் துறையின் 27—7—1984 ஆம் நாளிட்ட 1232 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

19. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வலுக் குறைந்த சாராயம்—மெதில் ஆல்கஹால் மற்றும் மெருகு எண்ணெய் (பிரஞ்சு பாலீஸ்) விதிகளில் திருத்தம் செய்வது தொடர்பாக மதுவிலக்கு—ஆயத் தீர்வை துறையின் 27—1—1984 ஆம் நாளிட்ட 99 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

20. 1940 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 21—8—1984 ஆம் நாளிட்ட 1852 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் V/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].





21. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 1—10—1984 ஆம் நாளிட்ட 1102 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

22. வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட 1959 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாளிட்ட எஸ்.ஆர்.ஓ. என் . —1966/1959 ஆம் என் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 25—9—1984 ஆம் நாளிட்ட 1972 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

23. வருவாய்த் துறையினால் வெளியிடப்பட்ட 1962 ஆம் ஆண்டு மே திங்கள் 22 ஆம் நாளிட்ட எஸ்.ஆர்.ஓ. என். 2437/1962 என் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறநிலையத் துறையின் 25—9—1984 ஆம் நாளிட்ட 1071 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

(1) 1984 ஆம் ஆண்டு பேரவை விதிகள் குழுவின் அறிக்கை மற்றும் நடவடிக்கைக் குறிப்புகள் (தொகுப்பு—I (T & I) (ஏழாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tinnevelly) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandrian Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2573/அதா/85 2817
Issued 27-6-85
29 அக் 1985

வெளியீடு 27-6-85]

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 9, 1985 - தொகுதி I எண் 3
Saturday the 9th March 1985 - Volume I No 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

## உள்ளடக்கம்

9—3—1985


| | பக்கங்கள் |
|---|---|
| 1. இரங்கல் குறிப்புகள்— | |
| முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் மறைவு குறித்து .. | 63—66 |
| 2. இரங்கல் தீர்மானம்— | |
| முன்னாள் இந்திய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் மறைவு குறித்து .. | 66—101 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 67—75 |
| திரு. உ. சுப்பிரமணியன் .. .. | 75—78 |
| திரு. க. அன்பழகன் .. .. .. | 78—84 |
| திரு. கு. ரமணி .. .. .. | 84—88 |
| திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் .. .. | 88 |
| திரு. பொ. உத்திராபதி .. .. | 88—90 |
| திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் .. .. | 90—93 |
| திரு. குமரி அனந்தன் .. .. .. | 93—99 |
| 3. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 101—108 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 9, சனிக்கிழமை,

மாசி 26, ரக்தாட்சி, திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்.

முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. எம். சிவராமன் அம்பலம் 19–10–1984 ஆம் தேதியன்றும், டாக்டர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் 21–10–1984 ஆம் தேதி யன்றும், அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களான திரு. சி. புல்லாரெட்டி அவர்கள் 9–11–1984 ஆம் தேதியன்றும், திரு. ஜி. செல்வபதி செட்டியார் அவர்கள் 6–1–1985 ஆம் தேதியன்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எஸ். எம். துரை ராஜ் அவர்கள் 22–1–1985 ஆம் தேதியன்றும், தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், தற்போதைய பாராளுமன்ற மக்கள் அவையின் உறுப்பினராக இருந்த திரு. கே.டி. கோசல்ராம் அவர்கள் 27–1–1985 ஆம் தேதியன்றும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்க ளான திரு. கே. ராஜாராம் நாயுடு அவர்கள் 28–1–1985 ஆம் தேதி யன்றும், திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் 29–1–1985 ஆம் தேதியன்றும், தற்போதைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு. ஒய் சண்முகம் அவர்கள் 12–1–1985 ஆம் தேதியன்றும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினரான திரு. எஸ். முத்து அவர்கள் 5–11–1984 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1985 மார்ச் 9

திரு. எம். சிவராமன் அம்பலம் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை, மதுரை மாவட்டம் மேலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். அவர் மதுரை மாவட்ட கழகத்தின் (Madurai District Board) உறுப்பினராகவும், மேலூர் வட்டக் கழகத்தின் (Taluk Board) உறுப்பினராகவும், மற்றும் வெள்ளலூர் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

டாக்டர் திருமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரையிலும் இரு முறை முறையே மதுரை மாவட்டம் ஆத்தூர் மற்றும் வேடசந்தூர் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் திண்டுக்கல் தொகுதியிலிருந்து பாராளுமன்ற மக்கள் அவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்று, மத்திய அமைச்சரவையில் கல்வித்துறை துணை அமைச்சராகவும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. சி. புல்லா ரெட்டி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை, அதாவது ஆந்திர மாநிலம் அமையும் வரை, தற்போது ஆந்திர மாநிலத்திலிருக்கும் நந்திகொட்கூர் தொகுதியிலிருந்து, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜி. செல்வபதி செட்டியார் அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரை 'சென்னை நெசவுத் தொழிலாளர் தொழிற் சங்கம்' தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொழிற் சங்கம் துவக்கியவரான இவர் இந்திய தொழிற் சங்க சட்டம் வருவதற்கான மூல காரணகர்த்தா ஆவார்.

திரு. எஸ். எம். துரைராஜ் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருநது 1976 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் (ரிசர்வ்) தொகுதியிலிருந்தும், 1977 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டு வரை செங்கல்பட்டு மாவட்டம் பொன்னேரி (செ.வ.) தொகுதியிலிருந்தும் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் 1980 ஆம் ஆண்டு வரை



1985 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

முதல் அமைச்சரின் பேரவைச் செயலாளராகவும் (Parliamentary Secretary) பணிபுரிந்துள்ளார். சென்னை மாநகராட்சி உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். மேலும் அவர் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியத்தின் தலைவராகவும் இருந்து வந்தார்.

திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை தூத்துக்குடி பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1954 ஆம் ஆண்டு வரையும், 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் திருநெல்வேலி மாவட்டம் சாத்தான்குளம் தொகுதியிலிருந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். 1958 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் பாராளுமன்ற மக்கள் அவைக்கு 1977 ஆம் ஆண்டிலிருந்து 1979 ஆம் ஆண்டு வரையும், 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையும், 1984 ஆம் ஆண்டு தற்போதைய பாராளுமன்ற மக்கள் அவைக்கும், திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியிலிருந்தும் மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். இளம் வயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட இவர் பல முறை சிறை சென்றவர்.

திரு. கே. ராஜாராம் நாயுடு அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் திருமங்கலம் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்கும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தேர்நதெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரையும், 1970 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் இரு முறை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இளம் வயதிலேயே, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு நான்கு முறை சிறை சென்றவர். 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை தலைமை கொறடாவாகவும், 1952 ஆம் ஆண்டிலிருந்து 1953 ஆம் ஆண்டு வரை நிதி அமைச்சரின் பேரவைச் செயலராகவும் (பார்லிமென்டரி செக்ரட்டரி) 1953 ஆம் ஆண்டிலிருந்து 1954 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அமைச்சரவையில் உள்ளாட்சித்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

மேலும் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1968 ஆம் ஆண்டு வரையும், 1969 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையும் சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் 1957 ஆம் ஆண்டிலிருந்து 1962 ஆம் ஆண்டு வரை வட ஆற்காடு மாவட்டம், போளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு. ஓய். சண்முகம் அவர்கள், சட்ட மன்ற உறுப்பினராகத் தமது பணியைத் தொடங்கு முன்பே எதிர்பாராவகையில் இயற்கை எய்தியது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

திரு. எஸ். முத்து அவர்கள் 1966 ஆம் ஆண்டிலிருந்து 1978 ஆம் ஆண்டு வரையும், மீண்டும் 1980 ஆம் ஆண்டிலிருந்து சட்ட மன்ற மேலவை உறுப்பினராக நல்ல முறையில் பணியாற்றி உள்ளார். 1936 ஆம் ஆண்டு முதலே அரசியலில் ஈடுபட்ட இவர் திராவிட இயக்கங்களில் பெரும் பங்கு பெற்றார். இந்தி எதிர்ப்பு கிளர்ச்சியில் பங்கேற்று ஓராண்டுக் காலம் சிறை வாசம் இருந்தார். 1957 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரை மதுரை நகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். மதுரை மாநகராட்சியின் முதல் மேயராக பொறுப்பேற்று சீரிய முறையில் பணிபுரிந்துள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

### முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1966 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையிலும் மீண்டும் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரையிலும் இந்திய நாட்டின் பிரதமராக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 31-10-1984 அன்று சுடப்பட்டு மரணம் அடைந்த துயரமான செய்தியை இந்தப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"இந்தியப் பெருநாட்டின புகழுக்கும், பெருமைக்கும் உரிய தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தவரும், இந்திய மக்களின் அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக நாட்டை நன் முறையில் வழிநடத்திச் சென்றவரும், நாட்டின் ஒருமைப்பாட்டு உணர்வு ஓங்கவும்-ஜனநாயக முறையும் பண்பும் வளரவும்-பாது காப்பு வலிவு பெறவும் அரும்பாடுபட்டு வந்தவரும், மன்னர் மானியத்தை அறவே ஒழித்து முழு மக்களாட்சி முறைக்கு வழி கோலியவரும், நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உறு துணை புரிகின்ற வகையில் பெரிய வங்கிகளை நாட்டுடைமை யாக்கியவரும், சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழை-எளிய மக்கள் நல்வாழ்வு பெற வேண்டியும், சமுதாயம் வளர்ச்சி பெற வேண்டியும் இருபது அம்சத் திட்டத்தை உருவாக்கி, அதனை நடைமுறைப் படுத்திக் காட்டியவரும், 1983 ஆம் ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட அணி சேரா நாடுகளை ஒன்று சேர்த்து, அவற்றின் ஆட்சித் தலைவர்கள் அடங்கிய மாநாட்டினைப் புது டில்லியில் சிறப்பாகக் கூட்டி, அந்த மாநாட்டின் தலைமைப் பொறுப்பையும் ஏற்று, அதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டியவரும், அதே ஆண்டில் நாற்பதுக்கும் மேற்பட்ட காமன் வெல்த் நாடுகளின் தலைமை அமைச்சர்களின் மாநாட்டைப் புதுடில்லியில் கூட்டி இந்தியாவின் புகழை நிலைநாட்டியவரும், ஆசிய விளையாட்டுப் போட்டிப் பந்தயங்களை நடத்திக் காட்டி இந்தியாவின் செயல் திறனை வெளிப்படுத்தியவரும், 1983 இல் ஐக்கிய நாடுகள் அரங்கத்தில் பேருரை நிகழ்த்தி, அகில உலகத் தலைவர்களின் பாராட்டுதலையும், வரவேற்பையும் பெற்றவரும், உலக அரங்கில் இந்தியாவின் பெருமையையும், புகழையும் உயர்த்த அயராது பாடுபட்டவரும், தம்முடைய அறிவுத்திறன்-ஆற்றல் திறன்-பண்பாட்டுத் திறன்-செயலாற்றும் திறன் மன உறுதி-விடாமுயற்சி ஆகியவற்றால் தாய்நாட்டுக்குத் தொண்டு புரிவதையே தம்முடைய வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டிருந்தவரும், புதிய பொலிவு மிக்க இந்தியாவை உருவாக்க தம் வாழ்க்கையையே ஈந்தவரும், இந்திய மக்களின் ஒரு பெருந்தலைவராக விளங்கியவருமான மாண்புமிகு திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31 ஆம் நாள், கயமைப் பண்பு கொண்ட வன்முறைக் கொடுமையாளர்களின் கோரப் படுகொலைக்கு இரையாகிவிட்டார்கள் என்பது, இந்த அவையினர்க்குப் பேரதிர்ச்சியையும், பெருந் துயரத்தையும், பெருந் துக்கத்தையும் அளிப்பதாகும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 9

(முற்பகல் 10-10)

மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தியாவுக்காகவே வாழ்ந்தார்கள்—இந்தியாவுக்காகவே மறைந்தார்கள். அவர்கள் சாதி-மதம்-இனம்-மொழி-நிறம் போன்ற வேறுபாடுகளையெல்லாம் கடந்து நின்று, நாட்டின் ஒற்றுமையைக் காக்க பெரு முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களின் எதிர்பாராத மறைவு உலகப் பெருந்தலைவர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியது; உலக நாடுகள் அனைத்தையும் துக்கத்தில் ஆழ்த்திற்று; உலக மக்கள் அனைவரையும் கலங்க வைத்தது.

மறைந்த மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் கொண்டிருந்த, உயர்ந்த குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதும், எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்ட சிறந்த திட்டங்கள் அனைத்தையும் செயல்முறைப்படுத்துவதுமே இந்தியாவிலுள்ள அனைவரின் நீங்காக் கடமையாகும்.

ஆற்றொணாத் துக்கத்திலும், துயரத்திலும் ஆழ்ந்திருக்கும் அவரது அருமைச் செல்வரும், இந்தியாவின் தலைமை அமைச்சருமான மாண்புமிகு திரு. இராஜீவ் காந்தி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர்க்கும் இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் - இரங்கலையும்-பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது.'' 20-ம் நூற்றாண்டில் உலகம் முழுவதையும் உலுக்குகின்ற வகையிலும், உலகத்திற்குப் பேரதிர்ச்சி தருகின்ற வகையிலும் நடந்த அரசியல் படுகொலைகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் 79 அரசியல் படுகொலைகள் நடந்திருக்கின்றன. அதிலே நம்முடைய நாட்டிலே நடைபெற்றது, 1948-வது ஆண்டு ஜனவரி திங்கள் 30-வது நாள் அண்ணல் காந்தி அடிகள் படுகொலைக்கு ஆளானார்கள். அதற்குப் பிறகு எல்லா மக்களையும் உலுக்குகின்ற வகையிலும் எல்லா மக்களுக்கும் பேரதிர்ச்சியும் தருகின்ற வகையிலும் நடந்த படுகொலை 1984-வது ஆண்டு அக்டோபர் திங்கள் 31-வது நாள் இந்திய நாட்டினுடைய தலைமை அமைச்சராக விளங்கிய இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் படுகொலைக்கு ஆளாகியதாகும். உலகத்திலே அரசியல் படுகொலைகள் நடந்திருக்கின்ற விதங்களை எல்லாம் பார்த்தோமானால் உள்ளபடியே பகைவர்களால் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டது உண்டு; பகைவெறி படைத்த படைத் தலைவர்களால் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டது உண்டு; பகைக் கட்சியினராலும் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டது உண்டு; ஆனால் பாதுகாப்புக்காக இருந்த பாதுகாவலர்களாலேயே சுட்டுக் கொல்லப்படுவது என்கின்ற வியப்புக்குரிய, விசித்திரமான, பேரதிர்ச்சி தரக்கூடிய படுகொலைக்கு ஆளானது இந்தியாவின் பிரதமர் மாண்புமிகு இந்திரா காந்தி ஆவார்கள். 79 அரசியல் படுகொலைகளைக் காணும்போது, ஒரு நாட்டில் மிக





முக்கியத்துவம் வாய்ந்த, புகழும் பெருமையும் படைத்த ஒரு பெண்மணி படுகொலைக்கு ஆளாவது இதுதான் முதல் தடவையாக அகில உலகத்திலும் அமைந்திருக்கிறது. ஒரு நாட்டினுடைய அதிபர் படுகொலைக்கு ஆளாகிறார் என்பதே அதிர்ச்சி தரக்கூடியது. அதுவும் ஒரு பெண்மணி படுகொலைக்கு ஆளாகிறார் என்பது பேரதிர்ச்சி தருவதாகும். அதுவும் அவரைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களே சதி செய்து படுகொலைக்கு ஆளாக்கினார்கள் என்பது மேலும் பேரதிர்ச்சியைத் தருவதாகும். ஆகவேதான் உலகத்திலே இருக்கிற நாடுகள் அத்தனையும் இந்தத் துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்ந்து பங்கேற்று, அவரவர்கள் தங்களுடைய இறுதி அஞ்சலியைச் செலுத்துகின்ற வகையில் டெல்லி வந்து குவிய ஆரம்பித்தார்கள். இதிலிருந்தே எந்த அளவு உலக நாட்டு அதிபர்கள், தலைவர்கள் உள்ளங்களில் மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இடம் பெற்றிருந்தார்கள் என்பதை நாம் நன்றாகக் காணலாம். அவர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்துகின்ற நிகழ்ச்சியில் 105-க்கு மேற்பட்ட நாடுகளுடைய தலைவர்கள், அதிபர்கள், அரசர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் எந்த அளவுக்கு அவர்களுடைய உள்ளங்களையெல்லாம் இந்த நிகழ்ச்சி நெகிழ வைத்திருக்கிறது என்பதை நாம் நன்றாகக் காணலாம்.

சுட்டவன் கூட முதலிலே அவர்களுக்கு நமஸ்தே என்று கூறிவிட்டு, அவர்களும் திருப்பி நமஸ்தே என்று கூறிய பிறகுதான் துப்பாக்கியால் சுட்டான் என்ற செய்தியைக் கேள்வியுறும்போது 'தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும்!' என்ற வள்ளுவரின் கூற்று இந்திரா காந்தியைப் பொறுத்த வரை எந்த அளவுக்கு உண்மையாக அமைந்துவிட்டது என்பதை நாம் நன்றாகக் காணலாம்.

இந்தியாவின் ஒளிமயமான எதிர்காலத்தைக் காண்பதற்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஏற்றிவைத்த ஒளிச்சுடர் மங்கிப் போகாமல் பாதுகாக்க அரும்பாடுபட்டு வந்தவர்கள் இந்திரா காந்தி அம்மையார் ஆவார்கள். அது மட்டுமல்லாமல், 70 ஆண்டுகாலமாக அரசியலிலே ஆர்வமும் அக்கறையும் கொண்டு இந்திய அரசியல் வளர்ச்சியிலே தம்மையும் தமது குடும்பத்தாரையும் ஈடுபடுத்திக் கொண்டு இந்தியாவிலே நிகழ்ந்த பல்வேறு பெரும் நிகழ்ச்சிகளிலும் தங்களை உட்படுத்திக் கொண்டு வந்த, தலைமுறை, தலைமுறையாக வந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் விளங்கினார்கள் என்பதும் உள்ளபடியே அரிதிலும் அரிதாக விளங்குகின்ற ஒரு நிலைமையாகும். அவர்கள் பிறக்கும்போதே அரசியலில் மிகச் சிறந்த புகழையும் பெருமையும் பெற்று, அகில இந்திய அளவிலே அரசியலை நிர்ணயிக்கவும், அரசியலினுடைய எதிர்காலத்தை வகுக்கின்ற நிலைமையிலே இருந்தவர் பண்டித மோதிலால் நேரு அவர்கள் ஆவார்கள். பண்டித மோதிலால் நேரு அவர்கள் பெற்ற இடத்தையும் விட மிஞ்சுகிற அளவிற்கு,

அவர்கள் விட்ட இடத்திலேயிருந்து பணிகளைத் தொடர்ந்து, தங்களுடைய குடும்பத்திற்கு பெருமையையும் புகழையும் சேர்க்கின்ற அளவிற்கு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அரும்பாடுபட்டு வந்தார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் விட்ட இடத்திலேயிருந்து தொடர்ந்து பணிகளை ஆற்றி, புகழையும் பெருமையையும் பெறத்தக்க அளவிற்கு சிறந்த பணிகளை ஆற்றுகின்றபெருமை மாண்புமிகு இந்திரா காந்தி அம்மையார் அவர்களை மிகச் சிறப்பாகச் சாரும். அவர்கள் அரசியல் சூழ்நிலையிலேதான் பிறந்தார்கள். அரசியல் சூழ்நிலையிலேதான் வளர்ந்தார்கள், அவர்கள் அரசியல் சூழ்நிலையிலேதான் வாழ்ந்தார்கள். அவர்கள் மறைந்ததும் அரசியல் சூழ்நிலையில்தான் மறைந்தார்கள். அதுமட்டுமல்ல, அவர்கள் வீராங்கனையாகத்தான் திகழ்ந்தார்கள். வீரச் செயல்கள் பலவற்றையும் நிலைநாட்டினார்கள். அவரது மறைவுஒரு வீர மரணமாக அமைகிற அளவிற்கு அமைந்த பாங்கினை எல்லாம் நாம் காண்கிறோம்.

பஞ்சாபை பொறுத்தவரையில், அங்கே ஏற்பட்ட கலவரங்களும் மற்ற மாச்சரியங்களும், வன்முறைச் செயல்களும் தீவிரவாதிகளுடைய நடவடிக்கைகளும் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டையே குலைத்துவிடுமோ, பன்னெடுங்காலமாக கட்டிக்காத்து வளர்த்து வருகின்ற ஜனநாயகம் அடியோடு அழிந்துவிடுமோ என்று எல்லோரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நிலையிலே, இன்னும் ஏன் நடவடிக்கை எடுக்காமல் பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள் என்று எல்லோரும் எடுத்துச்சொல்லிக்கொண்டிருக்கிற அத்தகைய சூழ்நிலையில், பஞ்சாப் பிரச்சினையையைக் தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, அவர்களோடு பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடத்திப் பார்த்து, முடியாத கட்டத்தில், கடைசியில் அவர்கள் அங்கேயிருந்த வன்முறையாளர்களை அடக்கி ஒடுக்கவும், பொற்கோயிலில் அடைக்கலம் புகுந்துகொண்டு, தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்ட தீவிரவாதிகளை அடக்கி ஒடுக்குவதற்கு, கடைசியிலே இராணுவத்தைக் கொண்டு அடக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்து, இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்த வன்முறைகளுக்கும், கலவரங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்த அத்தகைய பணி உலகத்தோரால் மிக மிக பாராட்டப்பெற்றது.

அதோடு மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பாராட்டுகிற அளவிற்கு அந்தப் பணி அமைந்தது என்பதை நாம் எல்லாம் அறிவோம். அந்தப் பொற்கோயிலில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைக்குக் கூட தமிழகத்தைச் சேர்ந்த படைத்தலைவர் சுந்தர்ஜி அவர்கள் தலைமையிலேதான் அது நடைபெற்றது என்பதும் கூட. நாம் அறிந்த ஒன்றாகும், ஆகவே அதிலே எவ்வளவு பேரும், புகழும் அம்மையார் அவர்கள் பெற்றார்களோ, அந்த அளவிற்கு இந்த முயற்சியிலே ஆபத்தும் வந்து சேர்ந்தது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே எந்த ஒரு நேரத்திலும் தன்னுடைய உயிருக்கு ஆபத்து



ஏற்படக்கூடும் என்று அச்சப்படும்படியான, பயப்படுகிற ஒரு சூழ்நிலை நிலவிய அந்த நிலைமையிலே கூட அவர்கள் துணிச்சலோடு, எதற்கும் அஞ்சாமல், தனக்கு ஒரு ஆபத்து வந்து சேரக்கூடும் என்பதை எதிர்பார்த்து தம்முடைய பணிகளிலே தளர்வு காட்டாமல், அயர்வு காட்டாமல் அவர்கள் பணியாற்றி வந்தார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டது அக்டோபர் மாதம் 31ஆம் தேதி என்று சொன்னால், அதற்கு முன்தினம், அதாவது அக்டோபர் திங்கள் 30ஆம் நாள் ஒரிசா மாநிலத்தில் உள்ள புவனேசுவரத்திற்குச் சென்று, அங்கே கடைசியாக அவர்கள் கலந்துகொண்ட ஒரு பொதுக்கூட்டத்திலே பேசுகின்றபோது கூட, தம்முடைய மனதிலே உறுத்திக்கொண்டு இருந்த ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

''நாட்டுக்காக தொண்டாற்றும்போதே நான் இறந்துபட நேரிட்டாலும், நான் அதை பெருமைக்குரியதாகவே கொள்வேன் என்றும், என்னுடைய உடம்பில் உள்ள ஒவ்வொரு சொட்டு ரத்தமும் நாட்டின் வளர்ச்சிக்கும், அதனை வலுப்படுத்துவதற்கும், வளப்படுத்துவதற்கும் பயன்படும் என்றும் உறுதி கூறுகிறேன்'' என்று அம்மையார் அவர்கள் தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள்.

(முற்பகல் 10-20)

அவர்களுடைய வாக்கியத்திலேயே கூற வேண்டுமானால்,

“even if I die in the service of the Nation I would be proud of it. Every drop of my blood—I am sure—will contribute to the growth of the Nation and to make it strong and dynamic''

என்று மிக அழுத்தம் திருத்தமாகவும், மிகச் சிறப்பாகவும் எடுத்துத் தெரிவித்த பாங்குகளை காண்கிறபோது, இப்படிப்பட்ட ஒரு ஆபத்து தனக்கு வந்து சேரச்கூடும் என்று எதிர்பார்த்து, அதற்காக கலங்காமல், அஞ்சாமல் தன்னுடைய பணிகளை ஆற்ற வேண்டும் என்று ஆற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை அவர்களுடைய கூற்று மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது,

ஆரம்பக் காலத்திலேயிருந்து அவர் அரசியலிலே சிறப்பாக பங்கேற்று பணியாற்றுவதற்கு ஏற்ற சூழ்நிலைகளை, அவருடைய பாட்டனாரிடத்திலேயிருந்தும், தந்தையாரிடத்திலேயிருந்தும் பெறக்கூடிய சூழ்நிலையை அவர்கள் மிகச் சிறப்பாக பெற்றிருந்தார்கள். அவர் பம்பாயிலே மெட்ரிகுலேஷன் வரையிலும் தன்னுடைய கல்வியை பெற்றார்கள் என்றாலும், தன்னுடைய கல்வியையும், மற்றவற்றையும் மிகச் சிறப்பாக மேம்படுத்திக் கொள்ளும் வகையில் சுவிட்சர்லேண்டிலேயும், பிறகு பிரான்ஸ் நாட்டிலேயும் பிறகு லண்டன் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திலேயும் பெற்று, இறுதியாக பண்டித நேரு அவர்களுடைய ஆலோ

சனையின் பேரில் சாந்திநிகேதனத்திலேயும் சேர்ந்து, அங்கேயும் சிறப்பாக கல்வியையும், பண்பாட்டுக் கல்வியையும், அவர்கள் பெற்றார்கள்.

பண்டித நேரு அவர்களிடத்திலேயிருந்து அவர்கள் அரசியல் பாடங்களை கற்றார்கள், பண்டித நேரு சிறையில் இருக்கும் போது பல்வேறு கடிதங்கள் மூலமாக, உலக அரசியல் நடப்பு, அரசியல் தன்மைகள். வரலாற்றுச் சிறப்புக்கள், வரலாற்று குறிப்புகள் ஆகியவற்றை அவ்வப்பொழுது எழுதி அனுப்பிய கடிதங்கள் மூலம் உணர்ந்து வந்தார்கள். அதன் மூலம் சிறந்த அரசியல் பாடத்தை அவர்கள் கற்றுக்கொண்டு வந்தார்கள் என்றாலும், இந்திரா காந்தி அம்மையார் அவர்களே சிறந்த அரசியல் வரலாறுகளை உருவாக்கினார்கள்.

அரசியல் பாடத்தை பண்டித நேரு அவர்களிடத்திலே இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் கற்றார்கள் ஆனாலும் வரலாறுகளை படைக்கிற அத்தகைய தகுதியையும் அவர்கள் மிகச் சிறப்பாக பெற்றார்கள். பண்டித நேரு அவர்களின் கூடவே வாழ்ந்தார்கள். பண்டித நேரு அவர்கள் ஈடுபட்ட அரசியல் அத்தனையிலேயும் பங்கு கொள்கிற அளவிற்கு—நேரி டையாக பங்கு கொள்ளாவிட்டாலும் அவர்களுடன் இருப்பதன் மூலமாக—அரசியல் அணுகு முறைகளையும் சில பிரச்னைகளை தீர்த்து வைப்பதற்கு பண்டித நேரு அவர்கள் எடுத்துக்-கொண்ட முயற்சிகளையும் உடன் இருந்து கவனித்ததன் காரண மாக கற்றார்கள். அவருடனேயே கூட இருந்தார்கள். அவர் உலக சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட போதெல்லாம் உடன் சென்றார்கள். பண்டித நேரு அவர்கள் முக்கியமான முடிவுகள் எடுத்தபோதெல்லாம் உடனிருந்து கூர்ந்து கவனித்துக் கொண்டு வந்தார்கள். இவைகள் அத்தனையும் சேர்ந்து இந்திரா காந்தி அம்மையாரை ஒரு நல்ல அரசியல் தலைவராக, ஒரு ஆட்சியாளராக மாற்றிக் காட்டுவதற்கு மிகவும் பயன்பட்டன என்று நாம் எடுத்துச் சொல்லலாம்.

அது மட்டும் அல்லாமல், வங்காள தேசத்திலே போர் ஏற்பட்டது. பாகிஸ்தானை எதிர்த்துப் போராடி, வங்காள தேசத்தை மீட்டுக் கொண்டு வந்த நிலையிலும் கூட—வேறு பல நாடுகளினுடைய வரலாறுகளை பார்ப்போமேயானால், அப்படி வென்று மீட்ட அத்தகைய நாட்டை தங்களுக்குரிய அடிமை நாடாக சுவீகரித்து வருகிற வகையிலேதான் உலகத்திலே இருக்கிற வல்லரசுகள் எல்லாம் தங்களுடைய பணிகளை ஆற்றி வருகிற வரலாறு இருப்பதை காண்கிறபோது அவ்வளவு—பெரிய வெற்றியையும் பெற்று, வெற்றிக்கு இந்தியாவினுடைய படை எடுப்பே காரணம் என்பதையும் அறிவித்து, வெற்றி விழாக் கொண்டாடத் தக்க அளவுக்கு எதிரி நாட்டை முழுமையும் அடக்கி கொண்டு வருகிற சிறப்பையும் இந்தியா பெற்றிருந்த போதிலும் கூட, ஜனநாயகப் பண்பாட்டினுடைய அடிப் படையில், ஒரு காலத்தில் அது இந்தியாவிடைய பகுதியாகத்தான்



இருந்தது; மறுபடியும் இந்தியாவோடு சேர்த்துக் கொண் டாலும் கூட உலகம் தவறாகச் சொல்ல முடியாது என்ற நிலையிலும் கூட, பிரிந்து சென்று விட்ட வங்காள தேஷ் தன்னுடைய சுதந்திரத்தையும், உரிமையையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று கருதி, மீண்டும் அதை அந்த நாட்டு மக்களிடத்திலேயே ஒப்படைத்து, எந்த ஒரு நிபந்த னையையும் விதிக்காமல், தனி சுதந்திரம் கொண்ட ஒரு நாடாகத் திகழ்வதற்குறிய வழிவகைகளைச் செய்து கொடுத்தது உலகத்திலே உள்ள பல்வேறு நாடுகளும் பாராட்டத் தக்க அளவிற்கு அவர்கள் அரசியல் கண்ணியத்தையும், ஜனநாயக பண்பையும், ஜனநாயக நெறிகளையும் எந்த அளவிற்கு பாராட்டி வந்தார்கள் என்பதை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது.

அவர்கள் சிறு வயதிலேயே அரசியல் சூழ்நிலையில் வளர்ந்த தன் காரணமாக, 12 வயதிலேயே கூட அவர்கள் குழந்தைகளுக் கான ஒரு காங்கிரஸ் இயக்கத்தை நடத்தி வந்தார்கள் என் பதை அவர்களுடைய வரலாற்றுக் குறிப்பு காட்டுகிறது. அதற்கு பிறகு 1938-ல், தம்முடைய 21-வது வயதில் காங்கிரஸில் தம்மை உறுப்பினராக இணைத்துக் கொண்டு தந்தையாருடன் சேர்ந்து நாட்டிற்காகப் பாடுபடுகிற ஒரு சூழ்நிலையைப் பெற்றார்கள். 1955-ல் அவர் அகில இந்திய காங்கிரஸினுடைய தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தக்க அளவிற்கு, அந்தப் பெரும் பொறுப்பை காங்கிரஸ் கட்சி அவர்களிடத்திலே ஒப்படைத்தது. அவர்கள் தலைமை தாங்கிய மகாநாட்டில் கலந்துக் கொண்டு உரையாற்றிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் வேடிக்கை யாகவும் மகிழ்ச்சியோடும், ''என் மகள் எனக்கு தலைவராகி விட்டார்கள்'' என்று அந்த மகாநாட்டிலேயே எடுத்துச் சொல்கிற அளவிற்கு சிறந்து விளங்கினார்கள்.

ஆகவே, அவர்களுக்கு ஊக்கம் தந்தவர்களுடைய ஊக்கத்தை நிறைவேற்றுகிற வகையில், அந்த உறுதிப்பாட்டை நிறை வேற்றுகிற வகையில் தம்முடைய வாழ்க்கையை செம்மை யாக, சிறப்பாக அமைத்துக்கொண்டு வந்த பாங்கு இந்திரா காந்தி அம்மையாரிடத்திலே மிகச் சிறப்பாக இருந்தது. புதிய சுதந்திர இந்தியாவை பெற்றெடுத்தவர்கள் அண்ணல் காந்தி அடிகளாவார்கள் என்றால் அதற்கு அடிப்படை கூறியவர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் என்றால் அதைக் கட்டிக்காத்து வளர்க்கப் பாடுபட்டவர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களாவார்கள் என்று சொல்லத் தக்க அள விற்கு தமது வாழ்க்கை வரலாற்றை மிகச் சிறப்பாக அமைத் துக்கொண்டவர். பண்டித மோதிலால் நேரு அவர்கள் இந்திரா காந்தி அவர்களிடத்தில் சொல்கிறபோதுகூட ஒரு தடவை, ''இந்திரா, இரண்டுவிதமான மக்கள் இருக்கிறார்கள். ஒரு சாரார் பணிகளைப் புரிபவர்கள், மற்றொரு சாரார் பலன்களைப் பெறுபவர்கள். நீ முதல் பிரிவைச் சேர்ந்தவளாக மாற வேண்டும்'' என்று பண்டித மோதிலால் நேரு அவர்கள் அறி வுறுத்தியதாக ஒரு குறிப்பு உண்டு. "Indira, there are two kinds

of people—those who do the work and those who take the credit—you should try to belong to the first category.'' என்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இளமையாக இருக்கும்போதே அறிவுறுத்தி வந்தார்கள் என்று வரலாற்றுக் குறிப்பு மிகச் சிறப்பாகக் கூறுகிறது. பண்டித நேரு அவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூட ஒரு தடவை குறிப்பிடுகிறபோது ''Reading history is good. However it is better to help making history,'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வரலாற்றைப் பயில்வது நல்லதுதான் என்றாலும் வரலாற்றை உருவாக்க உதவி புரிவது சிறந்ததாகும் என்று அவர்கள் எடுத்துக்கூறிய கருத்தை அப்படியே நடைமுறைப்படுத்திக் காட்டுவதில் அவர்கள் முனைப்புள்ளத்தையும் விடாமுயற்சியையும் செயலாற்றுகிற திறனையும் செய்து முடிக்கிற திறனையும் மிகச் சிறப்பாகக் காட்டினார்கள். அந்தளவிற்கு அவர்களுடைய பகைவர்கள், அவர்களுடைய நண்பர்கள், நொதுமலர்கள் அத்தனை பேர்களும் அவர்களுடைய மறைவு குறித்து நெஞ்சம் குழைந்து இரக்கம் செலுத்துகிற அளவிற்கு நாட்டிலுள்ள அத்தனை பேர்களும் உலகத்திலுள்ள அத்தனை பேர்களும் அவர்களோடு சேராத நமக்குப் பகையாக விளங்குகிற நாட்டை சேர்ந்த அதிபர்கள் கூட கலங்கத்தக்க அளவிற்கு துக்கத்தையும் துயரத்தையும் வெளிப்படுத்துகிற அளவிற்கு அவர்கள் சிறந்த அறிவுத்திறனையும், ஆற்றல் திறனையும் பண்பாட்டுத் திறனையும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது நிலைநாட்டினார்கள். நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நோய்வாய்ப்பட்டு அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது கூட உடனடியாக தொலைபேசி மூலம் இருக்கிற நிலைமைகளை அன்றாடம் அறிந்து கொண்டு வந்தாலும், நேரடியாகவே வந்து அவர்களுடைய உடல்நலனை விசாரித்து அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்ற பெருந்தன்மையுடனும் பேராவலுடனும் அவர்கள் இதற்காகவே கிளம்பி வந்து பார்த்துவிட்டு உடனே சென்றதிலிருந்து அவர்களுடைய உள்ளத்தை—எந்த அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல்நலம் பெற்றுத் திகழ வேண்டும் என்று அக்கறையும் ஆர்வமும் காட்டினார்கள் என்பது மட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிகிச்சை பெறுவதற்கு இந்திய அரசின் சார்பாக என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனை உதவிகளையும் செய்வதற்கு இந்திய அரசு ஆயத்தமாக இருக்கும் என்று கூறியதற்கிணங்க அந்த உதவிகள் எல்லாவற்றையும் எல்லா வகைகளிலும் மத்திய அரசு சார்பாகச் செய்வதற்கு அவர்கள் ஒருப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதை எண்ணுகிறபோது இந்தத் தமிழக அரசு அவர்களுக்கும் அவர்களுடைய அருமைச் செல்வர், இன்றைய இந்தியாவினுடைய தலைமை அமைச்சராக இருக்கின்ற திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி அவர்கள் எந்தளவிற்கு ஆதரவு அளித்து வந்தார்களோ அந்தளவிற்கு ஆதரவு அளிப்பது என்பதற்காக தமிழக அரசு இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் அவர்களுடைய அரும் பெரும் புதல்வர்





திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் கூட நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு சிறப்புக்குரிய தன்மைகளை பெற்றிருப்பது அரிதிலும் அரிது. ஒரு நாட்டில் ஒரு சிலர்தான் அறிவுமிக்கவர்களாக, ஆற்றல்மிக்கவர்களாக, துணிச்சல் கொண்டவர்களாக, நல்லவைகளையெல்லாம் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் எழுச்சியும் கொண்டிருக்கக்கூடும். அப்படி ஒரு சிலர் ஏற்றிவைக்கிற மெழுகுவத்திதான் எரியாத பல மெழுகுவத்திகளை ஏற்றிவைத்துவிட்டு செல்கிற அளவிற்கு இருக்கிறது. ஒரு எரிகிற மெழுகுவத்தி பல ஆயிரக்கணக்கான எரியா மெழுகுவத்திகளை எரிய வைத்து விட்டு தானும் எரிந்து கடைசியில் தானும் அழிந்துபோகும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவிற்கு இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் வாழ்க்கை வரலாறு அமைந்திருந்தது. அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றினுடைய அருமை பெருமைகளை நினைந்து நாம் எல்லாத் தரப்பினரும் எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய அளவிற்கு பல்வேறு பணிகளை அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் நின்று எல்லோரும் பாராட்டத்தக்க அளவிற்கு பல பணிகளை அவர்கள் ஆற்றியிருக்கிறார்கள். அந்தப் பணிகள் அத்தனையையும் அந்தக் கொள்கைகள் அத்தனையையும் நிலைநாட்டுகிற அளவிற்கு அத்தனை பேர்களும் பாடுபடுவோமானால் இந்தியாவினுடைய ஒற்றுமை காப்பாற்றப்படவும் ஒருமைப்பாடு நிலைநாட்டப்படவும் ஜனநாயகம் பேணப்படவும் 74 கோடி மக்களைக் கொண்டிருக்கிற ஒரு பெரும் ஜனநாயக நாடாக விளங்குகிற இந்தியா என்றென்றும் உலகத்திலுள்ள பிற நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவிற்கு அமைவதற்கு அவர்கள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து ஒருவரால் முடியாவிட்டாலும் பலபேர்கள் சேர்ந்து அந்த உயர்ந்த பண்புகளுக்கு, அந்த உயர்ந்த சேவைகளுக்கு ஆக்கம் தருகிற அளவிற்கு நாம் அனைவரும் பாடுபடுவதுதான் அவர்களுக்கு நாம் செலுத்தக்கூடிய இறுதி அஞ்சலியாக இருக்க முடியும். அந்த முறையில் இந்த அவை அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் அவர்களுக்கு இரங்கல் தெரிவிப்பதிலும் அவர்களை இழந்து வருந்துகிற அவர்களுடைய அருமைச் செல்வருக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இரங்கலையும் பரிவையும் தெரிவிப்பதில் ஈடுபடுகிற வகையில் இந்த அவையின் சார்பாக இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிந்து மற்றைய கட்சிகளினுடைய தலைவர்கள் அத்தனை பேர்களும் வழிமொழிந்து இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற இருக்கிறார்கள். அந்த முறையில் இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

(முற்பகல் 10-30)

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன். சிறந்த ராஜதந்திரியாகவும், சர்வதேச தலைவியாகவும், புகழ்மிக்க தலைவராகவும்,

[திரு. உ. சுப்பிரமணியன்] [1985 மார்ச் 9

எங்களுடைய ஒப்பற்ற வழிகாட்டியாகவும் இருந்த முன்னாள் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி மறைவு குறித்த இந்த இரங்கல் தீர்மானத்தில் நானும், எங்கள் கட்சியினரும் பங்கு கொள்ளுகிறோம்.

இந்திரா காந்தி அவர்கள் பாரம்பரியத்தைப் பற்றி நாம் அனைவரும் அறிந்ததுதான். மோதிலால் நேருவின் பேத்தியாகவும், நேரு அவர்களின் மகளாகவும், இப்போது இருக்கின்ற பாரதப் பிரதமர் ராஜீவ் அவர்களின் தாயாகவும் மட்டுமில்லாமல், இந்த நாடு முழுமைக்கும் தொண்டு செய்யக்கூடிய ஒரு மிகப் பெரிய பாரம்பரியத்திலிருந்தும், பெரிய குடும்பத்தில் இருந்தும் வந்தவர் என்பது அனைவரும் அறிந்ததே. அப்பேர்ப்பட்ட மிகச் சிறப்பாக தொண்டு செய்த இந்த நாட்டின் தலைவர், கொலை செய்யப்பட்டார், அதுவும் கொலை வெறியர்களால் சுடப்பட்டதை அறிந்தவுடனே, உலக மக்கள் அத்தனை பேரும் எந்த அளவுக்கு துக்கத்தில் ஈடுபட்டு இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு வயதிலேயே, முன்னவர் அவர்கள் சொல்லியதுபோல, மிகச் சிறந்த கல்வியைக் கற்க வெளிநாடுகளுக்குச் சென்று பயின்றாலும் அதுபோதாது என்று நேரு அவர்கள் கருதிய காரணத்தினால், தாகூர் அவர்கள் நடத்திய சாந்திநிகேதனத்தில், நம்முடைய இந்திய கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றை அறிந்துகொள்ள அங்கே பயிற்சி பெற்றார்கள். மேலும் அந்த காலத்தில் புரட்சிகரமான கலப்புத் திருமணம் செய்து கொண்டதை, எத்தனையோ பெரிய தலைவர்கள் எல்லாம் எதிர்த்தபோதும், தன்னுடைய உறுதிப்பாட்டால் கொஞ்சமும் நெகிழாமல் இறுதியாக பெரோஸ் காந்தி அவர்களை, வேறொரு மதத்தினரை மணந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருந்து, அவர் பணியாற்றிய நேரத்தில் அவர் எடுத்த பல துணிகரமான முடிவுகள் சரித்திரத்திலே குறிப்பிடத்தக்கவை. 16 ஆண்டு காலம் பிரதமராக பதவி வகித்திருந்தபோது, அவருடைய நோக்கமெல்லாம் இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்து, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர வெண்டுமென்ற வகையில் பல்வேறு திட்டங்களை அவர்கள் கொண்டு வந்தார்கள். முதல்முதலாக, 14 பெரிய வங்கிகளை தேசியமயமாக்கினார். பெரிய கோடீஸ்வரர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த வங்கிகளையெல்லாம், ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தேசியமயமாக்கினார். அதைப்போல், மன்னர் மானிய ஒழிப்பு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். பாரம்பரியமாக இந்த நாட்டிலே இருந்த ஒரு அமைப்பை ஒரே நேரத்தில் முடிவுக்கு கொண்டுவந்து, அவர்களும் சமமானவர்கள், சாமானியர்கள் என்ற வகையில் ஒரு மிகப் பெரிய மன்னர் மானிய ஒழிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.



1985 மார்ச் 9] [திரு. உ. சுப்பிரமணியன்]

அடுத்து, 20 அம்ச திட்டத்தின் மூலம் இந்த நாட்டிலே இருக்கின்ற நலிந்த ஏழை மக்கள் அத்தனை பேருக்கும் உதவக் கூடிய பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தார்கள். சமீபத்திலேகூட, இந்த நாட்டிலே படித்து வேலையற்று இருக்கின்ற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு திட்டத்தை உருவாக்கி, எந்தவிதமான ஜாமீனும் இல்லாமல் ரூ. 25,000 வரை அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டிலே உள்ள இலட்சக்கணக்கான இளைஞர்கள் சுயமாக வேலை செய்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். மேலும், சர்வதேச அரசியலிலே அவர்கள் ஒரு மிகப் பெரிய சக்தியாக விளங்கினார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆதரவற்ற, பலமிழந்த சிறு சிறு நாடுகளுக்கெல்லாம் காவலராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் டெல்லியிலே நடத்திய 104 நாடுகள் கொண்ட NAM என்ற மாநாட்டை கூட்டி, ஒரு புதிய சக்தியை உருவாக்கினார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதன்மூலம் உலக சமாதானத்தை நிலைநிறுத்த, அணு ஆயுதத்தை பெரிய வல்லரசுகள் உற்பத்தி செய்வதை தடைசெய்யக் கோரியும், அதன் உபயோகத்தினால் ஏற்படக்கூடிய உலக அழிவை தடுத்து நிறுத்துவதற்கும் இந்த மாநாடு உதவியது. அதில் அவருடைய சக்தி பெரும்சக்தியாக விளங்கியது என்பது நமக்குத் தெரியும். அவைமுன்னவர் அவர்கள் சொல்லியதுபோல, பங்களாதேஷ் போரட்டத்தைப் பார்ப்போமேயானால், உலக வரலாற்றில் இல்லாத வகையில் பிடித்த ஒரு ஆட்சியை, அதுவும் ஒரு அண்டை நாட்டை, சில நாட்களிலேயே அதைவிட்டு காலி செய்து, உரியவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்து—அதுவும் வெளியார் யாரும், எந்த சக்தியும், எந்த அரசும் தலையிடாமல்—அவர்களாகவே வெளியேறச் செய்தது சரித்திர பிரசித்த பெற்ற ஒரு உண்மை,

அதைப்போல, ஆசிய விளையாட்டுக்களை டெல்லியிலே நடத்தி, உலக அரங்கிலே நம்முடைய தேசம் முக்கியமான பங்கை வகிக்கிறது என்பதையும், விளையாட்டு போட்டிகளில் எந்தவிதத்திலும் தரம் குறையாமல் சிறப்பாக நடத்தியதை நாம் அறிவோம். இந்த நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டையும், மத சார்பின்மையையும் காப்பற்ற பாடுபட்டார். அதற்காக உயிரையே இழக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பமும் வந்திருக்கிறது. அந்த அளவிற்கு தன்னுடைய இறுதி மூச்சு இருக்கும் வரையில் பாடுபட்டார் என்பதற்கு உதாரணமாக அவர் இறப்பதற்கு முதல் நாள் புவனேஸ்வரத்தில் பேசிய பேச்சு நமக்கெல்லாம் தெரியும். ஆங்கிலத்திலே ''premonition'' என்று சொல்வார்கள். தனக்கு இறுதி முடிவு வருகிறது என்பதை எப்படியோ உணர்ந்த காரணத்தினாலோ என்னவோ முதல் நாள், ''இந்த நாட்டிற்காக நான் உயிர் இழக்க வேண்டி வந்தால், அதற்கு நான் தயாராக இருக்கிறேன்; என்னுடைய கடைசி சொட்டு ரத்தம் இந்த நாட்டு மண்ணிற்கு

உதவினால் அதற்கும் நான் சித்தமாக இருக்கிறேன்'' என்று சொல்ல வைத்தது அவருடைய உள்ளுணர்வு என்றுதான் நாம் நினைக்கவேண்டி இருக்கிறது.

அவர், நம்முடைய பாரதப் பிரதமராக இருந்த நேரு அவர்களுடைய பல்வேறுவிதமான திட்டங்களை அவர்களுடைய வழியிலே, அவருடைய அடிச்சுவட்டிலே நின்று, இந்த நாடு எப்படி இருக்க வேண்டும், இந்த நாட்டு மக்கள் உலக மக்களோடு எந்த அளவிற்கு சமமாக இருக்க வேண்டும், அவர்களைவிட எந்த அளவிற்கு உயர வேண்டுமென்று நேரு கனவு கண்டாரோ, அவற்றை நிறைவேற்றி வைப்பதிலே தான் கவனமாக இருந்தார்கள்.

மேலும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த நேரத்தில், எத்தனையோ வேலைகளுக்கு இடையில் பறந்து வந்து, முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டிலிருந்து உடனடியாக டாக்டர்களை வரவழைப்பதற்கும், வெளிநாட்டில் சிகிச்சை பெறுவதற்கும், தாயன்புடன் உதவி செய்தார். எந்த அளவிற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் மேல் பரிவுடன் இருந்தார்கள் என்பதை நாம் சொல்லித் தெரியவேண்டியது இல்லை. எத்தனையோ முதலமைச்சர்கள் இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர்பால் அதிக அன்பு காட்டினார் என்பதிலே நமக்கும் பெருமை உண்டு.

இந்த தேசத்திலே உள்ள 70 கோடி மக்களை அந்த தாய் காத்து வந்தார்கள். அவர், 70 கோடி மக்களுக்கும் விலை மதிக்க முடியாத மாணிக்கமாக விளங்கினார். 70 கோடி மக்கள் மட்டுமல்ல, உலக மக்களுக்கும், பலமற்ற சிறு தேசங்களுக்கும் ஒரு நல்ல வழிகாட்டியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாக இருந்தார். அவர் மறைந்த நேரத்தில் நம்மைவிட அதிகமாக வருத்தப்படுகிறவர்கள் உலகத்தில் உள்ள பல சிறு தேசத்து மக்கள். அதற்கு அடையாளமாக டில்லியிலே அவருடைய இறுதி ஊர்வலத்திற்கு, அஞ்சலி செலுத்துவதற்கு பல சிறு தேசத்து மக்கள் கூடிய காட்சியினை நேரிலேயும், டி.வி.யிலேயும் பார்த்தோம். அந்த அளவிற்கு, ஒப்பற்ற, விலை மதிக்க முடியாத மாணிக்கத்தை இழந்ததற்கு எந்த வகையிலே ஈடு செய்யப்போகிறோம் என்று சொன்னால், நாம் அவர் நினைத்த காரியங்களை, அவர் கொண்ட லட்சியத்தை நிறைவேற்றுவதன் மூலமும், இந்த தேச மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமென்று அவர் கண்ட கனவை நனவாக்குவதன் மூலமும்தான் செய்ய முடியும். அந்த வகையில் தான் நாம் அவருக்கு அஞ்சலி செலுத்த முடியும் என்று கூறிக் கொண்டு, இந்த இரங்கல் தீர்மானத்தில் என்னுடைய கட்சி சார்பாக நானும் பங்குகொள்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய வரலாற்றிலேயே மிக ஆழ்ந்த இரங்கல்





உணர்வு தோன்றுகின்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றவேண்டிய ஒரு கட்டத்தில் இன்றைக்கு நாம் இருக்கிறோம். இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு, ஏற்கனவே இடம்பெற்றிருந்தவர்களுக்கு, மகாத்மா காந்தியடிகளுடைய மறைவு, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுடைய மறைவு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவு, திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய எதிர்பாராத, துன்பகரமான மறைவு, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மிகப் பெரிய வேதனையை விளைவிக்கக்கூடிய, துயரத்திற்குரிய நிகழ்ச்சிகளாக அமைந்தன என்பதை நான் நினைவுகொள்கிறேன், திருமதி இந்திரா காந்தி அவர்கள்—முன்னவர் அவர்கள் இங்கே மொழிந்தது போல்—ஒரு பெரிய பாரம்பரியத்திற்குரியவராக மிகத் தொன்மையான, ஒரு நாட்டில் நீண்டகால அனுபவத்தின் விளைவாக பெற வேண்டிய பயிற்சிகளையும் எண்ணங்களையும் பெறக்கூடிய வாய்ப்பை உடையவராக விளங்கி, அரசியலிலே பெறக்கூடிய வளர்ச்சியைப் பெற்று தகுந்த அளவு மற்ற கட்சிகளையும், பல்வேறு தலைவர்களையும், அவர்கள் தம் எண்ணங்களையும் உணர்ந்து கொள்ளக்கூடிய அளவுக்கு பொறுப்புள்ள ஒரு தலைமை அமைச்சராக இந்தியாவிலே பொறுப்பேற்றார்கள்.

(முற்பகல் 10–40)

அவர்கள் பெற்றிருந்த பயிற்சி, அனுபவம், மனோநிலை இவைகள் காரணமாகத்தான் பல ஆண்டுகள் அவர்கள் வெற்றிகரமாகப் பிரதமர் பொறுப்பை நிறைவேற்ற முடிந்தது என்பதை நாம் இந்த நேரத்தில் கருதாமல் இருக்க முடியாது. பிரதமராக ஆவது என்பதுகூட ஒரு வேளை, வாய்ப்பு என்று சொல்லலாம். ஆனால் பிரதமராக இருந்து அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது என்பது ஒரு வாய்ப்பு என்று கூறமுடியாது. ஆற்றலின் விளைவாகத்தான், ஒரு கடமையுணர்ச்சியின் விளைவாகத்தான் ஒருவனுடைய மனப்பான்மையின் விளைவாகத்தான் அதை வெற்றிகரமாக நிறைவேற்றமுடியும். இந்தியாவினுடைய சுதந்திர வரலாற்றிலே இடம் பெற்ற பெரும் தலைவர்கள் எப்படி சோதனைகளுக்கு ஆளானார்களோ, அப்படிப்பட்ட சோதனைகளுக்கு திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். மிகக் கடுமையான துயரங்களை அவர்கள் வாழ்க்கையிலே சந்தித்து இருக்கிறார்கள். அவர்களுடைய கணவன் பெரோஸ் காந்தியை இழந்தது அவருக்கு ஏற்பட்ட முதல் துக்ககரமான நிகழ்ச்சி என்று சொன்னால், அன்னையை இழந்ததற்குப் பிறகு ஏற்பட்ட நிகழ்ச்சி என்று சொன்னால், அவரது தந்தையார் பண்டித ஜவஹர்லால் நேருவை இழந்தது, அதற்கு அடுத்த கட்டத்திலே ஏற்பட்ட துக்க நிகழ்ச்சி, இவை எல்லாவற்றையும் விட அவருடைய அருமை மகன் சஞ்சய் காந்தியை, அரசியலிலே பக்குவம் பெற்று விளங்கிய, அவருடைய வலது கையாக விளங்கிய மகனை இழந்தது மிகப் பெரிய அதிர்ச்சிக்கும் துயரத்திற்கும் ஆளாக்கியது. ஆனாலும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு, அவர்களுடைய கடமையைச் செய்வதிலே

70 கோடி மக்களுக்காக பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள் என்ற உணர்வோடு, அதன் காரணமாகத் தொடர்ந்து ஊக்கத்தோடு செயல்பட்டார்கள் என்பதை நாம் இந்த நேரத்தில் பாராட்டி நினைக்காமல் இருக்க முடியாது.

முன்னவர் அவர்கள் சொன்னார்கள். இந்திரா காந்தியினுடைய மறைவு—தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார் அழுத கண்ணீரும் அனைத்து—என்று வள்ளுவர் சொன்னது தொழுத கையுள்ளும் படையொடுங்கும் என்று சொன்னால்கூட, நண்பராக, உறவினராக, நெருங்கிப் பழகுபவராக இருப்போரையும் சேர்த்துக் குறிப்பிடுவது என்பது அதைக் காட்டும். இங்கே பாதுகாவலருடைய நெஞ்சத்திலே பகை ஒடுங்கும் என்று சொல்லக்கூடிய முறையிலே பாதுகாப்புப் பணியிலிருந்தவர்களாலேயே கொல்லப்பட்டது என்பது அந்தத் துக்கத்தை, அந்த அதிர்ச்சியை மிகுவிக்கின்ற ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் அரசியலிலே ஈடுபடுகிற போதே, ஒரு உறுதியை கொள்வதற்கு, பண்டித நேரு அவர்கள் ஒரு வழிகாட்டியாக, அறிவுரை கூறுபவராக விளங்கியதும். எதற்கும் அஞ்சாத துணிவோடு செயல்படவும், வீரத்தோடு செயல்படுகிறபோது ஏற்படுகிற விளைவுகள் எவையாக இருந்தாலும், அவற்றைத் தாங்கிக் கொள்ளலாம் என்று பண்டித நேரு அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் மூலமாக உணர்த்திய அந்த கருத்து அவர்களிடத்திலே இடம் பெற்றிருந்தது. ஒரு தலைவராக இருக்கவேண்டியவர்களுக்கு, ஒரு நாட்டை வழி நடத்திச் செல்லவேண்டியவர்க்கு வேண்டிய அடிப்படையான தகுதிகள், அவரிடம் தூங்காமை, கல்வி, துணிவுடமை இவை மூன்றும் சேர்ந்து இருந்தன. எனவே பலதரப்பட்ட மக்களுக்கிடையே அவர்கள் அனைவராலும் பாராட்டப்படக் கூடிய, வரவேற்கப் படக் கூடிய, பெரும் அளவுக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலையை அவர்கள் பெற்றிருந்தார்கள். மிகப் பெரிய பொறுப்பிலே இருந்த காரணத்தால், அதனுடைய விளைவுகளை எப்படிப்பட்ட திட்டமிடுவதன் மூலமாக சமாளிக்கமுடியும் என்ற எண்ணத்தில், சில நேரங்களில் யானைக்கும் அடி சறுக்கும் என்பதைப்போல, அவர்களுக்கும் அவரை மீறி, சில தவறுகளுக்கு, சில குறைபாடுகளுக்கு ஆளாக இடம் ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடி நிலையை அவர்கள் பிரகடனப்படுத்தியதன் காரணத்தால், அவர்கள் பெற்றிருந்த ஒரு பெரிய செல்வாக்கிற்கு எதிர்ப்பு ஏற்படக் கூடிய அளவிற்கு, ஒரு நிலைமைக்கு அவர்கள் ஆளானார்கள். ஆனாலும் அந்த நெருக்கடி நிலையைக் கைவிடுவதற்கும். மறுபடியும் அந்த ஜனநாயக முறையில் தன்னை மாற்றிக்கொள்ள திரும்ப முன் வந்தது என்பதை உலக வரலாற்றிலே எப்படியோ ஒரு சர்வாதிகார சூழ்நிலைக்கு ஆளான எந்த ஒரு தலைவரும் மறுபடியும் இறங்கி வராத ஒரு நிலையில், திருமதி இந்திரா காந்தி, எந்த நிலையிலேயும்



மக்களுக்கு தொண்டாற்றுவது என்று கொண்டிருந்த உணர்வின் காரணமாக, அடிப்படையான மக்கள்பற்றின் காரணமாக, அந்தத் தகுதியை அவர்கள் பெற்றிருந்தார்கள். எனவே செய்தது தவறு அல்லது பொருந்தாது என்று கருதியபோது அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, நாடு ஜனநாயகப் பாதையிலே நடை போட இடம் தந்ததன் காரணத்தால், மாற்றுக் கட்சி ஆட்சிக்கு வருவதையும், இந்திரா காந்தி அவர்கள் அந்தக் காலக் கட்டத்திலேயே ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் தோல்வி உற்று, குற்றம்சாட்டப்பட்டு சிறைத் தண்டனை அடைய வேண்டிய அளவுக்கு தொல்லைகள் வந்து ஒரு அரசியல்வாதி இத்தனைப்பெரிய கவலைகள் பட்டாலும் தொடர்ந்து நம்முடைய கடமையை செய்யவேண்டும் என்ற நிலையில் அவர் அதை தாங்கிக் கொண்டு எதிர் நீச்சல் போட்டு வெற்றிகரமாக 1980 ஆம் ஆண்டிலே ஆட்சிக்கு வருகிற ஒரு மாபெரும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார் என்பதை நாம் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்கவேண்டும். மிகப் பெரிய பாரம்பரியம் உள்ள குடும்பத்தில் பிறந்ததன் காரணமாக திருமதி இந்திரா காந்தி பிரதமராக ஆனார் என்று கருதுவதற்கு முழு அளவுக்கு இடம் இல்லை. ஏன் என்றால் நாட்டினுடைய நிலைமை மற்றவர்களுக்கு இடையில் இருந்த பல்வேறு விதமான போட்டி உணர்வுகளுக்கு இடையில் அவரைத் த்தான் ஏற்றவராக கருதச் செய்தது. ஆனாலும் அவர் எந்த இயக்கத்தினுடைய தலைவராக விளங்கினாரோ அந்த இயக்கத்திலே மாறுபாடு எற்பட்டு, பிளவு எற்பட்டு அந்த பிளவை வெற்றிகரமாக சமாளித்து தன்னுடைய ஆட்சியை நிலை நிறுத்தி அதன் மூலமாக மறுபடியும் நாட்டுக்கான பாதுகாப்புக் கடமையை, நாட்டினுடைய புகழை உயர்த்தக்கூடிய கடமையை நிறைவேற்றினார்கள்.

இந்திய நாட்டிலுள்ள வங்கிகளை எல்லாம் தேசிய மயமாக்கிய போது அந்த உயர்ந்த கொள்கை சமூக, சமதர்ம நோக்கத்தில் ஆர்வம் உடையவர்களால் எல்லாம் வரவேற்கப்பட்டது. மன்னர் மானியத்தை ஒழித்ததும் போற்றப்பட்டது. பங்களா தேஷ் விடுதலைக்கு உறுதுணையாக இருந்து அதை ஒரு தனி நாடாக உரிமை உள்ள நாடாக ஆக்கிய செயலும் என்றைக்கும் நினைவு கூறத் தக்கது.

சிறு சிறு நாடுகளாக விளங்கிய நாடுகளுக்கும், சிறுபான்மையான மக்களாக விளங்கும் மக்களுக்கு உறுதுணையான கருத்தைத் தான் அவர்கள் எப்போதும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கு எண்ணிப் பார்த்தால் இந்தியாவிலே வாழ்கிற பல்வேறு மொழி பேசுகிற மக்களுக்கும் கூட நீதி வழங்குவதற்கான முயற்சியில் அவர்கள் இருந்தார்கள். அவருடைய அருமைத் தந்தையான பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் இந்தி மொழி பேசாத மக்களுடைய மாநிலங்கள் விரும்புகிற காலம் வரையில் இந்தியாவினுடைய பொது ஆட்சி மொழியாக ஆங்கிலம் நீடிக்கும் என்று கொடுத்த வாக்குறுதியை

அரசியல் சட்டத்தில் இடம் பெற செய்கிற முயற்சி வெற்றி பெறாவிட்டாலும் கூட மறுபடியும், மறுபடியும் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அந்த உறுதி மொழியை பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் தந்த உறுதிமொழியை இந்த நாட்டுக்கு திரும்பத் திரும்ப வழங்கி உறுதிபடுத்தியிருக்கிறார்கள், என்பதை எண்ணுகிறபோது நன்றி தெரிவிக்கக் தோன்றுகிறது. தமிழ்நாட்டிலே வாழ்கிற மக்களுடைய உள்ளத்திலே எல்லாம் மிகப்பெரிய சுமையாக, வேதனையாக, கண்ணீரை அவ்வப்போது தோற்றுவிப்பதாக இருக்கிற இலங்கை தமிழர் வாழ்க்கை போராட்டத்தில், உரிமை போராட்டத்தில் இன்னும் சொல்லப் போனால், இலங்கையில் வாழ முடியுமா என்ற கேள்விக்குறிய போராட்டத்தில் இலங்கைத் தமிழர்கள் நாளும் படுகிற துன்பத்தை, வேதனையை திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறியத் தொடங்கிய அல்லது எண்ணிப்பார்க்கத் தொடங்கிய 1983 ஆம் ஆண்டிலிருந்து, தமிழர்கள் பால் அன்பும் இரக்கமும் கொண்டவர்களாகதான் அவர்கள் விளங்கினார்கள். ஏதோ ஒரு வகையில் எப்போதேனும் ஒரு வாய்ப்பு கிடைக்குமானால் அந்த தமிழர்களுடைய வாழ்வுக்கு வழி செய்யலாம் என்ற கருத்து உடையவர்களாக திருமதி இந்திரா காந்தி அவர்கள் விளங்கினார்கள் என்று நான் அறிந்த வரையில் உணருகிறேன்.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் மறைந்து விட்ட நிகழ்ச்சி இந்திய நாட்டுக்கு மிகப் பெரிய பேரிழப்பாக, இலங்கை வாழ் தமிழர்களுக்கு இருந்த அந்த பெரிய நம்பிக்கை மறைந்து விட்ட நிகழ்ச்சி ஒரு திடீர் வாய்ப்பில் திருமதி இந்திரா காந்தி மூலமாக இலங்கை வாழ் தமிழர்களை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை கூட ஓரளவுக்கு மங்கிப் போவதற்குக் காரணமாகி விட்டது. இலங்கை வாழ் தமிழர்கள் இந்தியநாட்டு மக்களைப் போலவே தான் ஒரு தாயை இழந்துவிட்ட மக்களைப் போல ஒரு உணர்வுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதை கூறி அதற்கு மேற்பட்ட அரசியல் விளக்கங்கள் தேவை இல்லை என்ற உணர்வோடு நான் குறிப்பிட விரும்புகிறேன். எல்லாவற்றையும் விட திருமதி இந்திரா காந்தி அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டு இருக்கிறார்கள் ''நின்று கொண்டே இறக்க நேரிட்டாலும் படுத்துக் கொண்டே சாக நேரிட்டாலும் அது இந்த நாட்டுக்காக என்ற நிலை இருக்குமானால் அதுவே எனக்கு மன நிறைவு அளிக்கக் கூடியது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது அவர்கள் இறந்து போனபோது நின்று கொண்டு கூட இறக்கவில்லை, நடந்து கொண்டே இறந்து போகிற ஒரு நிலைமைக்கு ஆளானார்கள். அண்ணல் மகாத்மா காந்தி அடிகள் அவர்கள் நடந்து கொண்டே இருக்கும்போது கொல்லப்பட்ட அந்த நிலைமையோடு பெருமளவுக்கு இது ஒத்து வருகிறது. இருந்தாலும் அந்த காந்தி அடிகள் வேறு. இந்த திருமதி இந்திரா காந்தி வேறு என்பது அவருடைய கால நிலை, அரசியல் பணிகள் அவைகள்





காரணமாக வேறுபடுகின்றன. அப்படி வேறுபடுவதை நாம் நினைவு கூறுவதற்குக் காரணம் ஒரு அரசியல்வாதியும் ராஜதந்திரியுமாக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அவர்கள் மிகப் பெரிய ஆற்றலை பெற்றவராக விளங்கினாலும் கூட காந்தி அடிகளுடைய அதே பாதையிலே நடப்பது என்பது இயலாத

(முற்பகல் 10-50)

காரியம்தான் என்றாலும், பல்வேறுவிதமான பிரச்னைகளுக்கிடையில் எப்படிப்பட்ட ஒரு பொது நோக்கை உருவாக்க முடியுமென்பதை அவர்கள் தனித்திருந்து சிந்தித்தார்கள். ஒரு மொழி உண்டு, தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்று அவர்கள் தனித்திருந்தார்கள். தன்னுடைய எண்ணத்தைத் தன் உள்ளத்திலேயே பல்வேறு முறை பரிசீலித்து, ஆராய்ந்து, அந்த எண்ணத்தினுடைய முழு விளைவாக ஒரு முடிவிற்கு வந்து, அப்படி எடுத்த அந்த முடிவை நிறைவேற்றுவதிலே துணிச்சலோடு —எண்ணித் துணிக கருமம் என்ற முறையில்—தானே எண்ணி துணிந்து செயல்படுத்தினார்கள். அப்படிச் செயல்படுத்துகின்ற பொழுது, எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாதவர்கள்.

1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையில் நாடாளுமன்றத்திலே நான் உறுப்பினராக இருந்த அந்த நேரத்தில், எப்படியோ ஓரிரு முறை சந்தித்து உரையாட, பல முறை காண, பலமுறை அவர் உரையைக் கேட்க நான் வாய்ப்பு பெற்றவன். அவர்களுடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்துடைய தலைவர்கள், நேர் எதிர் முகாமிலே விளங்கக் கூடிய தலைவர்கள் போன்ற அப்படிப்பட்டவர்களாலேகூட ஏதேனும் ஒருவகையில் பாராட்டப்படக் கூடியவராக, அவருடைய திறமைக்காக, உழைப்புக்காக, தியாகத்திற்காக. இன்னும் ஒருபடி மேலே சொன்னால், துணிச்சலோடு செயல்படுவதற்காகப் பல்வேறு காலகட்டங்களில் பாராட்டப்படக் கூடியவராக விளங்கியவர்கள்.

எனவே, அப்படிப்பட்ட தகுதி வாய்ந்த, மக்களுடைய அன்பைப் பெற்ற ஒரு பேராற்றலாக விளங்கிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய மறைவு என்பது—அதுவும் இப்படிப்பட்ட துக்ககரமான மறைவு என்பது—நம்முடைய ஆழ்ந்த உணர்வை வெளிப்படுத்தக் காரணமாகிறது. நம்முடைய ஆழ்ந்த இரங்கலை நாம் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த இரங்கலில் அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தில், ''எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் தன்மை கொண்ட சிறந்த திட்டங்கள் அனைத்தையும் செயல்முறைப்படுத்துவதுமே இந்தியாவிலுள்ள அனைவரின் நீங்காக் கடமையாகும்'' என்ற ஒரு தொடர் இருக்கிறது. அந்தத் தொடர் ஆழ்ந்த பொருளுடையது; அழுத்தமான கருத்துடையது; வேறுபாடுகளுக்கிடையிலே ஒற்றுமை காண்பதற்குத்

தூண்டுவது. இன்னும் சொல்லப்போனால், சுதந்திரம் கிடைப்
பதற்கு முன்னாலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்
எடுத்துச் சொன்ன மாநில சுயாட்சி உரிமைகளைப்பற்றி அரசிய
லிலே உள்ளவர்கள் சிந்தித்து, ஒற்றுமைக்கு வழி, ஒருமைப்பாடு
அல்ல; ஒற்றுமைக்கு வழி உரிமை வாழ்வு என்ற அந்த உணர்வை
வெளிப்படுத்துவதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் இவைகளையெல்லாம்
எண்ணிப்பார்த்து, ஒரு புதிய நோக்கத்தோடு, நீண்டகால
நோக்கோடு, தொலைவு நோக்கோடு, இந்தியாவினுடைய
எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பரிபக்குவத்தை, முழு
வளர்ச்சியை, முழு மனதைப் பெற்று வந்த அந்தக் கால
கட்டத்திலேதான் அவர்கள் மறைய நேரிட்டிருக்கிறது என்பது
நமக்கு ஏற்பட்ட இழப்பை அதிகப்படுத்துகிறது.

இந்தியாவினுடைய அமைதியைப் பாதுகாக்க நாடு வலிவாக
இருக்க வேண்டுமென்ற கருத்திலும், நாடு வலிவாக இருக்க
படை வலிவும் பெருகத்தான் வேண்டுமென்ற முடிவினையும்,
படை வலிவு பெருகுவது மட்டுமல்ல, இந்தியாவினுடைய
எல்லையாக அமைந்திருக்கின்ற தென் கடல் பகுதி முழுவதும்,
இந்துமாக்கடல் பகுதி முழுவதும் அமைதிப் பகுதியாக நிலவச்
செய்யப்பட வேண்டுமென்பதிலேயும், உலக நாடுகளிடையே
வல்லரசுகளுக்கிடையிலே ஏற்படக் கூடிய மோதல் உலகப்
போராக ஏற்படுவதற்கு வழி வகுக்காமல், நடுநிலை நாடுகள்,
அணிசேரா நாடுகள் இந்த உலகப் பெரும்போரைத் தடுப்பதற்
கான வல்லமையான கருத்தாக அமைய வேண்டுமென்பதிலேயும்:
அணு ஆயுதப் போரை உலகத்தில் தடுக்க வேண்டுமென்
பதிலேயும் மிகப் பெரிய அழுத்தமான குறிக்கோளோடு செயல்
பட்டார்கள். அப்படிப்பட்ட திருமதி இந்திரா காந்தி அவர்கள்
இந்தியாவிற்குப் பெருமை சேர்த்தார்கள்; ஒரு நம்பிக்கையை
வளர்த்தார்கள்; நாடு வாழ வாழ்கிற தலைவர் என்ற
நல்லெண்ணத்தை மக்களிடத்திலே தோற்றுவித்தார்கள்
எல்லோர் அன்புக்கும் உரியவராக விளங்கினார்கள்.

அவர்களை இழந்ததாலே நாம் ஒரு பெரும் தலைவரை
இழந்து நிற்கிறோம் என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக்
கழகத்தின் சார்பாக இந்த அவைக்குத் தெரிவித்து முன்னவரவர்
கள் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்,
வணக்கம்.

திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய அவைத்தலைவரவர்களே,
இந்திராகாந்தி அம்மையாரின் மரணத்தைப்பற்றி இங்கே பிரே
ரேபிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின்மீது மார்க்சிஸ்ட்கட்சி தன்னை
இணைத்துக்கொள்கிறது. இந்திரா காந்தி அம்மையாருடைய
படுகொலை அனைத்து உலக மக்களையும் பெரும் அதிர்ச்சிக்கு
உள்ளாக்கியது. இந்திய மக்கள் பிரத்தியேகமாகவே, என்
றைக்கும் மறக்க முடியாத பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கப்
பட்டார்கள்.





இப்படிப்பட்ட படுகொலை வன்மையான கண்டனத்திற்குரியது என்பது மட்டுமல்ல; இது காட்டுமிராண்டித்தனத்தை விடக் கேவலமான செய்கை. இப்படிப்பட்ட செய்கையால் எந்த அரசியலையும் திருத்த முடியாது. மாற்ற முடியாது,

ஒரு சமுதாய மாற்றத்திற்கு இப்படிப்பட்ட படுகொலைகள் எந்த விதத்திலும் ஒத்துவராது. அவற்றைக்கண்டனம் செய்வது மட்டுமல்ல. மக்கள் அனைவரும் சேர்ந்து நின்று எதிர்த்து தோற்கடிக்க வேண்டிய ஒன்றாகும். 74 கோடி மக்களைக் கொண்ட இந்த நாட்டின் பிரதமருக்கு இப்படிப்பட்ட நிலைமை வந்தால் மக்கள் மத்தியிலே எப்படிப்பட்ட பாதுகாப்பு உணர்ச்சி இருக்கும் என்பதை நாம் கவலையோடு கவனிக்க வேண்டிய அவசியம் உண்டு. இந்த படுகொலை நிகழ்ந்தது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பது மட்டுமல்ல, இந்தக் கொலையானது ஏதோ ஒரு ராணுவ வீரன் திருமதி இந்திரா காந்தியைக் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டுக் கொன்றான் என்பது மட்டுமோ அல்லது ஒரு சாதாரண தனி மனிதனுடைய மூளைக்குழப்பத்தால் ஏற்பட்டது என்பது மட்டுமோ அல்ல, இதுபற்றி மார்க்சிஸ்ட் கட்சி ஒரு உண்மையை தெளிவாக உலகத்திற்குக் கூறியுள்ளது. இந்தப் படுகொலைக்குப் பின்னால் ஏகாதிபத்திய வாதிகளினுடைய கொடுங்கரங்கள் இருக்கின்றன என்பதை இந்திய மக்கள் நிச்சயமாக உணர்ந்துகொள்ள வேண்டும்.

இங்கே நமது எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். பங்களாதேஷைக் கைப்பற்றிய பின் அதைக்கொடுத்தது, அதாவது நாம் பிடித்துக்கொண்ட நாட்டையே விட்டுக்கொடுக்க முன்வந்தது ஒரு பெரிய பண்பாடாகும். அத்தகைய பண்பாடு உடையவர்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மை நிகழ்ச்சி என்ன என்பதை உலகம் அறியும். இந்திய நாடு அங்கீகரித்த பங்களாதேஷ் 8 கோடிக்கு மிகுந்த மக்கள் தொகையினை கொண்டதாகும். அவர்களில் 36 இலட்சம் மக்களுக்கும் மேற்பட்டவர்கள் நடுத்தெருவில் நிறுத்தப்பட்டு இராணுவ வெறியர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதற்குப் பிறகு அந்தப் பங்களாதேஷ் மக்கள் எழுச்சிக்கொண்டு கோடிக்கணக்கான மக்கள் தெருவுக்கு வந்து பெரும் புரட்சிப் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கும் போது, அதாவது தங்களுடைய தொண்டர் படையாலும், இராணுவத்தின் ஒரு பகுதியையும் இணைத்துக்கொண்டு நாட்டை விடுவிக்கும்படியான போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தபோது பக்கத்திலே இருக்கின்ற 74 கோடி மக்களைக் கொண்ட இந்திய நாடு அதற்கு உதவி அளிக்க வேண்டும் என்று அந்த வகையில் ஒரு ஜனநாயகப் போராட்டத்திற்கு, விடுதலைப் போராட்டத்திற்கு, ஏகாதிபத்தியவாதிகளின் பின்பலத்தோடு அவர்கள் நசுக்கப்படுகின்ற வேலையில் அதனை எதிர்த்து நடத்துகின்ற போராட்டத்திற்கு இந்திய நாடு உதவியது. ஏகாதிபத்திய எதிர்ப்பு

பண்புகொண்ட இந்திய நாடு, தொண்டர் படையை அனுப்பி அவர்களுக்கு தற்காலிக அரசை ஏற்படுத்திக் கொடுத்த பிறகு அங்கே இராணுவத்தை அனுப்பி அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கொடுத்து கப்பல்களிலே வந்து நிற்கும் அன்னிய ஏகாதிபத்திய வாதிகளால் ஆபத்து ஏற்படக்கூடிய அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்தியாவிற்கே ஆபத்து ஏற்படக்கூடிய அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு நாம் உதவியைச் செய்தவர்களாவோம். அதுதான் சரியானதாகும். அப்படிப்பட்ட ஒரு உதவியைத்தான் அப்போது நாம் செய்தோம். அதிலே திருமதி இந்திராகாந்தி அவர்கள் உறுதியாக இருந்து செயல்பட்டார்கள். அது முக்கியமாக சரித்திரத்திலே நினைவு கூறவேண்டிய விஷயமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்கள் நடந்த நேரத்தில் பாரதியார் அவர்கள்

''ஆயிரம் உண்டு இங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?''

என்று குறிப்பிட்டதுபோல் நமது இந்திய நாடு வகுப்பு, ஜாதி, மதம், இனம், மொழி ஆகிய அத்தனை வேற்றுமைகளையும் மறந்து ஒற்றுமையை உருவாக்கி விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டது. அன்றைக்கு விடுதலைப் போராட்டம் நடந்த போது எப்படிப்பட்ட ஒற்றுமை இருந்ததோ அப்படிப்பட்ட ஒற்றுமை துரதிஷ்டவசமாக இன்றைக்கு நம்முடைய நாட்டிலே இல்லை. இது நாம் அத்தனை பேரும் வேதனையோடு கவனிக்க வேண்டிய விஷயமாகும். இன்று நாடு துண்டாடப்பட்டு விடுமோ என்ற பயங்கரமான நிலமை இருக்கின்றது. பஞ்சாப், தனியாகப் போகிறோம் என்று சொல்கிறார்கள். அஸ்ஸாம் மாநிலத்திலே கலகம்: அங்கே ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கிறார்கள். இப்படிப்பட்ட பலாத்கார சக்திகள், வகுப்பு வாத சக்திகள், ஜாதீய சக்திகள் தலைதூக்கி நம்முடைய ஒற்றுமைப் பாரம்பரியத்தையே சின்னாபின்னப்படுத்தக்கூடியதாக உள்ள அந்தப் போக்கை எதிர்த்து நின்று, ஒற்றுமைக்காக, நாட்டினுடைய உறுதிப்பாட்டிற்காகச் செயல்பட்டதில் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் முக்கியமான பங்காற்றி இருக்கிறார்கள்.

(முற்பகல் 11.00)

அரசியலிலும் தந்திரங்களிலும் என்ன பங்கு வகித்திருந்த போதிலும் இந்த நடவடிக்கைகளிலே பங்கெடுத்து நடந்ததினுடைய விளைவுதான் அந்த வகுப்புவாத வெறிக் கும்பலும், ஏகாதிபத்தியவாதிகளும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஒரு நாட்டில் அவர்களுடைய இஷ்டம் போல் உள்ளே புகுந்து படுகொலை செய்வதும் ஆக்கிரமிப்பு செய்வதும் திடீரென்று ஏற்படக் கூடிய விஷயம் அல்ல. அந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பில், உள்நாட்டில், அதற்குப் பக்குவமான நிலை ஏற்படும்போது அவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கை, வகுப்புவாத சக்திகள் தலை தூக்கி





ஆடக்கூடிய காலத்திலே, இந்த ஏகாதிபத்தியவாதிகளுடைய சக்தியும் சேர்ந்து இந்திராகாந்தி அம்மையாருடைய படுகொலைக்கு வழி வகுத்தது என்பது மிகமிக வேதனைக்குரிய விஷயம். இந்த நிலைமையை நாம் மனதிலே கொள்ள வேண்டும். ஆகவே, இந்த இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பு என்று நாம் மீண்டும் சொல்கிறோம்.

இந்திய நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, நாட்டினுடைய ஒற்றுமை சக்திகளைப் பிளவுபடுத்தக் கூடிய பிளவு சக்திகள் தலைதூக்கி வருகின்ற சமயத்தில் இப்படி 74 கோடி மக்களைக் கொண்ட இந்திய நாட்டினுடைய தலைமை அமைச்சர் கொலை செய்யப்பட்டது பல நாடுகளுக்கு இழப்பாகும். உலகத்திலே பல நாடுகளில் பெண்மணி தலைமை அமைச்சராகக் கிடையாது. ஒன்றிரண்டு நாடுகளில்தான் பெண்மணிகள் தலைமை அமைச்சராக இருந்து நாட்டை ஆளுகின்றனர். அப்படிப்பட்ட ஒருதலைமை அமைச்சர் கொலை செய்யப்படுகிறார்.

உலகத்திலே 100 நாடுகளுக்கு மேல் ஹிட்லருடைய பாசிசத்தை எதிர்த்து போராடி, விடுதலை பெற்று, அந்த நாடுகள் முழு வளர்ச்சி அடைய வேண்டிய போராட்டத்திலே தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சுதந்திரம் பெற்ற பிறகு, பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கவும், நாட்டை வளர்க்கவும், விரும்புகிற சமுதாய மாற்றம் கொண்டு வருவதற்கும் ஒரு போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட 100-க்கும் மேற்பட்ட நாடுகளோடு 74 கோடி மக்களைக் கொண்ட நமது நாடும் இணைந்து நிற்பது அந்த மக்களுக்கெல்லாம் பேராதரவாக, ஒரு பெரும் பாலமாக அமையும். ஆனால், ஏகாதிபத்தியவாதிகளுக்கு இது பெரும் கசப்பு. அப்படிப்பட்ட நிலையில். இந்திராகாந்தி அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து அணி சேரா நாடுகள் மாநாட்டை டெல்லியிலே நடத்திய நேரத்தில், அந்த அணி சேரா நாடுகள் பேரியக்கத்திற்குத் தலைவராக இருந்தது ஒரு முக்கியமான சரித்திர நிகழ்ச்சியாகும். இதையெல்லாம் கண்ட ஏகாதிபத்தியவாதிகள் இந்திய நாட்டை எந்த விதத்தில் சீர்குலைக்க வேண்டும், பிளவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு, ஆரம்பத்தில் இருந்து அடிமட்டத்திலிருந்து செயற்பட்டுக் கொண்டு வந்தார்கள். அந்த நடவடிக்கைகளிலே இந்தப் படுகொலைக்குப் பின்னால் ஒரு சதி செய்து, தேர்ந்தெடுத்த சமயத்தில் அவர்கள் இதைச் செய்தார்கள். அவர்களுடைய கருவிகள் தான் சுட்டுக்கொன்றவர்கள். அந்தச் சதியினுடைய கருவிதான் இது என்ற உண்மையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட். கட்சி உலகம் முழுவதற்கும் எடுத்துக்கூறியிருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் இந்த அணி சேரா நாட்டு மக்களுக்கும் உலகத்தலைவர்களுக்கும் இந்திய நாட்டு மக்களுக்கும் உலக மக்களுக்கும் அத்தனை பேருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்படியான இந்தப்

படுகொலைக்காக நாம் ஆழமாக வருத்தப்படுகிறோம். அவர்களது இழப்பு ஈடுசெய்ய முடியாத, மாற்ற முடியாத ஒரு இழப்பாக இருக்கிறது. ஆகவே, நமது முன்னவர் அவர்கள் மொழிந்த தீர்மானத்தோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தன்னை இணைத்துக்கொள்கிறது. இந்த தீர்மானத்தை வழிமொழிந்து எங்களுடைய இரங்கலையும் ஆழ்ந்த அனுதாபத்தையும், இந்திராகாந்தியினுடைய குடும்பத்திற்கும் அவருடைய புதல்வராக இருக்கிற பிரதம அமைச்சர் திரு. இராஜீவ்காந்தி அவர்களுக்கும் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் மறைவு குறித்து அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த அனுதாப தீர்மானத்தை ஜனதாக் கட்சியின் சார்பாக நான் வழி மொழிகிறேன். ஆசியஜோதி நேருஜியின் தவப்புதல்வியும், பெரும் தலைவர் காமராஜின் அன்புக்கு பாத்திரமாகவும் இருந்த அவர்கள் 1966 ஆம் ஆண்டு பாரத பிரதமராக ஆக்கப்பட்டார்கள். ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை பாரத பிரதமராக பணியாற்றக் கூடிய வாய்ப்பு பெற்ற மாண்புமிகு இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் துரோகிகளின், வன்முறையாளர்களின் துப்பாக்கிக்கு பலியானதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன். இந்தச் சம்பவத்தைக் கண்டு நாடே, உலகமே துக்கத்தில் ஆழ்ந்ததை நாம் எல்லாம் அறிவோம். எந்த பிரச்சினைக்கும் வன்முறைதான் தீர்வு என்பது முடியாத காரியம் என்பதை காந்தியவாதிகளாகிய நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும், அவரது மன உறுதியையும் விடா முயற்சியையும் பாராட்டுகிறோம். வேலியே பயிரை மேய்ந்த கதையாக, அவரது பாதுகாவலர்களே அவரைச் சுட்டுக்கொன்றது இந்த நாட்டுக்கு பெருத்த அவமானம்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது புதல்வர், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் ஜனதாக் கட்சியின் சார்பில் எங்களது ஆழ்ந்த வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் படுகொலைக்கு ஆளானதைக் குறித்து அவை முன்னவர் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி அதை வழிமொழிகிறேன்.

மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்களுக்கு முன்னால் அவருடைய தந்தை ஜவஹர்லால் நேரு அவர்கள் நமது நாட்டில் கூட்டு சேராக் கொள்கையை உருவாக்கி ஒரு





அடித்தளத்தைப் படைத்து வைத்தார்கள். அதற்குப் பின்னால் மறைந்த இந்திரா காந்தி அவர்கள் கூட்டு சேராக் கொள்கையிலிருந்து நடுநிலைமைக் கொள்கயை உருவாக்கினார். உலக ஏகாதிபத்தியவாதிகளால் நமது நாட்டுக்கு, பாகிஸ்தான் மூலமாகவோ அல்லது இடைக்காலத்தில் நமது ஆதரவால் உண்டான பங்களாதேஷ் மூலமாகவோ அல்லது பல்வேறு முனைகளில் இருந்து நமது நாட்டுக்கு அச்சுறுத்தலையும் ஒரு யுத்தத்தையும் உருவாக்க முனைகிறபோதெல்லாம், மறைந்த பிரதமர் அவர்கள் வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியாக நின்று, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்திருக்கிறார்கள். அதன் மூலமாக நம்முடைய பெருமையை உலக நாடுகளிடையே உயர்த்தியிருக்கிறார்கள்.

அதேபோல இன்றைக்கு நம் நாட்டைச் சுற்றியுள்ள வங்காள விரிகுடாக் கடலிலிருந்து, அருகாமையில் இருக்கிற திரிகோணமலை இன்னும் இலங்கையைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதியிலிருந்தும் இந்தியநாடு தினந்தோறும் அமெக்க ஏகாதிபத்தியவாதிகளால் அச்சுறுத்தப்பட்டு வருகிறது. நமது நாட்டிலே, ஏகாதிபத்தியவாதிகள் மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் நாட்டை துண்டாடக்கூடிய அளவிற்கு தொடர்ந்து ஒரு நிலைமை உருவாக்கி வரக்கூடிய இந்த நேரத்தில் நமது நாட்டுக்கு 15 ஆண்டுக்காலம் பிரதமராக இருந்து, வெளிநாட்டுக் கொள்கையில் உறுதியாக நின்று இந்த நாட்டினுடைய லட்சியத்தையும் கொள்கையையும் வெளி உலகத்திற்கு தெரிவித்து, அதை உயர்த்தக்கூடிய அளவிற்கு பாடுபட்டு வந்த பாரதப் பிரதமர் அவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதை நாம் நினைக்கும்போது மனம் வேதனையாக இருக்கிறது.

நமது நாடு சுதந்திரம் பெற்ற அடுத்த ஆண்டே அண்ணல் காந்தி அடிகள் மதவாதிகளால் படுகொலை செய்யப்பட்டார்கள். அடுத்து இந்திய நாட்டினுடைய பிரதமராக இருந்த மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அவரது இல்லத்திலே நடந்துகொண்டிருக்கிறபோது அதுவும் அவர்கள் யாரை நம்பிக்கையாக, காவலாளியாக வைத்திருந்தார்களோ, அவர்களே சுட்டுக் கொலை செய்யக்கூடிய அளவிற்கு இந்த நாட்டில் கொடுமை நடந்திருக்கிறது என்று சொன்னால் ஏதோ தெய்வாதீனமாக காவலாளிகள் சுட்டுவிட்டார்கள் என்று நினைக்க முடியாது.

(முற்பகல் 11-10)

இந்த நாட்டிலுள்ள மதத்தைப் பயன்படுத்தி மகாத்மா காந்தியையே சுட்டுத் தள்ளியது வெளிநாட்டு சக்தி. அதேபோல இந்த சமுதாயத்திலே உள்ள சமய வாதிகளை, மதவாதிகளை, சந்தர்ப்பவாதிகளை, பிரிவினை சண்டாளர்களை பயன்படுத்தி இந்த நாட்டிலே ஏற்பட்ட பஞ்சாப் கலவரம், அஸ்ஸாம் பிரச்னை போன்ற பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். அதேபாலநம் நாட்டின் எல்லையில் உள்ளது இலங்கைத் தீவு. இலே ஙந

அரசாங்கத்தையும், அதன் தலைவர் ஜெயவர்த்தனேயையும் பயன்படுத்தி, அதிலும் நாம் விட்டுக் கொடுத்த கச்சைத் தீவையே பயன்படுத்தி, ஏகாதிபத்திய அரசுகள், இன்றைக்கு இந்தியாவிலும், தமிழகத்திலும் ஒரு போர் நிலையையே உருவாக்கியிருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில், வெளிநாட்டுக் கொள்கையில் சிறந்து விளங்கிய, ஏகாத்திபத்திய எதிர்ப்பில் ஈடுபட்டு, அதிலும் குறிப்பாக சோவியத் யூனியனின் ஆதரவை மேலும் மேலும் பெற்று உலக அரங்கத்திலே, உலக மக்கள் மத்தியிலே இந்தியாவினுடைய கொள்கைகளை நிலைநாட்டக்கூடிய அளவுக்கு பணியாற்றி வந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் மறைவு, நம் நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

உலகம் அமைதியோடு வாழவேண்டும், உலக சமாதானம் ஓங்க வேண்டும் என்று பாடுபட்ட நமது இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் மறைவு ஈடு செய்ய முடியாதது. மூன்றாவது உலக யுத்தத்தை தடுப்பதில் ஒரு முன்னணி சக்தியாக விளங்கிய மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய இரங்கல் தீர்மானத்தோடு, எங்கள் கட்சியையும் இணைத்து. மறைந்த பிரதமர் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, அவரை இழந்து நிற்கிற, இப்போது இந்தியாவின் தலைமை அமைச்சராக வந்திருக்கக் கூடிய அவருடைய மகனாருக்கும் எங்களுடைய அனுதாபத்தையும், ஆதரவையும் தெரிவித்து, இந்த தீர்மானத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியையும் இணைத்து அமர்கிறேன்.

*திரு. ஆ.கா.அ. அப்துல் சமத் : அவையினுடைய மாண்புமிகு தலைவர் அவர்களே, நமமுடைய அவையின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தோடும், மாண்புமிகு உறுப்பினர்கள் வெளிப்படுத்திய உணர்வோடும் நானும், எங்களுடைய கட்சியின் சார்பாக எங்களுடைய உணர்வுகளை இணைத்துக் கொள்கிறேன்.

இந்தியாவினுடைய பிரதமராக நீண்ட நெடுங்காலம் சேவை ஆற்றி, இந்தியா என்றால் இந்திரா என்று உணரக்கூடிய அளவுக்கு இந்த நாட்டினுடைய வரலாற்றோடு ஒன்றித்து விட்ட அந்த அம்மையாருடைய பிரிவு குறித்து, இந்த சபை தெரிவித்திருக்கக்கூடிய உள்ளார்ந்த வேதனையையும், வெளிப்படுத்தியிருக்கக்கூடிய பரிவு உணர்ச்சியையும் தமிழக மக்களுடைய உள்ளார்ந்த கிடக்கையாகவே வெளிப்படுத்தப்படுகிறது என்றே நான் உணர்கிறேன்.

அந்த அம்மையாார் தலைமை தாங்கிய அரசியல் கட்சியிலே நான் உறுப்பினராக இருந்தது இல்லை என்றாலும் கூட, அவரோடு அணுக்கமாக பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு இருந்திருக்கிறது. அவர்களைப் போல, இந்த நாட்டிலே, இந்த நாட்டினுடைய தலைமையை ஏற்று நடத்துவதற்குள்ள பயிற்சி பெற்ற ஒருவர் இருந்திருக்க முடியாது என்றே நான் கருதுகிறேன். நம்முடைய நாட்டினுடைய சுதந்திரத்திற்காக மூத்த தலைவர்கள் எல்லாம் விடுதலை கோஷத்தை எழுப்பியதையும் அவர் கேட்டிருக்





கிறார். நாடு விடுதலை பெற்ற போது, இந்த நாட்டினுடைய பெருந்தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இசைத்த இந்த நாட்டினுடைய விடுதலை கீதத்தையும் அவர் கேட்டிருக்கிறார். இந்த நாட்டினுடைய விடுதலைக்கே ஊறு நேரக்கூடிய வகையில் அன்னிய நாடுகள் போர் தொடுத்த காலத்தில் எழுப்பப்பட்ட போர் முரசையும் அவர் கேட்டிருக்கிறார். அந்த படையெடுப்புகளையெல்லாம் முறியடித்துவிட்டு, வெற்றி பெற்ற படை அணிவகுத்து வந்த அந்தக் காட்சியையும் அவர் கண்டிருக்கிறார். சொல்லப் போனால், அவர் இளமைக்காலத்திலே அவருடைய விளையாட்டுத் திடலாக விளங்கியது சுதந்திர போராட்டத் தலைவர்கள் கூடி விவாதித்த மாநாடுகள்தான். இந்த நாட்டினுடைய எல்லா தேசிய தலைவர்களின் தோள்களும் அவர் ஏறி விளையாடிய ஊஞ்சல்களாக பயன்பட்டிருக்கின்றன என்பதை அவருடைய வரலாற்றிலே காண்கின்றோம். ஆகவேதான் நாட்டினுடைய தந்தையாக பாராட்டப்பட்ட மகாத்மா காந்தியினுடைய மறைவிற்கு பிறகு இந்திரா அம்மையாருடைய மறைவைப்பற்றி உலகமே கையறுநிலை பாடி நின்ற காட்சியை நாம் கண்டோம். தந்தை ஆட்சித் தலைவராக அமர்ந்து இருந்த அதே நேரத்தில், அந்த தந்தையினுடைய மகளாக விளங்கிய இந்திரா அவர்கள், ஆளும் கட்சியினுடைய அரசியல் தலைவராக விளங்கிய பாங்கினை இந்த நாடு கண்டிருக்கிறது.

அவருடைய குடும்பமே அவர் சொல்லி வந்த கொள்கைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி வந்திருக்கிறது. எனக்கு முன்னாலே பேசியவர்கள் குறிப்பிட்டது போல, அவர் மணந்து கொண்டது ஒரு பார்சி திருமகனை: தன்னுடைய மருமகளாக வரித்து கொண்டது ஒரு கிறுஸ்துவ திருமகளை: இன்னொரு மருமகளாக தேர்ந்தெடுத்துக் கொண்டது ஒரு சீக்கிய பெருமகளை. இப்படி அவருடைய குடும்பமே எந்தவிதமான வேறுபாடும் பாராட்டாத ஒரு பரந்த மனப்பான்மையிலே அமைந்திருப்பதை பார்க்கிறோம். அவரைப் பற்றி என்னுடைய கட்சியினுடைய கண்ணோட்டத்தில் நோக்கும்போது, நாடு விடுதலை பெறுவதற்கு முன்னாலே காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் ஒருங்கிணைந்து பாடுபட்ட பல கட்டங்கள் இந்திய நாட்டினுடைய விடுதலை போராட்டத்திலே இருந்திருக்கிறது. ஆனால், விடுதலை பெற்ற இந்தியாவிலே முதன் முதலாக காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் உடன்பாடு கொண்டது அந்த அம்மையார் காங்கிரசுனுடைய தலைவராக இருந்த காலத்தில் தான் நிகழ்ந்த நிகழ்ச்சியாகும். அவர்களை நான் காணும்போதெல்லாம் அவர்களிடத்திலே எனக்கு என்னமோ ஒரு முஸ்லீம் தாயை காண்பது போலத்தான் உணர்வு இருந்திருக்கிறது. ஏனென்றால், இஸ்லாமிய கலாச்சாரத்தையும் அவர் நன்கு உணர்ந்தவராக, அதிலே ஊறி திளைத்தவராக விளங்கியிருக்கிறார். அவர் ஒரு நல்ல மரபை பேணி வந்தார். முஸ்லீம்கள் எல்லாம் நோன்பு பிடிக்கக்கூடிய ரம்ஸான் மாதத்தில், ஏதாவது ஒரு நாள் நோன்பு திறக்கக்கூடிய

நேரத்தில் பாராளுமன்றத்தினுடைய முஸ்லீம் உறுப்பினர்களையும், டெல்லியில் இருக்ககூடிய பிரமுகர்களையும் அழைத்து விருந்து அளிப்பது வழக்கம். அப்படி விருந்து அளிக்க வரும்போது எங்களுடைய தலைவர் காய்தே மில்லத் அவர்களும், நாங்களும் சென்றிருந்தபோது, அந்த நோன்பு திறந்த உடனே குறித்த காலத்தில் தொழுகை நடத்துவது எங்களுடைய மரபு. தொழுகையை பேணுவதற்கு எங்களுடைய தலைவர் அவர்கள் விருந்தினை உண்டுவிட்டு அவசரம் அவசரமாக வெளியேற போனபோது அந்த அம்மையார் குறுக்கே வந்து மறித்து, நீங்கள் தொழுவதற்கும் நான் இங்கேயே ஏற்பாடு செய்திருக்கிறேன் என்று சொன்னபோது நாங்கள் எல்லாம் திகைத்து விட்டோம். அந்த அளவுக்கு விருந்து அளித்து மகிழ்ந்து மற்றவர்கள் பேணக்கூடிய கலாச்சாரத்திற்கும் மத வழிப்பாட்டிற்கும் மதிப்பு அளித்த, மாண்புமிகு பிரதமருடைய மறைவை நினைக்கும்போது எங்களுடைய வேதனை அதிகமாகிறது. பத்திரிகை நிருபர் ஒருவர் 'நீங்கள் செல்லும் இடத்தில்

(முற்பகல் 11-20)

எல்லாம் குடை பிடித்து வருகிறார்களே' என்று கேட்டதற்கு 'சூரிய ஒளி என் உடம்பில் பட்டுவிட்டால் ஒரு விதமான புள்ளிகள் தோன்றுகின்றன: அதற்காகத்தான் குடை பிடிக்கப்படுகிறது' என்று அந்த அம்மையார் சொன்னார்கள். அவர்களுடைய உடலுக்கு தீ மூட்டப்பட்ட காட்சியை நான் கண்டபோது, அவர் ஏற்கனவே சொன்ன அந்த வார்த்தைகள் என் நினைவிற்கு வந்தன. அதற்கு மேலும் அந்தக் காட்சியை நான் காண சகிக்காமல் அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டேன். சா ாரணமாக உலகத்தில் ஒருவர் மறைந்தபோது, உலகத்தினுடைய ஆட்சித் தலைவர்கள் தான் கூடியிருப்பதை நாம் கண்டிருக்கிறோம், காண்கிறோம். ஆனால் இந்திரா காந்தி அம்மையார் மறைவிற்கு நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளின் ஆட்சித்தலைவர் மாத்திரமல்லாமல், அந்தந்த நாடுகளில் செயல்படக் கூடிய எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட தங்களுடைய இரங்கலை தெரிவிக்க வந்திருந்தகாட்சியைக் கண்டபோது உலகத்தினுடைய ஒட்டுமொத்தமான ஒரு பரிவை அவர்களுடைய மறைவு ஏற்படுத்தியது என்பதைக் காட்டிற்று.

பாராளுமன்றத்திலே அவர் நடந்துகொண்ட முறைகளை எண்ணிப் பார்க்கிறபோது நேருஜி அவர்களுக்குப் பிறகு ஒரு சிறந்த ஜனநாயகவாதியாக அவர் எப்படியெல்லாம் செயல்பட்டிருக்கிறார்கள் என்பதை எங்களாலே நினைக்க முடிகிறது. எதிர்க்கட்சித் தலைவர்கள் அவரை காரசாரமாக தாக்கினாலும் கூட, முகத்தில் எந்த ஒரு உணர்வையும் காட்டாமல் அவைகளை எல்லாம் ஆழ்ந்து, அமைதியாக கேட்டிருந்து விட்டு, பிறகு பதிலளிக்கும்போது, அனைத்திற்கும் ஒட்டுமொத்தமாக அவர் பதிலளிப்பதை தன்னுடைய வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளை எல்லாம் சொல்லவிடாமல் தடுக்கின்ற முறையை கட்சியின் சார்பிலே மேற்





கொண்டாலும்கூட, அவர்களையெல்லாம் அடக்கி, என்ன கருத்தாக இருந்தாலும், பாராளுமன்றத்தினுடைய அவையில் அவை வெளிப்படட்டும் என்று அதற்கு வழிவகை செய்து தந்து, ஒரு ஜனநாயக வாதியாக விளங்கியிருக்கிறார்கள். அவருடைய மறைவு ஈடு செய்ய முடியாதது, அனைவருக்கும் தாங்கொணாத வேதனையைத் தந்தது. இந்த வேதனையை, முன்னவர் மொழிந்த தீர்மானம் முழுமையாக எடுத்துக்காட்டுகிறது. அதை நானும் என்னுடைய கட்சியின் சார்பாக வழி மொழிந்து அமைகிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** சபைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், மறைந்து மக்களின் நெஞ்சங்களிலே நிறைந்திருக்கின்ற இந்திரா காந்தி அவர்களைப் பற்றி இங்கு கொடுத்த இரங்கல் தீர்மானம், அதன்மூலம் வெளியிடப்பட்ட உணர்வுகளில், காந்தி காமராஜ் தேசீய காங்கிரஸ் தன்னை இணைத்துக்கொள்கின்ற வகையில் நான் என்னுடைய கருத்துக்களை அஞ்சலியாக இங்கே வைக்க இருக்கின்றேன்.

உலகத்தில் மிகப் பெரிய ஜனநாயக நாட்டினுடைய தலைவி, உலக மக்களிலே ஐந்தில் ஒரு பகுதி மக்களை ஆண்டு கொண்டிருந்த ஒரு தலைவி. அணிசேரா நாடுகளுடைய தலைவி என்கின்ற வகையிலே உலகத்திலே இருக்கின்ற மக்களின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்குத் தலைவி, சில வெறியர்களுடைய குண்டுகளுக்கு பலியாகி விட்டார்.

பொன்னகை போட்டாலே புண்பட்டுப் போகும் என்று புன்னகை தவிர வேறு ஒன்றும் அணியாதிருந்த அந்தப் பெண்மணி, பூச்செண்டு பட்டாலே துவண்டுவிடுகின்ற அந்தப் பொன்மேனி, இந்தியக் குண்டு பட்டு, இந்த நாட்டிலே வீழ்ந்தது, நம்முடைய நெஞ்சத்திலே விழுந்த பேரிடியாகும். குண்டுபட்டு இந்திரா வீழ்ந்துவிட்டால், இந்தியா துண்டுபட்டுப்போகும் என்று எண்ணியவர்கள் கூட உண்டு. ஆனால் அவர் இறப்பதற்கு முந்தைய தினத்திலேகூட, என்னுடைய ஒவ்வொரு சொட்டு ரத்தமும் இந்தியத் திருநாட்டை வலிவுள்ளதாகவும், பொலிவுள்ளதாகவும், ஆக்குவதற்கே நான் செலவிடுவேன் என்று சொன்ன அந்தச் சொல், அந்த ரத்தத்தின் மேல் இட்ட ஆணையாக அல்ல, இந்திராவின் ரத்தத்தின் மீது இட்ட ஆணையல்ல: இந்தியரின் ரத்தத்தின் மீது இட்ட ஆணையாக இருக்கிறது. அன்று வெடித்த குண்டு, அந்தச் சத்தம் நின்று விடலாம், அன்று வடித்த ரத்தம் கூட காய்ந்து விடலாம்: ஆனால் அன்று துடித்த நமது சித்தங்கள் இன்னும் தம் ஆடலை நிறுத்தவில்லை, இன்னும் அமைதி அடையவில்லை. எவ்வளவு பெரிய துன்பம் நேர்ந்துவிட்டது என்று ஏங்காத நெஞ்சங்கள் இல்லை. இந்த நாட்டில் என்னென்ன நன்மைகள் வேண்டும் என்று அவர் விரும்பினாரோ, அத்தனையும் செய்ய முனைந்தார் பலவற்றிலே வெற்றி பெற்றார்.

ஆனால் அவர் இன்னும் பல நாட்கள் வாழ்ந்து இருந்து இந்த நாட்டுக்கு மிகச் சிறந்த ஒரு தலைமையினை அளித்து இருக்க முடியும் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்பட்டு இருந்த நேரத்திலே அவர் மறைந்துவிட்டார் என்ற கொடிய செய்தி நமக்கு வந்தது. முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல இது ஒரு சாராரால் செய்யப்பட்ட காரியமா ? உலகத்திலே உள்ள வேறு சிலரும் இதிலே பங்கு கொண்டிருக்கிறார்களா ? என்ற வினா எழாமல் இல்லை. ஒரு குறிப்பிட்டவர் மட்டும்தான் இதை செய்தார் என்று சொல்லி அமைதி அடைந்து விடுவதா. இந்த நாட்டிலே இருக்கிற பாதுகாப்புகள் சிலர் பலரால் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டது அவருடைய சாதிலே விழ. ஒரு நாள் கோபமுற்று அவர் சொன்னது வெளியே தெரிந்த காரணத்தாலே தான் அவர் தீர்த்துக்கட்டப்பட்டார் என்று எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கும் இந்த நிலையிலே நாட்டினுடைய பாதுகாப்பு, அவருடைய பாதுகாப்பு என்று வருகிற நேரத்திலே தன்னைவிட தாய்நாட்டை நேசித்த அந்த அம்மையார், தன்னையே ஈந்து இனிமேலாவது பாதுகாத்து வாருங்கள் என்ற ஓர் எச்சரிக்கை மணியை அடித்துவிட்டு ஓய்ந்தாரா ?

இன்னும் ஒரு வகையிலே சிந்தித்துப் பார்த்தால் அவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்ட நேரத்திலே தொலைபேசியிலே செய்திகளை தெரிந்து விட்டால் மட்டும் போதாது தொலைதூரத்திலே இருந்தாலும் தானே நேரில் சென்று பார்க்கவேண்டும் என்று வந்து ஆறுதல் சொன்னதோடு, நீங்கள் எத்தனையோ சோதனைகளையும் போராட்டங்களையும் சந்தித்து வெற்றி பெற்றீர்கள். இந்தப் போராட்டத்திலும் வெற்றிபெறுவீர்கள் என்று அந்த தாய் வாய் மொழியாக சொன்னது ஆசீர்வாதமாகவே ஆயிற்றா ? முதல்வர் அவர்கள் என்னை வாழ வைக்கின்ற தாய்மார்களே என்று ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்வார்கள், அவருடைய தாயையே தெய்வமாக வணங்குவார்கள், தாயையே மூகாம்பிகை வடிவத்திலே பார்த்தேன் என்று—தாய் தாய் என்று—ஒவ்வொரு இடமும் இறைவனை துதித்துக்கொண்டிருந்தார்கள். அதனுடைய பிரதி பிம்பமாக அவர் வந்து அந்த வரத்தை கொடுத்தது போலவே நமக்கு தோன்றுவதை எண்ணிப்பார்க்கிற நேரத்திலே உண்மையிலேயே அவர் எந்த அளவுக்கு தமிழகத்தின் மீதும் தமிழகத்தை ஆண்டுகொண்டிருக்கிற தலைவர் மீதும் பற்று வைத்திருந்தார் என்பது தெரிகிறது.

ஆனால் அந்த தலைவர் இந்திரா காந்தி அம்மையாருடைய உதவியோடு வெளிநாடு சென்று திரும்பியபோது அந்த அம்மையார் மாண்டுவிட்டார் என்ற செய்தியை கேட்ட முதல்வர் உள்ளம் துடித்ததுபோல் எத்தனையோ உள்ளங்கள் துடித்தன. அவர் இந்த நாட்டிலே இந்திய தாயினுடைய பிரதிநிதியாகவே காட்சி அளித்தார். பஞ்சாபிற்கு செல்கிறபோது பஞ்சாப் உடை உடுப்பது மட்டும் அல்ல, குஜராத்திற்கு செல்கிறபோது தான் ஒரு





குஜராத்திபோல் உடை அணிந்துகொள்வது மட்டும் அல்ல, எந்த இடத்திற்கு போனாலும் அந்த உடையை அணிந்து கொள்வது, அங்கிருக்கிற மக்களும் நானும் வேறு அன்று, நடை உடை பாவனையிலே நான் எல்லோருக்கும் பொது என்று காட்டுகிற வகையிலே நடந்துகொண்டார். தமிழகத்திற்கு வந்தால் அல்லது வேறு மாநிலங்களுக்குச் சென்றால் அந்த அந்த மொழிகளிலேயே அவர் இறுதியிலே நன்றியோ, வணக்கமோ சொல்கிற நேரத்திலே, தான் எல்லா மொழியினருக்கும் சொந்தம் என்று காட்டிக்கொண்டார்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியது போல் எந்த மதமாக இருந்தாலும் அது சம்மதமே என்று சொல்கிற காந்தியினுடைய வடிவிலே வந்த ஒரு பாரம்பரியமாக இருக்கின்ற காரணத்தால் காந்தி மகான் எப்படி பிரார்த்தனை கூட்டங்களிலே ஒரு பக்கத்திலே பைபிளையும் ஒரு பக்கத்திலே திருக்குரானையும் இன்னொரு பக்கத்திலே பகவத் கீதையையும் வைத்துக்கொண்டு பிரார்த்தனைகள் நடத்தினாரோ அதுபோல் அவர் தன்னுடைய வீட்டிலேயும் சரி, தன்னுடைய பழக்க வழக்கங்களிலேயும் சரி, அனைத்து மதங்களையும் சமமாக பாவித்தார் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் தன் கணவனாக பார்சியை ஏற்றுக்கொண்டது. இத்தாலிய நாட்டு கிருத்துவ பெண்மணியை தன்னுடைய மருமகளாக ஏற்றுக்கொண்டது, பஞ்சாபைச் சேர்ந்த ஒரு பெண்மணியை தன்னுடைய இன்னொரு மருமகளாக ஏற்றுக்கொண்டது. அதைப் போலவே இந்தியாவிலே உள்ள எந்த பகுதியும் தன்னுடைய சொந்தப் பகுதி தான் என்று காட்டுகிற வகையில் தான் பிறந்த உத்திரப்பிரதேசம் மட்டும் அல்ல, தெற்கே இருந்துகொண்டு இருக்கிற கர்நாடகமா, ஆந்திரமா எங்கேயும் நின்று நான் போட்டியிட்டு வெல்வேன் என்று சொன்னது, இந்த மண்ணின் மகள் நான், எந்த இடத்திலும் நான் வெற்றிபெறுவது மட்டும் அல்ல, எந்த இடத்திற்கும் நான் பிரதிநிதி. நான் இந்த நாட்டினுடைய குடிமகள், முடிசூட்டியிருந்தாலும் இந்த நாட்டினுடைய குடிமகள் என்று காட்டுகிற வகையிலே தேசியவாதியாக சர்வதேச வாதியாக திகழ்ந்தார்.

விடுதலைப் பெற்று இன்று ஆட்சி அமைத்துக்கொண்டு இருக்கிற நாடுகளோடு மட்டும் தொடர்பு என்பது அல்ல, முன்னேற வேண்டும் என்று துடித்துக்கொண்டிருக்கிற நாடுகளோடும் விடுதலைப் பெறவேண்டும் என்று விரும்பிக் கொண்டிருக்கிற பாலஸ்தீனியர்க்கு இந்திரா காந்தி அவர்களுடைய ஆதரவைத் தெரிவித்தார்கள் என்று சொன்னால் மகாத்மா காந்திஅடிகள் உலக மக்களுடைய விடுதலையே என்னுடைய லட்சியம் என்றும் அதனுடைய ஒரு பகுதியாக இந்தியா இருக்கிற காரணத்தால் இந்திய விடுதலைக்கு நான் பாடுபடுகிறேன் என்றும் சொன்னதைப் போலவே உலகத்திலே எங்கு எங்கு அடிமைத் தளை இருக்கிறதோ எங்கு எங்கு அடக்கு முறைகள் இருக்கிறதோ அங்கெல்லாம் அடிமைத்தளையை அடித்து நொறுக்கி தூள் ஆக்க வேண்டும் என்ற ஆர்வமும் ஆவேசமும் இந்திராகாந்தி அவர்

களின் நெஞ்சிலே நிரந்தரமாக குடியிருந்தது. அதனாலே பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நடத்திக்கொண்டு இருக்கிறவர்கள்—ஒரு அரசு என்று சொல்கிற வகையில் ஒரு நாட்டினை பெற முடியாதவர்கள் அதைப்பெறவேண்டும் என்ற முனைப்பிலே இருந்துகொண்டு இருக்கிற நேரத்திலே இந்திரா காந்தியினுடைய ஆதரவைப் பெற்றார்கள். இந்திரா காந்தியினுடைய சடலம் தீயிடப்பட்ட நேரத்திலே அவர்களும் வந்ததை என்னைப்போன்றவர்கள் காணுகிற நிலைமையிலே இருந்தோம்.

(முற்பகல் 11-30)

வங்காள தேசத்தில் ஒரு புரட்சி கிளம்பியபோது வங்காள தேசத்து மக்களுடைய அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்ட நேரத்திலே அங்கிருக்கிற மாபெரும் தலைவன், மற்றவர்கள் எல்லாம் கொடுமைக்கு உள்ளானபோது அங்கு இருக்கிற விடுதலை போராடிகள் முக்தி வாகினி என்ற பெயரில் அந்த விடுதலைப் புலிகள் போராடிக்கொண்டு இருந்த நேரத்திலே ராவல்பிண்டியிலே இருந்து ஆண்டுகொண்டு இருக்கிறவர்கள் கேட்கட்டுமே ராணுவத்தை, ராவல்பிண்டியிலே இருந்து ஆட்சி செய்துகொண்டு இருக்கிறவர்கள் கேட்கட்டுமே நம்முடைய உதவியை என்று காத்திராமல் அகதிகள் வந்து குவிந்துகொண்டு இருக்கிறார்கள் லட்சக்கணக்கிலே. அங்கிருக்கிற மக்களுடைய ரத்தம் ஓடுகிறது ஆறாக. இந்த சூழ்நிலையிலே நான் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டேன் என்று அந்த விடுதலைப் போராடிகளாகிய மூக்தி வாகினிக்கு உதவி செய்ததன் மூலம் படையை அனுப்பியதன் மூலம் அந்த நாட்டு மக்களுடைய விடுதலைக்கு அவர் பாடுபட்டார்.

இன்னொரு நாட்டை ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் அதே நேரத்திலே அங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருந்துகொண்டு இருக்கிறவர்களின் அடக்குமுறையின் காரணத்தால் அவர்கள் மற்றவர்களை நசுக்குவார்களேயனால் நான் பக்கத்தில் இருக்கிற நாடு, பார்த்துக்கொண்டு இருக்கமாட்டேன் என்று சவால் விட்டு இவர் சொன்னது இனிமேல் வருகின்ற காலத்திற்கு வழிகாட்டி குறிப்பாக அவர் சொல்லிவிட்டு போய் இருக்கிறாரோ என்றுதான் நம்மைப் போன்றவர்களுக்கு எல்லாம் தெரிகிறது. இந்தச் சூழ்நிலையில் நாம் என்ன செய்யவேண்டும் என்று அதற்கு பிறகு ஆளுகிறவர்களுக்கு ஒரு குறிப்பு கொடுத்துவிட்டு போய் இருக்கிறாரோ என்ற முறையிலே அவர்களுடைய செயல்முறை அமைந்து இருக்கிறது.

நம்மை வாழவைத்தார் என்று சொல்வதை விட நம்மை பெருமைப்பட வைத்தார் என்று சொல்வது இன்னும் மிக முக்கியமான ஒன்று ஆகும். இந்திரா எழுந்துநின்றால் உலகத்தின் உடல் எல்லாம் கண்களாகி அவரைப்பார்த்தது. அவர் எழுந்து நின்று பேசினார் என்றால் உலகத்தின் உடல் எல்லாம் காதாகி அதனை கேட்டது. அவர் சுடப்பட்டு கீழே விழுந்தபோது



உலகத்தின் உடல் எல்லாம் வாயாகி அழுதது. அப்படி அழுத காரணத்தால் உலகத்திலே எவ்வளவு பெரிய தலைவியை நாம் இழந்தோம் என்பதனை மீண்டும் மீண்டும் உணர முடிகிறது.

இந்த நேரத்திலே ஒன்றினை நாம் சிந்தித்துப் பார்க்கின்றபோது ஒன்று தெரிகிறது. தாய் அழ பிறந்த குழந்தை, இறக்கின்ற நேரத்திலே தரணி அழ இறந்தது என்று சொன்னால் உலகத்தில் உயர்ந்துவிட்டது என்று பொருள். அதுபோலவே கமலா நேரு பிரசவ வேதனையால் அழுகிறபோது பிறந்த அந்த குழந்தை இந்திரா பிரியதரிசினி என்று சொல்கிற அந்த குழந்தை இறந்தபொழுது தரணியே தாயாக அழுதது. தன் புதல்வியை இழந்துவிட்டதை போல் அழுதது என்று சொன்னால் அந்த அம்மையாருடைய உயரம் எவ்வளவு பெரியது என்பதை நம்மால் சிந்திக்க முடிகிறது. அதற்கு பின்னாலேதான் இந்த நாட்டிலே ஜனநாயகத்தை தொடர்ந்து காப்பாற்றுவதற்காக என்ன செய்யவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டு இருக்கிற நேரத்திலே தனது இளைய தோள்களிலே பழைய பாரதத்தை சுமப்பதற்கு முன்வந்தார் திரு. ராஜீவ் காந்தி. நமக்கே இந்திரா காந்தியினுடைய மறைவு நெஞ்சிலே எழுதிய அந்த சோக கீதங்கள் மறையவே இல்லை. அவர் சுடப்பட்டார் என்ற செய்தியை கேட்டு அழுத கண்ணீர் வடிந்து இருந்தாலும் அழுத இதயங்கள் இன்னும் ஆறுதல் அடையவில்லை. மறைந்த கவிஞர் திரு. கண்ணதாசன் ஒரு இடத்திலே மிக அழகாக சொன்னார், அவலச்சுவையோடு சொல்வார். நேரு பெருமகனார் மறைந்த நேரத்திலே அவர் பாடியது இன்று அவருடைய புதல்விக்கும் பொருந்துவதாக அமைந்து இருக்கிறது. இந்திரா காந்தியை பார்த்து பார்த்து பழகியவர்களுக்கு எல்லாம் அவர் இன்று இல்லாது இருக்கிற ஒரு நிலையை பார்க்கிறபோது கவிஞர் கண்ணதாசன் சொன்னது நினைவுக்கு வருகிறது. நேரு மறைந்தபோது சொன்னார்.

" சீரிய நெற்றி எங்கே ?
சிவந்த நல் இதழ்கள் எங்கே ?
கூரிய விழிகள் எங்கே ?
குறுநகையும் போனது எங்கே ?
நேரிய பார்வை எங்கே ?
நிமிர்ந்த நல் நடைதான் எங்கே ?
நிலவெலாம் வணங்கும் தோற்றம்
நெருப்பினில் விழுந்தது இங்கே
பச்சைக்குழந்தை பாலுக்கு தவித்திருக்க
பெற்றவளை அந்த பெருமான் அழைத்துவிட்டான்
வானத்தில் வல்லூறு வட்டமிடும் வேளையிலே
வானத்தில் வல்லரசு வல்லூறு வட்டமிடும்
வேளையிலே
சேய்க் கிளியைக் கலங்கவிட்டு
தாய்க் கிளியைக் கொன்றுவிட்டான் "

என்று சேயாக இருக்கும் 70 கோடி மக்களையும் கலங்கவிட்டு தாயாக இருந்த அந்தக் கிளியை கொன்றுவிட்டான் ஒரு பாவி என்று சொல்கிற செய்தி நம் காதுகளிலே விழுந்த நேரத்திலே இந்தியா காப்பாற்றப்படவேண்டும் என்று நினைத்தோம். உலகத்திலே இருக்கிற தலைவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறோம். ஆபிரகாம்லிங்கன் சுடப்பட்டது உண்மை. ஆனால் அவர் ஒரு பெரு முயற்சியிலே இருந்தபோது அவர் சுடப்பட்டு இருந்தால் என்ன ஆகியிருக்கும். தென் அமெரிக்காவுக்கும் வட அமெரிக்காவுக்கும் ஏற்கெனவே சிவில்வார் போன்று உள்நாட்டு போர் வந்து அந்த நாடே பிரிந்து இருக்கும் என்று சொன்னோம். அப்படி ஒரு ஆபத்து வந்திருந்தால் கூட—வந்திருக்கக் கூடாது —உலகத்திற்கே அது ஒரு பெரிய பேரிழப்பாக இருந்திருக்கும். அப்படி வந்திருந்தால் கூட கற்பனையிலே சொல்கிறேன் வடக்கு தெற்கு என்று இரண்டாகத்தான் பிரிந்து இருக்கும். ஆனால் பஞ்சாப் பிரச்சினைகள் எழுந்தபோது இந்திரா காந்தியினுடைய முயற்சிகள் வெற்றி பெறாமல் இருந்திருக்குமானால் இந்தியா சுக்கு நூறாகி போயிருக்குமோ என்று உலக நோக்கர்கள் எல்லாம் எண்ணி எண்ணி வேதனைப் படுகிறார்கள். அந்த அளவிற்கு அந்தப்பெரும் நிகழ்ச்சியினைச் சமாளித்து இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைக் காத்த பெருமைக்குரியவராக இந்திரா இருந்தார். இந்திராவுக்கும் நேருவுக்கும் இருக்கிற ஒருமைப்பாடு பற்றியும், அவர்களுடைய ஒற்றுமையைப் பற்றியும் எல்லோரும் சுட்டிக்காட்டி விட்ட காரணத்தினாலே அதிகம் நான் தொட விரும்பவில்லை என்று சொன்னாலும் கூட, ஒன்றை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நேரு பெருமகன் மறைந்ததற்குப் பின்னால் அவர் எழுதியிருந்த சில காகிதங்களை அப்படியும் புரட்டிப்பார்த்தார். அதிலே ஒரு காகிதம், அமெரிக்கக் கவிஞன் ராபட்ஸ் ப்ராஸ்ட் எழுதிய கவிதைஅங்கே இருந்தது. அவர் அதை ஒருயிடத்திலே பொரித்து வைத்திருந்தார். ராபர்ட்ஸ் ப்ராஸ்ட் எழுதிய அந்தக் கவிதையிலே என்ன சொல்லியிருந்தான் என்று சொன்னால், காடுகளைப் பற்றிச் சொல்லியிருந்தான். அந்தக் காடுகள் எப்படியிருந்தன என்பதனை, இருண்டு அடர்ந்த காடு, அழகுடன திகழ்கிறது, தூரம் மிகவே கடக்கவேண்டும். நேரு எழுதுகிறார். ராபர்ஸ்ட் ப்ராஸ்ட்டி-னுடைய கவிதை அவருக்குப் பொருத்தமாக இருந்த காரணத்தாலே எழுதுகிறார், இருண்டு அடர்ந்த காடு, காடு அழகுடன் திகழ்கிறது. தூரம் மிகவே கடக்கவேண்டும். துயில் கொள்ளும் முன்னே தூரம் மிகவே நடக்கவேண்டும். அடர்ந்து இருண்ட காடு அழகுடன் திகழ்கிறது என்று அவர் எழுதியிருந்தார் ஒரு குறிப்பிலே.

அதைப்போலவே, இந்திரா இறந்ததற்குப் பிறகு ஒரு கவிஞனின் கவிதையை நேரு எழுதியிருந்தாரே அந்த அமெரிக்க நாட்டு 12 வயதுப் பெண்ணுக்கு ஒரு கடிதம் போய்ச் சேர்ந்தது. அந்தக் கடிதத்தை எழுதியது இந்திரா காந்தி. இந்திரா காந்தியினுடைய கடிதம் அந்தப்பெண்ணுக்குச் சேர்ந்தபொழுது அந்தப்





பெண் அந்தக் கடிதத்தைப் படிக்கிறாள். அந்தப் பெண் என்றோ ஒரு நாள் இந்திரா காந்திக்கு எழுதிய ஒரு கடிதத்திற்கு பதிலாக அது அமைந்திருந்தது. உங்களுக்கு எந்தக் கவிதை பிடிக்குமென்று அந்தப் பெண்மணி கேட்க, எத்தகைய கவிதை பிடிக்குமென்று அந்தப் பெண்மணி கேட்க. இந்திரா காந்தி பதில் எழுதியிருந்தார், அந்தப் பதில் எதுவாக இருந்தது என்று சொன்னால், அவர் சாந்திநிகேதனத்திலே பயின்றாரே அந்தச் சாந்திநிகேதனத்தை நடத்தினாரே ரவீந்தரநாத தாகூர், அவருடைய கவிதை, 'தனிமையில் நட' என்று சொல்லுகிற கவிதை. அந்தத் 'தனிமையில் நட' என்று சொல்லுகின்ற வங்காளிக் கவிதையை ஆங் லத்தில் எத்தனையோ பேர் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இந்திரா காந்தி எழுதுகிறார் அந்த 12 வயது சிறுமிக்கு. அம்மா ஆங்கிலத்தில் எத்தனையோ பேர் மொழி பெயர்த்திருந்தாலும் அதனுடைய உள்ளுணர்வுகளையெல்லாம் அந்தக் கவிதையிலே ஆங்கிலத்திலே அவர்கள் பிடித்துவிட்டார்கள், படம் பிடித்துவிட்டார்கள், அதனுடைய உள்ளுணர்வுகளை வெளியே கொண்டுவந்து விட்டார்கள் என்று நாம் நம்பமுடியாத காரணத்தினாலே ஆங்காங்கே ஓரளவிற்கு அந்தக் கவிதையை மொழி பெயர்த்து உனக்கு ஆங்கிலத்திலே அனுப்புகிறேன் என்று எழுதியிருக்கிறார்கள். ரவீந்திரநாத் தாகூர் வங்காளக் கவிதை ஏற்கனவே ஆங்கிலத்திலே எழுதியது போதாது, தான் எழுத வேண்டுமென்று விரும்பி எழுதினார். காரணம் ஆழுப் பொருளும் வெளியே வரவில்லை என்று. அவர் ஆங்கிலத்திலே எழுதிய பதிலை அந்தக் கவிதையை நாம் நம் தமிழிலே சொல்வதாக இருந்தால் முழுப்பொருளையும் சொல்ல முடியாது என்று தெரியும். ஆனால் முனைந்து பார்த்தால், அவர் என்ன சொன்னார் என்று சொன்னால், ''உன் அறைகூவலை ஏற்று யாரும் வரவில்லை என்றால், தனிமையில் நட, அச்சத்தால் நடுங்கி பிறர் சுவருக்குள்ளே முடங்கிவிட்டால் நீ தனித்து நின்று பேசு, உள்ளம் திறந்து பேசு, நீ அடர்ந்த காட்டு வழியைக் கடக்கும்பொழுது அவர்கள் உன்னைக் கைவிட்டு விலகிப் போனால் அந்த முள் நிறைந்த பாதையிலேஉறுதியோடு நட; இரத்தம் வடிய வடிய அப்பாதையிலே உன் பாதம் நடக்கட்டும். ஆம் தனியாக, தனியாகவே நட, புயல் துளைத்த இராப்பொழுதில் விளக்கைத் தூக்கிப்பிடித்து வெளிச்சம் காட்டி மற்றவர்கள் துணியாவிடில் வலியினை மின்னல் ஒளியினில் சேர்த்து இதயத்தில் சூடேற்று, நீயே நீயே வழிகாட்டு ஒளி விளக்காகிவிடு'' என்றுஅவரே மொழிபெயர்த்ததைப்போல இன்று இந்திரா காந்தி அம்மையைப் பார்த்துச் சொல்கிறோம். அம்மா, நீயே நீயே வழிகாட்டும் ஒளி விளக்காகிவிடு, எங்களுக்கு தொடர்ந்து வழிகாட்டு, விண்ணிலிருந்து இந்த மண்ணை நல்வழி காட்டு என்று சொல்லி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் சார்பில் என் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மறைந்த இந்தியாவினுடைய

[1985 மார்ச் 9

தலைமை அமைச்சர் மாண்புமிகு இந்திராகாந்தி அவர்களுடைய நினைவாக அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்தப் பேரவையினுடைய மண்டபத்திலே விரைவிலே திறந்து வைக்கின்ற நிகழ்ச்சி நடைபெறும் என்பதை அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களும் தெரிவித்த இரங்கல் கருத்துக்களுடன் என் இரங்கலையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

1966-ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 18 ஆண்டுகாலம் இந்திய நாட்டின் பிரதம அமைச்சராக விளங்கியவர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள். இந்திய மக்களின் அன்புத் தாயாகவும், ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கும் அன்புக் கரமாகவும் அவர் விளங்கினார். இந்தியாவில் மட்டுமின்றி பல அயல்நாட்டு மக்களும் அவரை அறிந்து மிகவும் பாராட்டி அவரது ஆலோசனைகளுக்கு மதிப்பளித்து அவரது கருத்துக்களை மிக ஆர்வமுடன் விரும்பிக் கேட்டனர்.

இங்கு கூறப்பட்டதுபோல் காமன்வெல்த் நாடுகளின் சிறந்த பிரதமராகவும், கூட்டுச்சேரா அணியின தலைவியாகவும் மிகச் சிறப்புடன் விளங்கினார்கள்.

நான் முதலில் அவர்களை நேரில் சந்தித்து 1975 ஆம் ஆண்டு. அவர்கள் அப்போது சென்னைக்கு வந்திருந்த சமயம். நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு குழுவை அனுப்பினார்கள். அந்தக் குழுவோடு அவர்களுடைய தலைமையில் நானும் ஒருவனாகச் சென்றிருந்தேன். அப்பொழுது தான் அவர்களுக்கு நேரில் அறிமுகப் படுத்தப்பட்டேன். அப்போது நாங்கள் தெரிவித்த கருத்துக்களை மிக உன்னிப்புடன் அவர்கள் கேட்டு விவரங்களை அறிந்து கொள்ள முயற்சித்தது அவர் பிரச்னைகளை எப்படி அணுக முயற்சிக்கிறார் என்பதைக் காட்டியது.

(முற்பகல் 11·40)

இந்திய மக்களின் இணையற்ற தலைவியும், உலக அரங்கில் இந்தியாவின் பெருமையை உயர்த்த அயராது பாடுபட்டவரும், தாய் நாட்டுக்குத் தொண்டு செய்வதையே தன் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவருமான ஒரு தலைவியை நாம் இழந்துவிட்டோம். அவரது மறைவினால் வருந்தும் அவரது புதல்வர், இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கும் மற்றும் அவரது குடும்பத்தினருக்கும் இப்பேரவையில் அனுதாபத்தையும் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 9]

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும்வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன.

நாளை மறுநாள் திங்கட்கிழமை (11-3-1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 11-41 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 4. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

24. மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பதினோறு வண்டிகளுக்கு செலுத்தத் தக்க மோட்டார் வாகனவரியில் சலுகை அளிப்பது தொடர்பாக உள்துறையின் (போக்குவரத்து-VII) 28-9-1984-ஆம் நாளிட்ட 2231-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை[தமிழ்நாடு1974-ஆம் ஆண்டு மோட்டார் வாகனவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பேற்றது]

25. சேலம் "அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான எக்ஸ்பிரஸ் சர்வீஸ் மற்றும் புறநகர் சர்வீஸ் வண்டிகளுக்கான வரி வித்தியாசமான இருநூறு சதவீத தண்டத் தொகை பாக்கி தொடர்பாக உள்துறையின் (போக்குவரத்து-I) 30-7-1984-ஆம் நாளிட்ட 1682-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆண்டு மோட்டார் வாகனவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

26. கேரளாவைச் சேர்ந்த லாரி எண் கே. எல். டி. 3853 செலுத்தத்தக்க வரிபாக்கித் தொடர்பாக உள்துறையின்(போக்குவரத்து-I) 27-10-1984 ஆம் நாளிட்ட 2446 -ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வாகனவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

27. பரம்பிக்குளம் ஆலியார் மின்திட்ட கண்காணிப்புப் பொறியாளரைச் சார்ந்த வண்டி எண் எம்.டி.பி. 908 செலுத்தத்தக்க வரி மற்றும் தண்டத்தொகை தொடர்பாக உள்துறையின் (போக்குவரத்து-I) 20-8-1984-அம் நாளிட்ட 1821 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகனவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

28, நெல்லூர் ரெட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு. ஐ. தசரதராம ரெட்டி அவர்களுக்குச் சொந்தமான வண்டி எண் எம். பி. என். 3089 செலுத்தத்தக்க வரிபாக்கி தொடர்பாக உள்துறையின் (போக்குவரத்து-I) 20-8-1984 ஆம் நாளிட்ட 1922 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வாகன வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

29. சென்னை கிண்டியிலுள்ள குதிரைப் பந்தய மைதானத்தில் 'இன்டர்வென்யூ' பந்தயத்திற்கு ஏனைய மையங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயத்திற்கு வரி விதிப்பது குறித்து வணிகவரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 28-9-1984 ஆம் நாளிட்ட 1099-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1935-ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

30. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளில் சில கிராமங்களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதியாக இணைப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 4-12-1984-ஆம் நாளிட்ட 2143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள்கள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

31. அனைத்து வகையிலான வாழைப் பழங்களுக்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை அறிவிக்கப் பெற்ற பகுதியாக அங்கீகரிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 4-12-1984 ஆம் நாளிட்ட 2142 ஆம் எண் அரசாணையில் வெளியிட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]

32. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு, ஆய்த்தீர்வைத் துறையின் 22-6-1984 ஆம் நாளிட்ட



737 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

33. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 17-7-1984 ஆம் நாளிட்ட 770 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

34. தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு மரக்கட்டைகள் இடமாறு பாட்டு விதிகள் தமிழ்நாடு, நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டதை கருத்திற் கொண்டு நீலகிரி மாவட்டத்தை பொறுத்தமட்டில் திருத்தி அமைக்கப்பட்ட மரக்கட்டைகள் இடமாறுபாட்டு விதிகளை நீக்கம் செய்வது குறித்து வன-மீனளத்துறையின் 4-4-1984 ஆம் நாளிட்ட 440 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 64-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

35. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 17-7-1984 ஆம் நாளிட்ட 771 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

36. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 12-7-1984 ஆம் நாளிட்ட 749 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

37. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 12-6-1984 ஆம் நாளிட்ட 1133 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

38. தமிழ்நாட்டின் ஊரக பகுதிகளில் பயன்படுத்தப்படும் ஜீப் நிலை ஊர்திகளுக்கு விதிக்கப்படும் வரியில் சலுகை அளிப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 21-9-1984 ஆம் நாளிட்ட 2157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

39. 1978லிருந்து 1981 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட முப்பத்திமூன்று உரிமங்களுக்கு குறைந்த அளவு வரிவிதிப்பின் மூலம் வருவாயில் ஏற்படும் நட்டத்தினை முறைப்படுத்துவது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 27-10-1984 ஆம் நாளிட்ட 2445 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

40. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (போக்குவரத்து-VII) துறையின் 12-6-1984 ஆம் நாளிட்ட 1249 ஆம் எண் அரசாணையில் வெளியிடுப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

41. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறையின் 8-10-1984 ஆம் நாளிட்ட 1374 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட அறிக்கை தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

42. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்கல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 24-11-1984 ஆம் நாளிட்ட 1615 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

43. சென்னையிலுள்ள இந்திய தொழில் மீளகட்டுமானக் கழகத்தினை வங்கியாக அறிவிப்பது குறித்து கூட்டுறவுத் துறையின் 15-9-1984 ஆம் நாளிட்ட 396 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]



